

தனிநிறுவனமாக சென்னை?

பக்கம் 18


# உதயன்

சுடர்: 29 கதிர்: 303 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 9, வியாழன் 25.09.2014

stay connected with uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=


தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# ஈழத் தமிழரின் விடிவுக்காக தமிழகத்தில் நேற்று பேரணி

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்

சென்னை, செப். 25
ஈழத் தமிழர் விடிவுக்காக இந்திய மத்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தமிழகத்தின் எழும்பூரில் நேற்று மாபெரும் தமிழர் நீதிப் பேரணி நடத்தப்பட்டது. அதில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.
'இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஐ.நா. சபையில் பேச அனுமதிக்காதே!', 'இந்திய அரசே! ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகவிசாரணைக்குழுவை இங்குள்ள ஈழத் தமிழரிடம் விசாரணை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்!', 'சிங்களப் படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுத்து

22 ஆம் பக்கம் பார்க்க



## அரிசி, நெல் இருப்பை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.25
அரிசி மற்றும் நெல் இருப்பு விவரங்களை சமர்ப்பிக்க தவறும் மில் உரிமையாளர்கள் மற்றும் அரிசி விற்பனை முகவர்களிடம் இருக்கும் அரிசி மூடைகள் அரசுடமை ஆக்கப்படும் என்று எச்சரித்துள்ளார் யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலர் தனசேகரம் வசந்தசேகரன்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
அரிசி மற்றும் நெல் மூடைகளின் இருப்பு விவரத்தை கடந்த 12 ஆம் திகதிக்கு முன்

22 ஆம் பக்கம் பார்க்க

## கமலேஷ் – மஹிந்த நியூயோர்க்கில் சந்திப்பு

நியூயோர்க், செப். 25
பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டின் சீராக்கம் தொடர்பாக, பொதுநலவாய அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மாவை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க்கில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
அத்துடன் நேபாள பிரதமர் சுசில் கொய்ரால மற்றும் கொலம்பிய ஜனாதிபதி ஜுவான் மனுவெல் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க் சென்றுள்ளார்.
ஐ.நா பொதுச் சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலநிலை தொடர்பான மாநாட்டில்

22 ஆம் பக்கம் பார்க்க

## கிராமத்துக்கு 1 மில்லியன் வேலைத் திட்டம் கிடப்பில்

### ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிப்போகும் அபாயம்

யாழ்ப்பாணம், செப். 25
கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்துக்கு யாழ். மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும், அதற்குரிய வேலைத் திட்டங்கள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த வருட இறுதிக்குள் வேலைத் திட்டங்கள் முடிவுறுத்தப்படாவிட்டால் ஒதுக்கப்பட்ட 247 மில்லியன் ரூபா நிதியும் திரும்பிச் செல்லும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.
2008 ஆம் ஆண்டளவில், கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் வடக்கு மாகாணத்தில் குறித்த திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த ஆண்டே முதன் முறையாக வடக்கில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
யாழ்.மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இவற்றுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா வீதம் வழங்குவதாக இருந்தால் 435 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 247 மில்லியன் ரூபாவே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிதியை யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் சமனாகப் பகிர்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த நிதிக்குரிய வேலைத் திட்டங்கள், ஒவ்வொரு பிர

22 ஆம் பக்கம் பார்க்க

# பொதுவேட்பாளர் திட்டம் ஐ.தே.கவால் பிசுபிசுப்பு



கொழும்பு, செப்.25
ஜனாதிபதித் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் போட்டியிடுவார் என அக்கட்சி அறிவித்துள்ளதையடுத்து, பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி பிசுபிசுத்துள்ளது.
ஜனாதிபதித் தேர்தலில் ஆளுந்தரப்பு சார்பில் களமிறங்கும் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்த வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து கூட்டுப் பொறிமுறையை கையாளவேண்டும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலை யில், எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளமையா னது கொழும்பு அரசியலில் சமநிலை யற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது.
ஊவா மாகாணத் தேர்தலின் பின்னர் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றங்கள், அந்தக் கட்சியின் அறிவிப்புகள் மற்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் அறிவிப்புகள் எதிரணிக் கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள விரிசலை அம்பலப்படுத்தியுள் ளது. இந்த விரிச லானது ஆளும் கூட்டணிக்கு சாத கமாக அமையப்போகிறது என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
அடுத்த வருடம் ஜனவரி மாதம்

22 ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலாத்துறை தொடர்பான மாநாடு சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப். 25
வடக்கு மாகாண சுற்றுலாத் துறையில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் பொருட்டு, சுற்றுலாத்துறை தொடர்பான அனுபவமுள்ள நூற்றுக்கு மேற்பட்ட வளவாளர்கள் பங்கெடுக்கும் மாநாடு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.
வடக்கு மாகாண சபையின் சுற்றுலாத்துறையும், வடக்கு மாகாண சுற்றுலாத் துறை ஒன்றியமும் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளன. வடக்கு மாகாணத்தில்

22 ஆம் பக்கம் பார்க்க



ஊவாவில் இடப்பட்டது மாற்றத்தின் அத்திபாரம்

பக்கம் 14

## வடக்கின் முத்திரை வரி வருமானத்தை கொடுக்க மறுக்கிறது கொழும்பு அரசு

### அதனால் அபிவிருத்திப் பணிகளும் முடக்கம் என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 25
கடந்த மூன்று வருடங்களில் 540மில்லியன்ரூபாகொழும்பு அரசுக்கு முத்திரை வரி வருமானமாக யாழ்.மாவட்டத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ளபோதும், அந்தக் கொடுப்பனவுகள் யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
காணி உரிமை மாற்றங்கள் செய்யப்படும்போது முத்திரை வரி செலுத்தப்படுகின்றது. யாழ்.மாவட்டத்தில் மாதமொன்றுக்கு சராசரியாக 15 மில்லியன் ரூபா முத்திரை வரியாக கிடைக்கின்றது. இந்த முத்திரை வரி, கொழும்பு அரசுக்கே அனுப்பப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாண சபையால், முத்திரை வரி கைமாற்றல் நியதிச் சட்டம் தற்போதே நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், இனி வருங் காலங்களில் குறித்த நிதி நேரடியாக மாகாண சபை

22 ஆம் பக்கம் பார்க்க

## தடம்புரண்டது யாழ்தேவி



யாழ்ப்பாணம், செப்.25
பளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த யாழ்தேவி ரயில் மஹாவ பிரதேசத்தில் தடம்புரண்டுள்ளது. இந்த விபத்து நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் நடந்துள்ளது என்று ரயில் வேக் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. பயணிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, யாழ்தேவியில் பயணித்த பயணிகள், கொழும்பு பயணிப்பதற்கான கட்டணத்தை முன்னர் செலுத்தியிருந்தபோதும், அவர்களுக்கு அந்தத் தொகை மீள வழங்கப்படவில்லை என்றும், வேறு ரயிலில் ஏற்றப்பட்டு பயணத்தை மேற்கொண்டபோதும், அவர்களிடம் இருந்து அதற்கான கட்டணம் பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## இவ்வாண்டு இறுதிக்குள் ஆனையிறவில் உப்பு உற்பத்தி

### பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.25
இந்த வருட இறுதியில் இருந்து ஆனையிறவு உப்பளத்தில் இருந்து உப்பைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் முதற்கட்டமாக 330 ஏக்கர் பரப்பு புனரமைக்கப்பட்டுள்ளது. அத்னூடாக 20 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பைப் பெறக்கூடியதாக இருக்கும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞானசோதி.
அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"1990 ஆம் ஆண்டளவில் இருந்து ஆனையிறவு உப்பளத்தில் உப்பு உற்பத்தி நட

22 ஆம் பக்கம் பார்க்க

# விஷக்கிருமிகள்

## பல சேனாவும், கோத்தபாயவும்

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகின்றார்

கொழும்பு, செப்.25

பொது பல சேனா அமைப்பினரும், கோத்தபாய ராஜபக்ஷவும் அரசை அழிக்கும் விஷக் கிருமிகளாக இருக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

"அரசின் பின்னடைவுகளுக்கு பொதுபலசேனா அமைப்பினரும் அந்த அமைப்பின் போஷகரும், பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ஷவுமே காரணம். சிறுபான்மை மக்களுக்கு எதிராக பொதுபல சேனா தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இதே போன்று நகர்ப் புறங்களில் வாழும் சிறுபான்மை மக்களை அங்கிருந்து அகற்றும் முயற்சியில் பாதுகாப்புச் செயலாளர் இறங்கியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் ஐ.தே.க.வுக்கு சாதகமாக அமைந்துள்ளன. ஜே.வி.பி. யின் மீள் எழுச்சி குறித்தும் அரசு கவனம் செலுத்த வேண்டும். இந்த நிலையிலிருந்து மீள வேண்டுமாயின் அரச நிர்வாகம், பொருளாதார கொள்கைகள் என்பவற்றில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



## அரசு மீது பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, செப்.25

ஆட்சியிலுள்ள அரசின் மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.



"மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு பொருள்கள் சேவைகளின் விலைகள் உயர்வடைந்துள்ளன. ஊழல் மோசடிகள், வீண் விரயம் போன்ற காரணிகளால் அரசு ஊவா மாகாண சபைத் தேர்தலில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது. ஊவா மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தை அரசு கைப்பற்றியமை மகிழ்ச்சி அளிக்கின்றது. மக்கள் தொடர்ந்தும் அரசின் மீது ஓரளவு நம்பிக்கை கொண்டுள்ளமை இதன் மூலம் வெளிப்படையாகின்றது.

மேல், தென் மாகாணசபைத் தேர்தல்களைப் போன்றே ஊவா மாகாண சபைத் தேர்தலிலும் மக்கள் அரசுக்கு ஒரு செய்தியை கூறியுள்ளனர். சில மக்கள் தேர்தலில் வாக்களிக்கவில்லை. சில மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஊழல் மோசடிகள் வீண் விரயம் போன்றவற்றிற்கு எதிராக அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட்டால் மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## பொலிஸாரை கண்டு ஓடியவர் மதிலுடன் மோதி காயம்

வலி.வடக்கு, செப்.25

பொலிஸாரைக் கண்டு மோட்டார் சைக்கிளில் தப்பி ஓட முயன்றபோது மதிலுடன் மோதிக் காயங்களுக்குள்ளான நிலையில் ஒருவர் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சுன்னாகத்தில் நடந்துள்ளது.

கிளிநொச்சி, அம்பலப்பெருமாள் குளம் பகுதியைச் சேர்ந்த இருவர் சுன்னாகத்துக்கு வந்திருந்தனர் என்றும், பொலிஸாரைக் கண்டவுடன் அவர்கள் இருவரும், சுன்னாகம், காங்கேசன்துறை வீதியில் உள்ள ஒழுங்கைக்குள் ஓட முயன்றபோதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த ச.மகநிதன் (வயது-20) என்பவரே காலில் முறிவு ஏற்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற-86)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் இடம்பெற்ற காலநிலை உச்சி மாநாட்டில் வைத்தே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஹிலாரியை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## உதய கம்மன்பில சவாலால் நெருக்கடியில் ஹெல உறுமய

கொழும்பு, செப்.25

அமைச்சர் உதய கம்மன்பிலவால் ஜாதிக ஹெல உறுமய கட்சி தார்மீக நெருக்கடியொன்றை எதிர்கொண்டுள்ளது.

ஊவா மாகாண சபைத் தேர்தல்களுக்கு முன்னதாக தொலைக்காட்சி விவாதமொன்றில் அமைச்சர் உதய கம்மன்பில கலந்து கொண்டிருந்தார். அவருடன் ஐ.தே.க. வின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோவும் கலந்து கொண்டிருந்தார். அந்த நிகழ்ச்சியில் ஹரினின் வாதங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய அமைச்சர் உதய கம்மன்பில, தேர்தலில் ஹரினுக்கு 50 ஆயிரத்துக்கும் மேல் விருப்பு வாக்குகளைப் பெற முடியாது என்று கிண்டலடித்தார். அவ்வாறு ஹரின் பெர்னாண்டோ 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் பெறும் பட்சத்தில் தான் அமைச்சர் பதவியைத் துறப்பதாகவும் உதய கம்மன்பில சவால் விட்டார்.

ஆயினும் ஊவாத் தேர்தலில் 50 ஆயிரம் போன்று மூன்றரை மடங்கு விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார் ஹரி. அதையடுத்து உதய கம்மன்பில எப்போது பதவி விலகுவார் என்ற கேள்விகள் எழுப்பத் தொடங்கியுள்ளன.

பதவி ஆசை அற்றவர்கள். சொல்வதை செயலில் காட்டுபவர்கள் என்று சிங்கள மக்கள் மத்தியில் தங்களைப் பற்றி ஜாதிக ஹெல உறுமய கட்டமைத்துள்ள பிம்பம் தற்போது கிண்டல் செய்யப்படுகின்றது. இந்த விவகாரம் தற்போது ஜாதிக ஹெல உறுமயவுக்கு தார்மீக நெருக்கடியை தோற்றுவித்துள்ளது. எனினும் அமைச்சர் உதய கம்மன்பில இது தொடர்பில் கருத்துகள் எதனையும் தெரிவிக்கவில்லை. (ற)



## ஐ.தே.க. பிரதித் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமனம்

கொழும்பு, செப்.25

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை அந்த கட்சியின் செயற்குழு ஏகமன தாக நியமித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த வில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி செயற்குழுக் கூட்டத் தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதித் தலைவர் பதவிக்கு சஜித் பிரேமதாஸவை நியமிக்க வேண்டும் என கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

இந்த யோசனைக்கு ஆட்சேபனை ஏதும் உள்ளதா என செயற்குழுவிடம் வினவப்பட்டபோது, எவரும் ஆட்சேபனை தெரிவிக்க வில்லை.

இதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ அந்தக் கட்சியின் செயற் குழுவால் ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்கவை நியமிப்பதற்கு கட்சி செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசமும், கட்சியின் பொருளாளராக இரான் விக்ரமரட்ன வும் கட்சி செயற்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர். (ற)

## வாஸுக்கு விளக்க மறியல் நீடிப்பு

கொழும்பு, செப்.25

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹமட் சியாம் கொலை வழக்கின் சந்தேக நபர்களான ஐவரும், மீண்டும் மூன்று மாதங்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி லலித ஜயசூரிய மற்றும் லியோன் செனவிரத்ன ஆகிய நீதிபதிகளே, தங்களுடைய தீர்ப்பை நேற்று வழங்கியதுடன் அவர்களின் பிணைக் கோரிக்கையையும் நிராகரித்தனர்.

அதன் அடிப்படையில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன உள்ளிட்ட ஐவரின் விளக்க மறியல் மீண்டும் நீடிக்கப்பட்டது. (ற)

## பிரசவத்தின் போதான இறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தகவல்

கொழும்பு, செப்.25

அடுத்து ஐந்து ஆண்டுகளுக்குள் பிரசவத்தின் போது ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தாய்மையைக் காப்போம் என்ற தொனிப் பொருளில் இடம் பெற்ற பயிற்சிப் பட்டறையொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தற்போது இலங்கையின் பிரசவத்தின் போதான இறப்பு விகிதம் ஒரு லட்சத்துக்கு 134 என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. ஆனால் இதனையொரு சிறந்த மகப்பேற்றின் போதான மருத்துவக் கவனிப்பு எனக் கூற முடியாது. இறப்பு விகிதத்தை 134 இலிருந்து 50 இற்குக் கொண்டு வருதலே எமது இலக்காக உள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இந்த இறப்பு விகிதம் ஒரு லட்சத்துக்கு 30 என்ற அடிப்படையிலேயே காணப்படுகின்றது. பெண்கள் கருத்தரிப்பது என்பது ஒரு வியாதியல்ல. ஆனால் அதில் எந்த வேளையிலும் சிக்கல்கள் தோன்றலாம். இதனை நிவர்த்தி செய்வதற்கு மருத்துவப் பராமரிப்பு அல்லது மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை வழங்குவது அவசியமாகும். தாய்மைப் பேற்றை அடைந்த பெண்களை அவர்களது குடும்பத்தினரும், மருத்துவ அலுவலர்களும், மருத்துவக் கவனிப்பை மேற்கொள்பவர்களும் நன்கு கவனித்தல் வேண்டும். மேலும் பிரசவத்தின் போது தாய்க்கும், குழந்தைக்கும் சிக்கல்கள் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும்.

கடந்த காலங்களில் ஏராளமான பிரசவங்கள் வீடுகளிலேயே இடம்பெற்றன. ஆனால் தற்போது நூறு வீதமான தாய்மார்கள் மருத்துவமனைகளையே நாடுகின்றனர். ஆனால் இன்னமும் மருத்துவமனைகளில் இடம்பெறும் பிரசவத்தின் போது தாய்மார்கள் சிலர் சாவை எதிர்கொள்வது எமக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதுவொரு மிகப் பெரிய சவாலாக எம்முன் காணப்படுகின்றது. அத்துடன் ஒரு சமூகப் பிரச்சினையாகவும் மாறியுள்ளது.

உலகில் தினமும் ஆயிரத்து 500 தாய்மார்கள் குழந்தைப் பிறப்பின்போது ஏற்படும் சிக்கல்களால் மரணத்தை எதிர்கொள்கின்றனர். ஆபிரிக்க நாடுகளிலேயே இது அதிகளவில் காணப்படுகின்றது. இதற்கு வறுமையும் ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

மேலும் ஸ்கண்டிநேவியன் நாடுகளில்பிரசவத்தின்போதான இறப்பு விகிதம் மிகவும் குறைந்த அளவில் உள்ளதோடு சியரலியோனில் மோசமான கட்டத்தை எட்டியுள்ளது எனத் தெரிவித்தார். (க)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 புரட்டாதி 09 வியாழன் (25.09.2014) **UTHAYAN - A lively National Tamil Daily** கதிர் 303


# யாழ்.- கொழும்பு பஸ்களுக்கு அனுமதி வழங்குவதில் சிக்கல்

## ஏற்கனவே அனுமதி உள்ளவர்களும் பஸ் இல்லாதவர்களும் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 25

**யாழ்.- கொழும்பு பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கான போக்குவரத்து அனுமதிப் பத்திரத்துக்கு, ஏற்கனவே அனுமதிப் பத்திரம் உள்ளவர்களும், பஸ் எதுவுமே இல்லாதவர்களும் கூட விண்ணப்பித்துள்ளனர். இதனால் பஸ்களை வைத்திருக்கும் தாம் அதனைப் பெறுவதில் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட பஸ் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

சுமார் ஒரு மாத காலமாக 40 இற்கும் மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள் வழி அனுமதிப் பத்திரம் இல்லாத காரணத்தால் சேவையில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் வருமானமின்றிப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில் அவர்களில் பலர் லீசிங் அடிப்படையிலேயே பஸ்களைக் கொள்வனவு செய்திருந்தனர்.

ஆனால் 2 பஸ்களை வைத்திருப்பவர்கள் 2 இற்கும் மேற்பட்ட வழி அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ளனர். அதற்கு வரையறை உள்ளதனால் குறித்த எண்ணிக்கைக்கு மேல் எவருமே வழித் தட அனுமதி பெறமுடியாது.

அது தொடர்பில் கடந்த மாதம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருடனான சந்திப்பில் பஸ் உரிமையாளர்களால் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக வழித்தட அனுமதிப் பத்திரத்தைப் பெறுவது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவந்தன. ஒவ்வொரு வழித்தட அனுமதிப் பத்திரத்துக்கும் குறைந்தது 11 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த சந்திப்பில் கேள்வி கோரிய விண்ணப்பங்கள் எடுக்கப்பட்டன. இதன்போதே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏற்கனவே பஸ்களுக்கான வழித்தட அனு

(22ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவில் கோத்தபாய



கொழும்பு, செப்.25

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கமாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தற்போது சீனா சென்றுள்ளார்.

கடந்த வாரம் சீன அதிபர் இலங்கைக்கு வந்த கையோடு பாதுகாப்புச் செயலர் சீனா சென்றுள்ளார். அவர் அங்கு சீன மத்திய இராணுவ ஆணையகத்தின் பிரதித் தலைவரைச் சந்தித்து உரையாடினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட மத்திய இராணுவ ஆணையகத்தின் பிரதித் தலைவர்,

இந்த இரண்டு நாடுகளின் தலைவர்களும் பரஸ்பர இராணுவ ஒத்துழைப்புக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இலங்கையும் சீனாவும் இராணுவ ஒத்துழைப்பை நீடிப்பதில் விருப்பம் கொண்டுள்ளதாக இலங்கையின் பாதுகாப்புச் செயலர் அங்கு தெரிவித்தார்.

கடந்த வாரம் சீன அதிபர் இலங்கைக்கு வருகை தந்த போது சீனாவுக்கும் இலங்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசிய கட்சியின் மீது மக்கள் நம்பிக்கை அதிகரிப்பு

### சொல்கிறார் அசாத் சாலி

கொழும்பு, செப். 25

ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசு சகல வளங்களைப் பாவித்தும் தோல்வியைத் தழுவியுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி மீது மக்கள் மத்தியில் நம்பிக்கை அதிகரித்துள்ளது எனத் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிரணிக் கட்சிகள் யாவும் வீதிக்கு இறங்கிச் சகல ஆணைக் குழுக்களையும் நியமிக்குமாறு போராட வேண்டிய காலம்

(22ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. விசாரணை அறிக்கை ஜெனிவா அமர்வில் இன்று

### உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை தொடர்பான ஐ.நா விசாரணையின் வாய்மூல அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இன்றைய தினமே சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்பிக்கப்படவுள்ள வாய்மொழி மூல அறிக்கை ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில், சபை அமர்வில் இன்று உத்தியோகபூர்வமாக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத்தொடர் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றபோது, இலங்கைப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் விசாரணை நடத்தவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இதற்கமைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணையின் வய்மொழி மூலமான அறிக்கை, தற்போது இடம்பெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 27 ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வாய்மொழி மூலமான அறிக்கை ஏற்கனவே வெளியாகியுள்ளது. அதில், இலங்கையில் சிவில் அமைப்புகள்,

(22ஆம் பக்கம் பார்க்க)

## மாதக் கொடுப்பனவை மாணவருக்கு வழங்கும் மாகாண சபை உறுப்பினர்

அச்சுவேலி, செப்.25

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தனக்குக் கிடைக்கும் மாதாந்த கொடுப்பனவைப் போரினால் பாதிப்புக்கு உள்ளாகிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு உதவு நிதியாக மாதாந்தம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

மாதாந்தம் முதலாவது சனிக்கிழமைகளில் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் இந்தக் கொடுப்பனவை ஆவரங்காலில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதம் தொடக்கம் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. நீர்வேலி மாதர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கொடுப்பனவை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

ஒவ்வொரு மாணவர்

(22ஆம் பக்கம் பார்க்க)

## மானிய உரத்துக்குக் காத்திருந்து ஏமாற்றமடைந்தனர் விவசாயிகள்

தென்மராட்சி, செப்.25

மானிய உரவகைகள் பெறுவதற்குக் காலை தொடக்கம் மாலைவரை கமநல சேவைகள் நிலையத்தில் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பினர் மறவன்புலோ கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள்.

கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு மானிய உரவகைகள் நேற்றுமுன்தினம் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் வைத்து விநியோகிப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து 400 க்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் உரம் பெறுவதற்காகக் காலையிலேயே கமநல சேவைகள் நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.

போதிய ஆளணி வளங்களுடன் இயங்கும் கமநல சேவை நிலையத்தில் குறைந்த அளவினருக்கே உர வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஏனையோரைப் பிறிதொரு தினத்துக்கு வருமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து சுமார் 300 பேர் உர வ்கைகள் பெறமுடியாமல் மாலையில் வீடு திரும்

(22ஆம் பக்கம் பார்க்க)

## 60 கைப் பணியாளர்களுக்கு வாழ்வாதார உதவித் திட்டம்



வலி.வடக்கு, செப். 25

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் பனை, கித்துள் உற்பத்திகளின் கைப் பணிப் பயிற்சியைப் பூர்த்தி செய்த 60 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவித் திட்டத்துக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவையை நிறுத்துகிறது பிரி.

கொழும்பு, செப் 25

பிரிட்டிஷ் எயார்வேஸ் விமான நிறுவனம் அடுத்த வருடம் மார்ச் மாதத்துடன் கொழும்புக்கான சேவையை நிறுத்துவதாக நேற்று அறிவித்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடில் அரசுக்கான ஆதரவு மீள்பரிசீலனை

### அபாயச் சங்கை ஊதியது மு.கா

கொழும்பு, செப். 25

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி அம்பாறையில் கரையோர மாவட்டம் ஒன்றைத் தரும் விடயத்தை அரசு துரிதப்படுத்த வேண்டும். அல்லது முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு வழங்கி வரும் ஆதரவு மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப் படும். இவ்வாறு அபாயச் சங்கு ஊதினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும், கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ. எல்.அப்துல் மஜீத்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று புதன்கிழமை பிற்பகல் நடைபெற்றது. சபையில், முஸ்லிம்

(22ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# பௌத்த கொள்கையுடைய புதிய அரசை அமைக்க ஏற்பாடு

## எதிர்வரும் 28 ஆம் திகதி அடித்தளம் இடப்படும் என்கிறது பொதுபல சேனா

கொழும்பு, செப்.25

முழுமையாக சிங்கள - பௌத்த கொள்கையை கடைப்பிடிக்கும் அரசொன்றை இலங்கையில் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான அடித்தளம் எதிர்வரும் 28 ஆம் திகதி இடப்படும் என்று சூளுரைத்துள்ளது கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்பான பொதுபலசேனா.

நேற்றுமுன்தினம் அந்த அமைப்பால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் பல சேனாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான டிலாந்த வித்தானகே ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"பொது பல சேனா அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதற்காக நாம் எதிர்வரும் 28 ஆம் திகதி மாபெரும் தேசிய மாநாடொன்றை ஏற்பாடு செய்துள்ளோம். இந்த மாநாடு இலங்கை வரலாற்றிலேயே மிக முக்கியமான ஒன்றாக அமையும்.

இந்த மாநாடு நாட்டின் எதிர்காலத்தையே மாற்றியமைக்கும் ஒன்றாகவும், எந்தவொரு தரப்பினரும் எதிர்பார்க்காத பல ஆச்சரியங்கள் அடங்கிய ஒன்றாகவும் அமையவுள்ளது.

இதில் சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமான தேரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிங்கள- பௌத்த அரசொன்று நாட்டில் புதிதாக உருவாக வேண்டும். இதற்கான அடித்தளமாகவே எமது மாநாடு அமையவுள்ளது.

ஆகவே, நாட்டின் பூர்வீகக் குடிகளான சிங்கள- பௌத்த மக்கள் ஆளக்கூடிய அரசுக்கான அடித்தளம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஏற்படுத்தப்படும்"- என்று அவர்கள் அங்கு மேலும் தெரிவித்துள்ளதுடன், மாகாணசபை முறைமை நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (ற)

### பெயர்மாற்றம்

துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த செல்வகுலசிங்கம் செல்வானம் ஆகிய நான் எனது பெயரை செல்வகுலசிங்கம் கார்த்திகா என இன்றிலிருந்து பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(52597)(4.6.3) செ.கார்த்திகா

### காணியுடன் வீடு விற்பனைக்கு

வவுனியா, வைரவபுளியங்குளத்தில் 3 பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 024 222 0135 (52155) (4.6.3)

# வன்முறைக்கு மத்தியிலேயே ஊவா தேர்தல்

## குற்றஞ்சாட்டுகின்றது கபே அமைப்பு

கொழும்பு, செப்.25

ஊவா மாகாணசபைத் தேர்தல் முற்றுமுழுதாக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டே நடத்தப்பட்டது என நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தல் தினத்தன்று தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 102 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், முழு தேர்தல் காலத்துக்குள்ளும் 550க்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்றும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"கடந்த 2 வருடங்களுக்குள் 8 மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஊவா மாகாண சபைத் தேர்தலில் பெரியளவில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. குழுக்களாக இணைந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஜே.வி.பியின் கட்சி அலுவலகங்கள் மீது 27 தடவைகள் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வெலிமடையில் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகில் ஆளுந்தரப்பினரால் காசோலை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும், உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்கள் பங்கீடு, 2500 ரூபா பணம் என்பன பங்கீடு செய்யப்பட்டன. தேர்தல் தினத்தன்று 5 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் நடந்துள்ளன" - என்று தெரிவித்துள்ளார். (ற)

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கிளிநொச்சியில்

01. பிறிமா நம்பர் 01 புறொயிலர்
02. நாட்டுக் கோழிக்குஞ்சுகள்
03. பிறிமா முட்டைக் கோழிக்குஞ்சுகள்
04. கினிக்கோழி, வான்கோழிக்குஞ்சுகள்

* வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. (50665) (45.3.6)

தொடர்பு: 077 933 7287

### ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 29.09.2014 திங்கட்கிழமைக்கு முன்னதாக பிற்பகல் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

(சி.15936) இயக்குநர்கள்

## மரண அறிவித்தல்



### செல்வி கல்பனா சண்முகரட்ணம்

(பழைய மாணவி - யா/மகாஜனக் கல்லூரி)

சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கல்பனா சண்முகரட்ணம் 23.09.2014 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகரட்ணம் (ஓய்வுபெற்ற குழாய் பொருத்துநர் யாழ்.போதனா வைத்தியசாலை) - சறோஜினிதேவி (அம்மாப்பிள்ளை) தம்பதியரின் பாசமிகு மகளும், சசிகலா (லண்டன்), கம்சினி (லண்டன்), மகிழ்ராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கௌரிதாசன் (லண்டன்), சிவதயாளன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், அபூர்வன், ஆரூசன் ஆகியோரின் சித்தியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பரமேஸ்வரி, இராசபூபதி, காலஞ்சென்ற நவரத்தினராசா (அத்துறு) ஆகியோரின் பெறாமகளும், லோகநாதன், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், ஆனந்தராசா ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(52410) (12.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி



(ஓய்வுபெற்ற அதிபர்-வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை.
முன்னாள் தலைவர்-தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-கொடிகாமம்.)

தாவளை, இயற்றாலை, மந்துவிலைப் பிறப்பிடமாகவும் இடைக்குறிச்சி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி 23.09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தில்லைநாயகி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் உமா மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவரும், கார்த்திகா(கனடா),தாட்சாயினி, சாரங்கன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீபன்(கனடா), நர்மதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சரண்யா (கனடா),அஸ்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், இராசகுமாரசாமியின்(ஜேர்மனி) அன்புச் சகோதரனும், காமேஸ்வரியின்(ஜேர்மனி)மைத்துனரும், அகிலன்(ஜேர்மனி), இராகவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பெரியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2.30 மணியளவில் மாசேரி கப்பத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி, வரணி.

தகவல்: குடும்பத்தினர்.
077 609 3063

(32384) (5.6.3)

## பதினேழாவது ஆண்டு நினைவலைகள்



அமரர்

### நமசிவாயம் நடராசா

திதி : பிரதமை

அன்னை மடியில் 17.01.1923 — அம்மன் அடியில் 06.10.1997

பதினேழு ஆண்டுகள்
ஓடியே சென்றதையா
மனதில் உங்கள்
நினைவலைகள்
எங்களைவிட்டு நீங்க
மறுக்குதையா
நவராத்திரித் தொடக்கத்தில்
அம்மன் பாதத்தைப் பற்றிக்
கொண்டீர்களையா.

உங்கள் ஆத்மா சாந்திபெற
அம்பாளை வேண்டித் துதிக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
ஐயனார் கோயிலடி, கல்வயல், சாவகச்சேரி.

(52555)(7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சண்முகம்



யாழ்.புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும்,யாழ்.கச்சேரி, நக்கா றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சண்முகம் நேற்று (24.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் யாழ்.சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

71,நக்கா வீதி, யாழ்ப்பாணம். (52595)(5.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## யாழ்.லங்கா சிமெண்ட் நிறுவன பணியாளருக்கு பணிக்கொடை

லங்கா சிமெண்ட் நிறுவனத்தில் பணியாற்றியோருக்கான பணிக்கொடை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தப் பணிக்கொடையை பெறவுள்ளோர் பண்ணை வீதியில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்துக்கு, கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியுடன் சமுகமளிக்குமாறு உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

காசோலையைப் பெற்றுக் கொள்ளவுள்ள பணியாளர்களின் விவரம் வருமாறு:-

எம்.தேவகுமார், எஸ்.சிறீநாதன், ரி.தியாகலிங்கம், எஸ்.லோகநாதன், ஏ.தவராஜா, எஸ்.தேவலோகேஸ்வரன், எஸ்.சிவராஜகுமார், எஸ்.நித்தியானந்தன், ஏ.செல்வானந்தம், ரி.தயானந்தன், எம்.ஜோன் பற்றிக், ஜீ.அன்ரன் மகேசன், என்.சண்முகரட்ணம், பி.எஸ்.விஜயகுமார், கே.குகதாசன், எஸ்.ஜோகேஸ்வரன், ரி.பரராஜசிங்கம், டபிள்யு.விக்னேஸ்வரராஜா, ஏ.பவளநாதன், ரி.குணசேகரம், கே.வைரவநாதன், கே.சிவராஜா, எம்.செல்வரட்ணம், ரி.கணேசமூர்த்தி, எஸ்.வேலுசாமி, எஸ்.நாகேஸ்வரன், கே.திருக்குமரன், எம்.பி.குணரட்ணம், ரி.வரதராஜன், எஸ்.பாலசிங்கம், ஆர்.இராஜகுமார், வி.சதானந்தன், எம்.ஞானேந்திரன், கே.தவராஜா, ரி.வசந்தராஜா, எஸ்.கமல், கே.சிவலோக நாதன், எம்.புவனேந்திரன், ரி.வேல்முருகன், ஆர்.நாகராஜா, கே.மகாதேவன், கே.மனோகரன், கே.நவரட்ணம், ரி.தயாளகுமார், ரி.யோகேஸ்வரன், ஜே.ரட்ண போஸ், பி.செல்வ நாயகம், எம்.கணேசலிங்கம், வி.அருளானந்தம், பி.வரதராஜா, என்.இராஜலிங்கம், எஸ்.தேவகுணாளன், எஸ்.வாமதேவன், என்.சந்திரசேகரம், எஸ்.பஞ்சலிங்கம் ஆகியோரே மேற்படி பணிக்கொடையைப் பெறவுள்ளனர். (வ-106)

## ட்றிபேர்க்கில் பாரதி விழா

[illegible]ப்பா பாட்டுப் பாடிய மகாகவி பாரதியாருக்கு விழா எடுத்து மகிழ்வித்தனர் சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரி தமிழ் மன்றத்தினர். மாணவர்களால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வுகள் அனைவரின் பாராட்டையும் பெற்றன.

தமிழ் மன்றத் தலைவர் ஜெ.லக்ஜன் தலைமையில் கல்லூரி நாகேந்திரராஜா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக எழுத்தாளரும், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான கே.ஆர்.டேவிட் கலந்து கொண்டார். பாரதியாரின் பாடல்கள், கவிதைகள், நாட்டார் பாடல் போன்றவையும் கண்ணன் என் காதலன் நடன நாடகமும், பாஞ்சாலி சபதம் நாடகமும் மாணவர்களால் திறம்பட நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டன. (வ-9)

# உணவில் கவனம் தேவை

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அறிவுறுத்து

தென்மராட்சி, செப்.24

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் காலை வேளையில் நடைபெறும் கிளினிக்குகளுக்கு வரும் நோயாளர்களை காலை உணவருந்தி விட்டு காலை நேர மருந்தையும் உள்ளெடுத்து விட்டு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை கிளினிக் 8 மணிக்கு ஆரம்பமாகி இறுதி நோயாளியைப் பார்வையிடும் வரை பொது மருத்துவ நிபுணரும் மருத்துவ அதிகாரிகளும் கடமையாற்றுகின்றனர்.

அத்துடன் நோயாளர்களுக்கு கொப்பிகளில் அவர்களைப் பார்வையிடவுள்ள நேரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பல நோயாளர்கள் காலை உணவும் மருந்தும் பயன்படுத்தாமல் நேரத்துடன் வருவதால் அவர்களின் நோயின் தன்மை அதிகரிப் பதால் சில நோயர்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. கிளினிக்குக்கு வரும் நோயா ளர்களை அவசரப்படாமல் காலை உணவும் மருந்தும் அருந்திய பின்னர் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## வவுனியா வடக்குப் பிரதேச செயலக கலை விழா இன்று

வவுனியா, செப்.25

வவுனியா வடக்கு பிரதேச செயலக கலை விழா இன்று வியாழக்கிழமை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது அமர்வில் வட மாகாண பண்பாட்டலுவல்கள் கல்வி அமைச்சின் பணிப்பாளர் திருமதி உசா சுபலிங்கம் பிரதம விருந்தீனராகக் கலந்து கொள்வார்.

வவுனியா வடக்கு கல்வி பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் , வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி மதிதரன், வவுனியா தமிழ் சங்கச் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

பண்பாட்டு பேரணி, இலக்கிய சொற்பொழிவுகள், சிறுவர் நாடகம், பட்டிமன்றம், மற்றும் 'மாருதம் மலர்' வெளியீடு என்பனவும் இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி ச. மோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் மி.சூசைதாசன், மாங்குளம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.சு.புசும்பராவத்த, நெடுங்கேணி இலங்கை வங்கி முகாமையார் டி. பெனடிக்ஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த இரண்டாவது அமர்வில் கிராமிய இசை, குழு இசை, ஒயிலாட்டம், கோலாட்டம், கிவியரங்கம், நாடகம், கலைஞர் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (வ-402)

## மேலும் ஒரு வைத்திய அதிகாரி நியமனம்

குருநகர் பிரதேச மருத்துவமனைக்கு மேலும் ஒரு வைத்திய அதகாரி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் நியமிக்கப் பட்டுள்ளார்.

மருத்துவர் ஜே.சுதர்சினி என்பவரே இவ்வாறு இணைப்புச் செய்யப்பட்டு கடந்த ஜூன் 26ஆம் திகதி தொடக்கம் தமது கடமையை ஆற்றிவருகிறார்.

குறித்த மருத்துவமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக மருத்துவர் எஸ்.விமலேந்திரன் கடமையாற்றி வருவது குறிப்பிடத் தக்கது. (வ-51)

## சரஸ்வதி பூசை நிகழ்வுகள்

தென்மராட்சி, செப்.25

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய நவராத்திரி விழா இன்று ஆரம்பமாகி ஒக்ரோபர் 3 ஆம் திகதி விஜயதசமி விழாவுடன் நிறைவு பெறும்.

ஒக்ரோபர் 2 ஆம் திகதி சரஸ்வதிபூசையும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிமை விஜயதசமியை முன்னிட்டு ஏடு தொடக்குதலும் இரவு மானம் பூ திருவிழாவும் இடம்பெறும். (வ- 9)

* * *

யாழ்ப்பாணம், செப்.25

சின்மயாமிஷன் நடத்தும் நவராத்திரி பூசை நேற்று புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 2 ஆம் திகதி வரை நடைபெறும்.

தினமும் மாலை 5.15 தொடக்கம் 6.45 மணிவரை நவராத்திரி பூசை இல 9,செட்டித்தெரு ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷன் ஆச்சிர மத்தில் இடம்பெறும்.

இதில் பூஜை, பஜனை, கலை நிகழ்வு ,சத்சங்கம் ஆகியன இடம்பெறும்.

இந்நிகழ்வில் தினமும் 6.30-6.45 மணிவரை வதிவிட ஆச்சாரியார் பிரம் மச்சாரி ஜாக்ரத் சைதன்யாவின் சத்சங்கம் இடம்பெற உள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை குழந்தைக ளுக் கான ஏடு தொடக்கும் நிகழ்வு , சமஸ்கிருதம் படிக்க விரும்புபவர்களுக்கான அக்ஷர ஆரம்ப நிகழ்வு என்பன இடம் பெறும். (வ)

## சொற்பொழிவு

சாவகச்சேரி,கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆன்மிகச்சொற்பொழிவில் தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த ஆசிரியர் ச.மார்க்கண்டு 'எதுவழிபாடு' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (வ-9)

முடிவிலாத் துயர் சுமக்கும்
முதலாம் ஆண்டு நினைவுத் தூவல்

உருவாய் மண்ணில்
02 . 01 . 1954



அருவாய் விண்ணில்
06 . 10 . 2013

அமரர் சிதம்பரப்பிள்ளை கலாநிதி
(ஆங்கில ஆசிரியர்).
திதி : 25.09.2014

அருந்தமிழில் நீ கலாநிதி! அகிலம் போற்றும்
ஆங்கிலத்திலும் நீ கலாநிதி! பெயரிலேயே "கலாநிதி" பட்டம்
சுமந்து நின்று அசத்திய எங்கள் கலாநிதியே!
குலதீபமாக மிளிர்ந்த எங்கள் குலபதியே!
உன்னை நாம் இழந்து... உன் நினைவுன்னி நாமழுது
இன்று ஓராண்டு ஓடியதோ? அன்னை, மனை, மக்கள்
அகநெகிழும் சோதரர்கள் அருகணைந்த மைத்துனர், சகலன்மார்
உற்றார், உறவினர்கள் உருகியழும் மாணவர்கள்
ஆயிரமாய் நீ அணைத்த உறவினர்கள் அகநெகிழ்ந்தோம்!
ஐயா! உனையெண்ணி அஞ்சலித்தோம்! விண்ணிலவாய் வாழ்க!
விரும்பும் இறை பதமலரில் வண்ணமுற அமர்க!
அஞ்சலித்தோம்!
ஓம் சாந்தி!

மருதடி,
சாவகச்சேரி.

உறவுன்னி உருகும்
குடும்பத்தினர்.

விண்ணக வாழ்வின்
10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26.04.1923

மறைவு
25.09.2004

அமரர் றெஜீனம்மா
செபஸ்ரியாம்பிள்ளை
(இராசம்மா - போயிட்டி, இளவாலை)

அம்மா உம்மை எப்படி நாம் மறப்போம்?
அம்மா எம் வாழ்வில் ஒருநாளும் உமை மறவோம்
நீங்கள் எம் வாழ்வுக்காய்ப்பட்ட கஷ்டம் நாம் அறிவோம்!
உங்கள் கஷ்டத்தின் பலனை சுவைக்கின்றோம் நாமின்று...
ஆனால் அது ஏனோ இனிக்கவில்லை நீங்களின்றி!
எம்மையெல்லாம் பெற்றெடுத்து பாசத்தோடு வளர்த்தீர்களே!
அறிவூட்டி எம்மையெல்லாம் ஆளாக்கி வைத்தீர்களே!
உங்களை நாம் பிரிந்திங்கு உம் நினைவில் வாடுகின்றோம்
ஒரு நாள் உங்களை நாம் காண்போம் என வாழ்கின்றோம்...
இறைவன் சந்நிதியில் இருந்தும் நீங்கள் எமக்காய்த்தான்...
அவனிடம் தினமும் வேண்டிடுவீர் மெய்யாய்த்தான்...
ஒரு நாளும் நீங்கள் உலகில் உங்களுக்காக வாழவில்லை
உங்கள் மக்கள் எங்களுக்காய் மட்டும்தான் வாழ்ந்து சென்றீர்கள்
பத்து மாதம் உங்கள் மடியில் பத்திரமாய் நீங்கள் சுமந்தீர்கள்
ஈரைந்து ஆண்டுகளாய் உங்கள் நினைவைச் சுமக்கின்றோம்
உங்களைக் காணும் காலம் இறைவன் எமக்களிக்கும் வரை...
பொறுமையுடன் காத்திருக்கும்...
உங்களன்புப் பிள்ளைகள் நாம்!

இவரது ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை மறுதினம் (27.09.2014) சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு போயிட்டி புனித லூர்த்து அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

போயிட்டி,
இளவாலை.

(52500)(3.6.4)

குடும்பத்தினர்.



## கற்சிலைமடு விநாயகர் தேரில் அருட் காட்சி

முல்லைத்தீவு, செப்.25

கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலய இரதோற்சவ நிகழ்வு 8 ஆம் திகதி காலை வெகு சிறப்பாக இடம்பெற்றது.

காலை விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்று விநாயகப் பெருமான் அலங்கரிக்கப்பட்ட இரதத்தின் மீது ஆரோகணித்து அருட்காட்சி காட்சி அளித்தார்.

ஆலயப் பிரதம குரு இராஜாராம் குருக்களின் கிரியையை அடுத்து பெண்கள் ஒரு புறமும் ஆண்கள் மறுபுறமும் வடம் பிடித்து அரோகஹா கோசம் முழங்கத் தேர் இழுத்தனர்.

விநாயகப் பெருமான் தேரை விட்டு இறக்கும்போது பச்சை சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

விசேட அபிசேகம் செய்யப்பட்டு விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் வீதியுலா வந்து மக்களுக்கு அருளாசி வழங்கினார். (கு-500)

# அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக தமிழர், முஸ்லிம்கள் இணையும் நேரமிது


### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வவுனியா, செப்.25

இந்த நாட்டில் வாழும் தேசிய இனங்களான தமிழ், முஸ்லிம் மக்கள் மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபட்டவர்கள்.

எனவே எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வை நோக்கி இணைந்து போராட வேண்டிய தருணமிது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தில் ஆண்டியாபுளியங்குளம் கிராமத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஆண்டியாபுளியங்குளம் மகாவித்தியாலய அதிபர் ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆண்டியாபுளியங்குளம் பள்ளிவாசலுக்கு ஒலிபெருக்கி உபகரணம் மற்றும் ஆண்டியாபுளியங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் அமைச்சரினால் வழங்கப்பட்டன. அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தமக்கென தனித்துவமான மொழி, கலாசார விழுமியங்களைக் கொண்டு வாழும் தேசிய இனங்களாகும். சனத் தொகையில் சிங்களம் பேசுபவர்களைவிட தமிழ் பேசுபவர்கள் குறைந்தவர்களாக இருப்பதால் நாம் ஒன்றும் அவர்களுக்குக் குறைந்தவர்களல்ல.

அவர்கள் அனுபவிக்கும் அனைத்து அரசியல் உரிமைகளையும் நாமும் அனுபவிப்பதற்கு உரித்துடையவர்கள்.

ஆனாலும் அண்மைய தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் இந்த நாட்டில் நாம் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுவதைக் கோடிட்டுக்காட்டுகின்றன.

எனவே இது காலத்தின் கட்டாயம். மொழியால், வாழும் தேசத்தால், அடக்கி ஆளப்படுகின்ற சிறுபான்மை இனங்களாகிய நாம் ஒற்றுமையுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தருணமிது- என்றார். (கு-421)

## மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் ஆளணியில் தொடர்ந்தும் வெற்றிடங்கள்

முல்லைத்தீவு, செப்.25

மாந்தை கிழக்கு பிரதேச சபையின் ஆளணி வளங்கள் தொடர்ந்து நிரப்பப்படாமல் இருப்பதனால் அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டியிருப்பதாகப் பிரதேச சபைத் தலைவர் அ.தனிநாயகம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் செயற்பாடுகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுவதில்லை எனப் பல்வேறு தரப்புக்களாலும் குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் இது தொடர்பாக மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அ.தனிநாயகத்திடம் கேட்டபோது:

பிரதேச சபையி னுடைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் பெரிய ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனால் பணிகளை முன்னெடுப்பதில் காலதாமதமாகின்றது. சபையில் 5' அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள், 2 முகாமைத்துவ உதவி யாளர்கள். 2 சுகாதார சேவையாளர்கள், வரி அற வீட்டாளர்கள் இரண்டு பேர், சாரதி கள் மூன்று பேர், அலு வலக உத்தியோகத்தர்கள் இரண்டு பேர், காவலாளி ஒருவர், ஆயுள் வேத மருத்துவர் ஒருவர், மின்னிணைப்பாளர் ஒருவர், தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள், முறைசார ஊழி யர் 15 பேரும் என 37 வெற்றி டங்கள் நிலவுகின்றன.

37 வெற்றிடங்களும் நிரப்பப்பட்டால் பணிகளை விரைவாக முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (கு-55)


## இலங்கை வங்கி

**வட மாகாணத்தில் பின்வரும் கிளைகளை இடம் மாற்றுவதற்கு பொருத்தமான கட்டடங்கள் குத்தகைக்கு தேவை**

| கிளை | தளப் பிரதேசம் குறைந்தது சதுர அடிகள் |
|---|---|
| பளை | 2,200 |
| பரந்தன் | 2,200 |
| முள்ளியவளை | 3,000 |

**உத்தேச கட்டடங்கள் கீழ் குறிப்பிடப்படும் வசதிகளைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.**

- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 35 அடியுடன் பிரதான வீதிக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவு இடவசதி காணப்படல் வேண்டும்.
- 60 எம்பயர் மூன்று கட்ட மின்சாரம், குழாய் நீர் வசதி, இலங்கை டெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சேவை மற்றும் ஆண் பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாக பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப் பகுதிக்கு தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்
- மின் ஆக்கி இயந்திரத்துக்கு (ஜெனரேட்டர்) 10'X10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்பு கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரை சேமித்து வைக்க 1000 லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.

இது தொடர்பான ஆர்வமுடைய கட்டட உரிமையாளர்கள் கட்டடத்தின் வரைபடம், பிரதிகள் மற்றும் சகல விவரங்களையும் பின்வரும் விலாசத்திற்கு 14 நாள்களினுள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடது மேல் மூலையில் "இலங்கை வங்கியின் பளை, பரந்தன், முள்ளியவளை கிளைகளுக்கு கட்டடம்" என தயவுசெய்து குறிப்பிடவும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
இலங்கை வங்கி,
வட மாகாண காரியாலயம்
இல 456 வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021-2223985 / 3126



## CITY OFFICE AUTOMATION

COA

யாழ்ப்பாணத்தில் மாபெரும்

திறப்பு விழா

26.09.2014

**Products** - Photocopy machine, Fax machine, Digital Duplicaters, Desktop Computers, Laptop Computers, All kind of Toners & Stationaries.

**Services** - Computers, Printers, Fax machines & Office Equipments.

திறப்பு விழாவை முன்னிட்டு விசேட கழிவுகள்

இலவசம் (Free Service 26th & 27th

Service for Computers, Printers & Office Equipments

Toners விசேட விலைகளில்

முற்பதிவு செய்து வாருங்கள்

(52596)(12.3.6)

Call: மில்ரோய் (MILROY) 071 656 3563 021 221 ...

No: 89, Main str... 773

... street, Jaffna

## விண்வெளி நிலையத்தை அடைந்தது 'ஸ்பேஸ் எக்ஸ்'

வொஷிங்டன், செப்.25

விண்வெளி ஆராய்ச்சிக்குத் தேவையான பொருள்களை ஏற்றிக் கொண்டு அமெரிக்காவிலிருந்து சென்ற 'ஸ்பேஸ் எக்ஸ்' ஆளில்லா விண்கலம், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சர்வதேச விண்வெளி நிலையத்தைச் சென்றடைந்தது.

ஜேர்மனியைச் சேர்ந்த விண் வெளி வீரர் அலெக்ஸாண்டர் கெர்ஸ்ட், 57.7 அடி நீள இயந்திரக் கை மூலம் அந்த விண்கலத்தை சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைத்தார்.



உயிருடன் கூடிய 20 எலிகள், பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்கள், முப்பரிமாண பிரிண்டர்கள் உள்ளிட்ட மொத்தம் 2,200 கிலோக்கள் எடை கொண்ட பொருள்களுடன் இந்த விண்கலம் அமெரிக்காவிலிருந்து ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டது.

உதவும் பல உபகரணங்களையும் அந்த விண்கலம் எடுத்துச் சென்றது. தற்போது எடுத்துச் செல்லப்பட்ட முப்பரிமாண பிரிண்டர்கள் மூலம், விண்வெளியில் அந்தத்தொழில்நுட்பம் எவ்வாறு செயற்படும் என்பது முதல்முறையாக பரிசோதித்துப் பார்க்கப்படும்.

சர்வதேச ஆய்வுநிலையத்துடன் சுமார் ஒரு மாதத்துக்கு இணைக்கப்பட்டிருக்கும் இந்த ஸ்பேஸ் எக்ஸ், அங்கிருந்து 1,450 கிலோ எடையுடைய பொருள்களை எடுத்துக் கொண்டு ஒரு மாதத்தின் பின்னர் மீண்டும் பூமிக்குத் திரும்பவுள்ளது. (வ)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் சூடான் மக்கள் நகரங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். அங்கு எந்தவிதமான வசதிகளும் அற்ற நிலையில் கழிவு நீரால் சூழப்பட்ட தற்காலிக முகாமில் வசித்துவருகின்றனர் என்று இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கச் சென்ற ஐ.நா. பணிக்குழு தெரிவித்துள்ளது. (வ)

## லிபியாவிலுள்ள ஆயுதக்கிடங்கு வெடித்ததில் 11 பேர் சாவு

லிபியாவிலுள்ள இராணுவ ஆயுதக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த வெடி பொருள்கள் அதிக வெப்பம் காரணமாக நேற்று முன்தினம் வெடித்ததில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

லிபியாவில் 34 ஆண்டுகளாக நடைபெற்று வந்த கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்ததில் இருந்து போராட்டக் குழுக்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக் கொண்டு செயற்பட்டுவருகின்றன. அவர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அந்தநாட்டு இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

லிபியாவில் உள்ள அல்பேடா நகரில்இராணுவத்தளமொன்று உள்ளது. அங்குள்ள ஆயுதக் கிடங்கில் ஆயுதங்களும், வெடி பொருள்களும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. அதிக வெப்பநிலை காரணமாக அங்கிருந்த வெடி பொருள்கள் திடீரென வெடித்துச் சிதறின. உடனே தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர். (வ)

## நிலக்கீழ் அணு நிலையத்தை மூட ஈரான் அடியோடு மறுப்பு

நியூயோர்க், செப்.25

தரைக்கு அடியில் ஈரான் அமைத்துள்ள யுரேனிய சுத்திகரிப்பு மையத்தை மூட அந்தநாடு மறுப்புத் தெரிவித்துள்ளது. இதனால், அந்தநாட்டுக்கும், வல்லரசுகளுக்கும் இடையில் அணுசக்தி ஒப்பந்தம் ஏற்படுவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஈரானின் ஃபோர்டோ நகரில் மலைப்பகுதியில் நிலத்துக்கு அடியில் மிக ஆழத்தில் யுரேனிய சுத்திகரிப்பு மையம் ஒன்றை அந்தநாடு அமைத்துள்ளது.

வான்வழித் தாக்குதல்கள் மூலம் அழிக்க முடியாத விதத்தில், மிகப் பாதுகாப்புடன் அந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அணு மின்சாரம் தயாரிக்க, யுரேனியத்தைச் செறிவூட்டம் செய்ய வேண்டும். எனினும், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் யுரேனியத்தை செறிவூட்டினால் அதனை அணு ஆயுதத் தயாரிப்புக்குப் பயன்படுத்த முடியும்.

எனவே, ஃபோர்டோ மையம் தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுக்க, அதனை மூட வேண்டும், அல்லது அங்கு யுரேனியம் செறிவூட்டுவதற்குப் பதிலாக வேறு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

எனினும், தனது முக்கிய யுரேனிய செறிவூட்டல் மையத்துக்கு இஸ்ரேலிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதால், பாதுகாப்பு மிக்க ஃபோர்டோ மையத்தை மூட முடியாது என்று ஈரான் மறுத்துள்ளது. (வ)

### 'த்ரீ இன் வண்' தையல் மெஷின் திருவாரூர் மாணவி சாதனை


மூன்று செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ள 'த்ரீ இன் வண்' தையல் இயந்திரத்தை உருவாக்கி உள்ளார் திருவாரூர் பாடசாலை மாணவி. இந்தத் தையல் இயந்திரம் தைக்கும் நேரத்திலேயே, தண்ணீரை வீட்டு உபயோகத்துக்காக இறைத்தல், மின்சாரத்தை உற்பத்தி செய்து மின் கலத்தில் சேமித்தல் போன்றவற்றை மேற்கொள்ளவல்லது. (வ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். மீது தாக்குதல் ஆரம்பம்

வொஷிங்டன், செப்.25

ஈராக்கில் உள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது மட்டுமே இதுவரை தாக்குதல் நடத்தி வந்த அமெரிக்கா, நேற்று முன்தினம் இரவு தொடக்கம் சிரியாவில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மீதும் குண்டு வீசி தாக்கு தலை ஆரம்பித்தது.

ஈராக், சிரியா ஆகிய நாடு களில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் உள்ளனர். அவர்கள் அந்த நாடுகளின் அரசுகளுக்கு எதிராக போரில் ஈடு பட்டு வருகின்றனர். இதில் ஏராளமான பொது மக்கள் உயிரிழந்து வருகின்றனர். வன்முறைக்கு பயந்து லட்சக்கணக்கான மக்கள் வெளி நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். கடந்த ஓரிரு நாளில் மட்டும் சிரியாவில் இருந்து ஒரு லட்சத்து 30 ஆயிரம் அப்பாவி மக்கள் அகதிகளாக துருக்கியில் தஞ்சமடைந்துள்ளனர். ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்கா 50 நாடுகளின் கூட்டுப்படைக்கு



தலைமையேற்று, ஈராக்கில் தாக்கு தல் நடத்தி வருகிறது.

இந்தநிலையில், சிரியாவிலும் தீவிர வாதிகளின் அட்டூழியம் அதிகரித்து வருவதையடுத்து அங்கும் தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த 11 ஆம் திகதி அறிவித் தார். அதன்படி, சிரியாவில் உள்ள தீவிரவாதிகள் முகாம் கள் மீது நேற்று முன்தினம் இரவு முதல் அமெரிக்கப் படைகள் குண்டுகளை வீசி தாக்கு தலை ஆரம்பித்தன. சவூதி அரேபியா, ஜோர்டான் நாடு களும் அங்கம் வகிக்கும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர், சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப் பின் முக்கிய கேந்திர நகரமாகத் திகழும் ராக்கா நகரத்தில் கட்டடங்களை குறிவைத்து குண்டுகளை வீசினர். போர் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. ஏவுகணைகள் ஏவப்பட்டன.

தாக்குதல் குறித்த விவரமான தகவல்களை இப்போதைய சூழ்நிலையில் தெரிவிப்பது நல்லதல்ல என்று பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜான் கெர்பி தெரிவித்தார். (வ)

## சித்திரவதை கருவிகளை ஏற்றுமதி செய்யும் சீனா

பீஜிங், செப்.25

உலக நாடுகளிலுள்ள பொலிஸார் ஆள்களை சித்திரவதைச் செய்வதற்குப் பயன்படுத்தும் கருவிகளை தயாரித்து ஏற்றுமதி செய்வதாக சீன நிறுவனங்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



அரசுக்குச் சொந்தமான சுமார் 130 நிறுவனங்கள் முள்கள் கொண்ட உலோகத் தடிகள், பெருவிரல்களைப் பூட்டும் விலங்குகள், கழுத்தையும் கைகளையும் சேர்த்துக் கட்டும் கருவிகள் போன்ற சித்திரவதை ஆயுதங்களை தயாரிப்பதாக அம்னஸ்டி இன்டர் நஷனல் கூறுகின்றது.

சில கருவிகள் பொலிஸாரின் சட்டரீதியான தேவைகளுக்குப் பயன்பட்டாலும் மற்றையவை கொடூரமான சித்திரவதைகளுக்கே பயன்படுபவை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் மோசமான மனித உரிமைச் சூழலைக் கொண்டுள்ள நாடுகளே பெரும்பாலும் இந்த கருவிகளை வாங்குவதாகவும் அம்னஸ்டி இன்டர் நஷனல் கூறுகின்றது. (வ)

## பாக்.கார் குண்டு வெடிப்பில் 4 பேர் சாவு

இஸ்லாம்பாத், செப்.25

பாகிஸ்தானில் பாதுகாப்புப் படையினரை ஏற்றிச் சென்ற வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட மனித வெடி குண்டுத் தாக்குதலில் ஒரு பெண், குழந்தை உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்தனர்.

பெஷார் நகரத்தில் ஃபிரான்டியர் படையினர் என்ப்படும் எல்லைப் படைப் பிரிவினரை ஏற்றிச் சென்ற வாகனத்தைக் குறிவைத்து மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவ வாகனங்கள் செல்லும் வீதியின் ஓரத்தில் வெடி குண்டுகள் பொருத்திய கார் நிறுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்புப்படையினரின் வாகனம் அந்தப்பகுதிக்கு வந்ததும் காரை வெடிக்கச் செய்தனர். (வ)

## மனித வெடிகுண்டுத் தாக்குதல் ஈராக் படையினர் 40 பேர் சாவு

பக்தாத், செப்.25

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன் தினம் நடத்திய மனித வெடி குண்டுத் தாக்குதலில் 40 படையினர் உயிரிழந்துள்ளனர்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் உலக நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வருகிறார்கள். அவர்களைக் களையெடுப்பதற்காக அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கத்திய நாடுகள் ஈராக்குக்குப் போர் ஆயுதங்களை வழங்கி வருகின்றன. அந்த ஆயுதங்களைப் பயன்படுத்தி, இராணுவத்துக்கு துணையாக குர்திஷ் இனத்தவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், தலைநகர் பக்தாத்தில் இருந்து சுமார் 70 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சிஜிர் நகரில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் ஈராக் இராணுவத்தைச் சேர்ந்த 40 படையினர் உயிரிழந்துள்ளனர். (வ)

## பின்லேடனின் மருமகனுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

நியூயோர்க், செப்.25

அமெரிக்கர்களை கொல்ல திட்டமிட்டது, தீவிரவாதிகளுக்கு உதவியது உள்ளிட்ட குற்றங்களுக்காக அல் கொய்தா தலைவர் ஒசாமா பின் லேடனின் மருமகன் சுலைமான் அபு கெய்துக்கு நியூயோர்க் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை தீர்ப்பளித்தது.

ஒசாமா பின் லேடனின் மருமகன் சுலை மான் அபு கெய்த் (வயது 48).

அமெரிக்காவில் வசித்து வரும் அவர் அமெரிக்கர்களை கொலை செய்யத் திட்டமிட்டது, தீவிரவாதிகளுக்கு உதவியது உள்ளிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ)

# இந்தியா வரலாற்று சாதனை

## செவ்வாய்க் கிரக சுற்றுவட்ட பாதையில் இணைந்தது மங்கள்யான் விண்கலம்

பெங்களூர்.செப்.25
மங்கள்யான் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் சுற்று வட்டப்பாதையில் வெற்றிகரமாக இணைந்ததாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

முதலாவது முயற்சியிலேயே செவ்வாய்க் கிரகத்தின் சுற்று வட்டப் பாதைக்குள் விண்கலத்தைச் செலுத்திய பெருமை இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.

நேற்றுக் காலை 7.59 மணிக்கு மங்கள்யான் விண்கலம் செவ்வாய் சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டதை இஸ்ரோ தலைவர் இராதாகிருஷ்ணன் உறுதிப் படுத்தினார்.

உலகமே ஆவலோடு எதிர் பார்த்திருந்த இந்த அரிய நிகழ்வை பிரதமர் நரேந்திர மோடி பெங்களூரில் உள்ள இஸ்ரோ தரைக்கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்து பார்வையிட்டார்.





"மங்கள்யான் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாய் சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டதைப் பாராட்டிப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, புதிய வரலாறு படைத்துவிட்டோம்.

எமக்கு தெரியாத ஒன்றை சாத்தியப்படுத்தியிருக்கிறோம். அடைய முடியாததை அடைந்திருக்கிறோம்.

மங்கள்யான் விண்கலத்தை, 65 கோடி கிலோ மீற்றர் தூரத்தை வெற்றிகரமாக கடக்கச் செய்து, மனித முயற்சிகளுக்கு அப்பாற்பட்டதைச் செய்து காட்டியிருக்கிறோம்.

கற்பனைக்கு அப்பாற்பட்ட இலக்கை அடைந்துள்ளோம். முதல் முயற்சியிலேயே செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதைக்குள் விண்கலத்தை செலுத்திய பெருமையை இந்தியாவுக்கு இஸ்ரோ விஞ்ஞானிகள் பெற்றுத் தந்திருக்கின்றனர்.

அதுவும், மிகக்குறைந்த செலவில் மங்கள்யான் விண்கலம் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிதிக்கட்டுப்பாட்டுக்களை நெருக்கடியாக கருதாமல் விஞ்ஞானிகள் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

செவ்வாய்க்கிரக ஆய்வுக்காக அனுப்பப்பட்ட 51 விண்கலங்களில் இதுவரை 21 மட்டுமே வெற்றியடைந்துள்ளன. ஆனால், நாம் தடைகளைக் கடந்து வெற்றி கண்டுள்ளோம் என்று இஸ்ரோ விஞ்ஞானிகளை வெகுவாக பாராட்டினார் மோடி.

செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட மங்கள்யான் புகைப்படங்களை அனுப்பத் தொடங்கியுள்ளதாகவும், மங்கள்யானில் உள்ள 5 கருவிகளில் ஒன்றான கமரா வண்ண புகைப் படங்களை அனுப்பியுள்ளதாகவும் அதன் புகைப் படங்கள் உடனடியாக மாலையில் வெளியிடப்படும் என்றும் பெங்களூரில் இஸ்ரோ தரைக் கட்டுப்பாட்டு மைய துணை இயக்குநர் பிச்சை மணி நேற்றுத் தகவல் தெரிவித்துள்ளார்.

மங்கள்யானின் வெற்றியைத் தொடர்ந்து அமெரிக்க விண்வெளி ஆய்வு அமைப்பான நாஸா இந்தியாவின் இஸ்ரோவுக்கு முதலாவதாக வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

(வ)




யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் கவுன்சிலின் முதலாவது
Parents' Open Day இற்கு வாருங்கள்!

உங்கள் பிள்ளை எழுத வாசிக்க உதவுங்கள்

உங்கள் பிள்ளை ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ள உதவுங்கள்

உங்கள் பிள்ளைக்கு ஆர்வமூட்டகூடிய வகையில்வாசித்துகாட்ட கற்றுகொள்ளுங்கள்

வகுப்பறையில் உங்கள் பிள்ளைகள் கற்கும் முறையினை அறிந்துகொள்ளுங்கள்

யாருக்கு: எம்மிடம் பயிலும் மற்றும் புதிதாக இணைய விரும்பும் மாணவர்களின் பெற்றோர்

நாள்: ஞாயிறு 28 புரட்டாதி

இடம்: பிரிட்டிஷ் கவுன்சில் யாழ்ப்பாணம்

நேரம்: காலை அமர்வுகள் ஆரம்பம் மு ப 9.00
மதிய அம்ர்வுகள் ஆரம்பம் பி ப 1.30

அனுமதி: இலவசம்

இலவச பதிவுகளை மேற்கொள்ள அழையுங்கள் !

மேலதிக தகவல்களுக்கு:
பிரிட்டிஷ் கவுன்சில் யாழ்ப்பாணம்
70 றக்கா வீதி. சுண்டுக்குளி. யாழ்ப்பாணம்
T (021)7521521 ext. 6904
E info.lk@britishcouncil.org

www.britishcouncil.lk

## வெள்ளத்தால் 53 சாவு

### 3 லட்சம் பேர் தவிப்பு

கவுகாத்தி, செப்.25
இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மேகாலயாவில் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 53 பேர் உயிரிழந்துள்ளனர். 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வட கிழக்கு மாநிலங்களான அசாம், மேகாலயாவில் கடந்த 3 நாள்களாக கனமழை கொட்டி வருகிறது. இதனால், இரு மாநிலங்களிலும் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

திங்கட்கிழமை இரவு வரை அசாமின் கவு காத்தியில் 162.56 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. அசாமில் இதுவரை மழைக்கு 8 பேர் உயிரிழ்ந்துள்ளனர். (வ)

## நீர்த்தேக்கத்தில் கவிழ்ந்தது பஸ் 12 பேர் சாவு

இமாச்சலப் பிரதேசம் மாநிலம் பிலாஸ்பூர் மாவட்டத்தில் பஸ் ஒன்று நேற்றுக் காலை கட்டுப்பாட்டை இழந்து கோபிந்த சாகர் நீர்தேக்கத்தில் விழுந்தது. இந்த விபத்தில் பயணிகள் 12 பேர் உயிரிழந்தனர். சம்பவம் குறித்து மாவட்ட எஸ்.பி. அசோக்குமார் கூறுகையில்; பஸ்ஸில் எத்தனை பேர் இருந்தனர் என்பது உறுதியாக தெரியவில்லை. எனவே சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது - என்றார். (வ)

## 20 வயதான இளைஞனை அடித்துக் கொன்றது புலி

டில்லி, செப்.25
டில்லி உயிரியல் பூங்காவில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த ஒரு வெள்ளைப் புலி தாக்கியதால், 20 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் செவ்வாய்க்கிழமை பிற்பகல் உயிரிழந்தார்.



'விஜய்' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த வெள்ளைப் புலி அடைத்து வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு பகுதிக்குள் அத்துமீறி இளைஞன் நுழைந்ததாலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த அந்த இளைஞனின் பெயர் மக்சூத் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் டில்லியைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞன், அடைக்கப்பட்ட பாதுக்காப்பு வேலியை தாண்டி குதித்ததால் தாக்கப்பட்டான் என்று பூங்கா இயக்குநரின் அறிக்கை கூறுகின்றது. (வ)

## சென்னை விமான நிலையத்தில் 14 கிலோ தங்கம் பறிமுதல்

சென்னை.செப்.25
ஒரே நாளில் சென்னை விமான நிலையத்தில் 14 கிலோ கடத்தல் தங்கத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். தங்க கடத்தலுக்கு உதவியதாக சுங்கத்துறை அதிகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

டுபாயிலிருந்து சென்னைக்குச் சென்ற ஆந்திராவைச் சேர்ந்த பெண்ணிடம் 10 கிலோ கடத்தல் தங்கத்தை சுங்கத் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்த புதுக்கோட்டையைச் சேர்ந்த சித்திக் என்பவரிடம் இருந்து 4 கிலோ தங்கத்தை மத்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் பறி முதல் செய்துள்ளனர். (வ)



நவராத்திரி விரதம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. 9 நாள்கள் நடைபெறும் இந்த விரதத்தை இந்தியாவின் பல பாகங்களிலும் உள்ள இந்து சமய மக்கள் பக்தி பூர்வமாகக் கடைப்பிடிக்கத் தொடங்கியுளளனர். விரதத்தை முன்னிட்டு பல்வேறு சமய, கலை நிகழ்வுகளும் ஆரம்பமாகியுள்ளன. அகமதாபாத் நகரில் நவராத்திரி விரதத்தை முன்னிட்டு கண்கவர் நடன நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.



மாவனல்ல பஸ் தரிப்பிட கட்டடத் தொகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. அதில் சுமார் 17 கடை கள் எரிந்து நாசமாகியுள்ளன. தீயணைப்புப் படையினருடன் இணைந்து பொதுமக்கள் மற்றும் பொலிஸார் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (ற-10)

## சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் தாமதமாகும்

### பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி கூறுகின்றார்

கொழும்பு, செப்.25

சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது தாமதமாகலாம் என்று தெரிவித்துள்ளார் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி. இந்த சட்டமூலத்துக்கு எதிராக தனிநபர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இதன் காரணமாகவே அதனை நாடாளுமன்றத்தில் அதனை நிறை வேற்றுவதற்குத் தாமதமாகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"சட்ட மூலம் தொடர்பாக நீதிமன்றம் ஆராய்ந்து தீர்ப்பளித்த பின்னரே நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும்"- என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய குறிப்பிட்ட சட்ட மூலம் அவசியம் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருகின்றது. இந்தநிலையிலேயே பிரதிச் சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ற)

> "ஐ.நா. விசாரணைக் குழுவிடம் சாட்சியமளிப்போரின் பாது காப்பை உறுதி செய்ய குறிப்பிட்ட சட்ட மூலம் அவசி யம் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்துகின்றது. இந்தநிலையிலேயே பிரதிச் சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுக்கு அவசர கூட்டம்

கொழும்பு, செப்.25

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் அவசரமாக நேற்று கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கட்சியின் தலைமை அலுவலகத்திலிருந்தே அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிகின்றது.

கட்சியின் தலைவரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் இல்லாத சமயத்தில், இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறித்து அரசியல் வட்டாரங்களில் பரபரப்புத் தோன்றியுள்ளது. ஜனாதிபதி நாடு திரும்பிய பின் சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு எதிர்வரும் 29ஆம் திகதி கூடவுள்ளது. (ற)

# கலைந்தது ராஜபக்ஷவின் கனவு

### ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, செப்.25

"ஊவா மாகாண சபைத் தேர்தல், எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்ட தேர்தல்களின் முன்னோடி என்று தேர்தலுக்கு முன்னேரே நாம் கூறினோம். அது இப்போது சரியாக நடந்து விட்டது. இந்த தேர்தலில் மக்கள், குறிப்பாக சிங்கள மக்கள், அரசுக்கு ஒரு செய்தியைக் கூறியுள்ளார்கள். போர் வெற்றி என்ற கோஷத்தை அரசியல் சந்தையில் விலைக்கு வாங்க இனிமேலும் நாங்கள் தாயரில்லை என்று அரசுக்கு அவர்கள் கூறியுள்ளார்கள்."- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஊடக மாநாடு நேற்றுக் கொழும்பில் நடந்தது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அடுத்த 25 ஆண்டுகளுக்கு மகிந்த சிந்தனை ஆட்சியே என்ற கனவுக் கோட்டை தகர தொடங்கிவிட்டது. இது இன்று அரச உயர் மட்டத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. 2040ஆம் ஆண்டு வரை ராஜபக்ஷக்களின் ஆட்சியே என்று கூறி தங்கள் தடம்புரள்கைகள், தடுமாற்றங்கள் மற்றும் அரசின் மனித உரிமை மீறல்கள், இன-மதவாத கொள்கைகள் ஆகிய அனைத்து குற்றங்களையும் மூடி மறைக்க எத்தனித்தவர்களின் கனவுகளில்மண் விழுந்துவிட்டது"-என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

இனவாதத்தையும், மதவாதத்தையும், அடிப்படை வாதத்தையும் உபயோகித்து , சோரம் போனவர்களை பயன்படுத்தி எங்களை ஆள நினைக்காதீர்கள்."- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## 'பொக்ஸ் சீற்' சொகுசு ரயில் சேவைகள்

கொழும்பு, செப்.25

அனைத்து ரயில் சேவைகளிலும், 'பொக்ஸ் சீற்' எனப்படும் இரு பக்கங்களும் மறைக்கப்பட்ட ஆசனங்களை அறிமுகப்படுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் ஆராய்ந்து வருகின்றது.

அந்தத் திட்டத்தின் கீழ் கடந்த 20 ஆம் திகதி குறித்த ஆசனங்களுடனான ரயில் பெட்டி ஒன்று மருதானையில் இருந்து மாத்தறைக்குப் பயணிக்கும் ரயிலில் இணைக்கப்பட்டுள்ளது. அதற்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து ஏனைய ரயில் சேவைகளிலும் அவை இணைக்கப்படவுள்ளன.

இந்த ஆசனங்களுடனான சொகுசு ரயில் பெட்டிகளில் பயணிப்பதற்கு விசேட கட்டணம் அறவிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)



## தேரருக்கு மார்புக் கச்சை பரிசளித்த ஆளும் கட்சி வேட்பாளர்!

கொழும்பு, செப். 25

ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட ஆளுங் கட்சி வேட்பாளரொருவர், மொனராகலையைச் சேர்ந்த தேரர் ஒருவருக்கு பரிசளித்த மருந்துப் பொதிக்குள் பெண்கள் அணியும் மார்புக்கச்சையொன்றும் இருந்தது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார. இந்தத் தகவலை அவர் நேற்று நாடாளுமன்றில் வெளியிட்டார்.

ரங்கே பண்டார, அந்த மார்புக் கச்சையையும் நாடாளுமன்றத்துக்கு எடுத்து வந்திருந்தார். அதில் ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி சார்பாகப் போட்டியிட்ட முதலமைச்சர் வேட்பாளர் சஷிந்திர ராஜபக்ஷவின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார். (ற)

## எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய இதுவே சரியான சந்தர்ப்பம்

### வலியுறுத்துகிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா



கொழும்பு, செப்.25

அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று வலியுறுத்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தற்போதுள்ள அரசு மக்கள் விரோதப் போக்கை கொண்டுள்ளது. நாட்டின் மீது அக்கறையின்றி செயற்படுகின்றது. அதனை மாற்ற எதிர்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதற்கான அருமையான வாய்ப்பை வழங்கியுள்ளது. இதைத் தவறவிடக் கூடாது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து நாட்டில் மீண்டும் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும். நாட்டின்மீது அக்கறையுள்ள அனைவரும் அதற்காக முன்வர வேண்டும்.

எனக்குப் பதவி ஆசையில்லை. மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் எண்ணமும் இல்லை. ஆனால் மக்கள் விரோத ஆட்சியை அகற்ற எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் அதற்கு பூரண ஆதரவை அளிப்பேன்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கேக் வெட்டி வெற்றியை கொண்டாடினார் ஹரின்



கொழும்பு, செப்.25

ஊவா மாகாணத்தில் கிடைத்த வெற்றியை ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்ட ஹரின் பெர்னாண்டோ கட்சியின் பிரதிநிதிகளுடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அப்போதே இந்த வெற்றிக் கொண்டாட்டம் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, தலைமைத்துவச் சபையின் தலைவர் கரு ஜயசூரிய, தயா கமகே, கே. வேலாயுதம் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஊவா மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்ட ஹரின் பெர்னாண்டோ பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு ஒரு லட்சத்து 73 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றிருந்தார். (ற)

## ரிலாக்ஸா வாசியுங்க

ஒரு போக்குவரத்து சமிக்ஞையில் ஒரு ஊன முற்ற சிறுமி நின்று கொண்டிருந்தாள். அங்கு ஒரு கார் வந்து நின்றது. அந்தச் சிறுமி சிறிது நேரம் அந்தக் காரில் உள்ள நபரை உற்று பார்த்துக் கொண்டிருந்தாள். பின்னர் அந்த காருக்கு அருகில் சென்று கதவை தட்டினாள். கண்ணாடி திறக்கப்பட்டது. அங்கு புகை பிடித்தபடி ஒரு நபர் அமர்ந்திருந்தார்.

கிழிந்த ஆடைகளுடன் கையில் தடியுடன் இருந்த சிறுமியை பார்த்து என்னம்மா ? காசு வேண்டுமா? என்று கேட்டார். சிறுமியிடம் இருந்து பதில் வரவில்லை. அந்தச் சிறுமி காரில் இருந்த அனைவரையும் சுற்றிச் சுற்றி பார்த்தாள். காருக்குள் ஒரு கைக்குழந்தையுடன் ஒரு பெண் அமர்ந்திருந்தாள்.

"இந்தா பொண்ணு உனக்கு என்ன வேண்டும்?" என்று அவர் மீளவும் கேட்டார்.

எனக்கு எதுவும் வேண்டாம் ஐயா. உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் எல்லாவற்றையும் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களா?" என்று கேட்டாள். "ஆம்! ஏனம்மா இப்படி கேட்கிறாய்" என்று அவர் கேட்டார்?

"உங்கள் பிள்ளைகளுக்கு எல்லாத்தையும் கொடுங்கள். ஆனால் என்னை மாதிரி அவர்களுக்கும் வறுமையை கொடுத்துவிடாதீர்கள். இன்றைக்கு நீங்கள் என்னை பிச்சைக்காரி என்று நினைத்ததைப் போல் நாளைக்கு உங்கள் மகளை யாரும் நினைத்து விடக் கூடாது. இந்த புகைபிடிக்கும் பழகத்தை இன்றோடு விட்டுத்தள்ளுங்கள். உங்களைப் போன்ற ஓர் அப்பா எனக்கு இருந்ததால்தான் நான் இன்று, ஒரு அனாதையாய் பிச்சைக்காரியை போல் உங்கள் முன்நிற்கிறேன். இந்த நிலை உங்கள் மகளுக்கும் வரவேண்டுமா?" என்று கேட்டாள் அந்தச் சிறு பெண்.

சட்டென்று சிகரெட்டை கீழே போட்டார். "என்ன ஐயா! சிகரெட் சுட்டுவிட்டதா?" என்று அந்த சிறுமி கேட்டாள். "இல்லை அம்மா நீ சொன்ன வார்த்தைகள்தான் என்னை சுட்டு விட்டன" – என்றார்.



பலூனுக்காக ஏங்கும் குழந்தைகளை
பார்த்திருப்போம்
பலூனுடன் ஏங்கும் குழந்தைகளை
பாருங்கள்
இப்போது புரியுமே
பணத்தைவிட, பாசம் பெரிதே....

### சிந்தையின் சலனம்

விடுதலை பெற மனிதன் உபயோகிக்கவேண்டிய துறை யாது?

விடுதலை பெறுவதற்கு மனிதன் சிந்தையாகிய துறையை உபயோகிக்க வேண்டும். நாம் எங்கிருந்தாலும் சிந்தையே மிக முக்கிய மானதாகும். வீடோ அன்றிக் காடோ எமக்கு விடுதலையைத் தராது.




## அழகால் மற்றவர்களைக் கவரலாம்

காஷ்மீர் வெள்ள நிவாரணத்துக்கு சுருதிஹாசன் நிதி உதவி வழங்கியுள்ளார். காஷ்மீர் வெள்ள இடருக்கு இந்திய மத்திய அரசு நிவாரண நிதி திரட்டி வருகிறது. இதற்கு நன்கொடைகள் வழங்கும்படி பிரதமர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதை ஏற்று ஹிந்தி நடிகர்கள் சல்மான்கான், அபிஷேக் பச்சன், ஹிருத்திக் ரோஷன், குணால் கபூர், சோனாக்சி சின்ஹா உள்ளிட்டோர் நிதி உதவி வழங்கியுள்ளனர். இவர்களுடன் சுருதி ஹாசனும் சேர்ந்துள்ளார். வெள்ள நிவாரண நிதியாக பெரிய தொகையை நன்கொடையாக கொடுத்துள்ளார். மாணவர்களும் சமூக இயக்கங்களும் இதில் பங்கெடுத்து நிதிஉதவிகள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு உள்ளார்.



சுருதிஹாசன் பரபரப்பான நடிகையாகியுள்ளார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி படங்களில் நடிக்கிறார். அழகும் புத்திசாலித்தனமும் சுருதிஹாசனிடம் நிறைய இருக்கிறது என்று திரையுலகத்தினர் புகழ்கிறார்கள். இது குறித்து சுருதிஹாசன் கூறும்போது, அழகு மட்டும் இருந்தால் போதாது அறிவும் வேண்டும். அறிவு இல்லாத அழகு பயனற்றது.

அழகால் மற்றவர்களை கவரலாம். ஆனால் வாழ்க்கையில் நல்ல முடிவுகள் எடுப்பதற்கு புத்திசாலித்தனம் வேண்டும் என்கிறார்.


## குண்டு பூனை

அமெரிக்காவில் 13 கிலோ நிறையுடன் ஒரு பூனை தெருக்களில் உருண்டு கொண்டிருந்தது. அந்தப் பூனையை ஒருவர் மீட்டு விலங்குகள் பாதுகாப்பு நிலையத்தில் சேர்த்து விட்டார். தற்போது அந்த பூனை உடல் எடை குறைந்து, 'ஸ்லிம் மாக' மாறி விட்டது. லியோ என்றழைக்கப்படும் அந்த பூனை இப்போது மெல்லியதாகக் காட்சியளிக்கிறது. மெல்லிய உடல் வாகுடன் லியோ 'கட்வோக்' செய்வதைப் பார்த்து, மற்ற பெண் பூனைகள், லியோவுக்கு ரொமான்டிக்லுக் விட்டு வருகிறது என்று காப்பகத்தை சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.



### இன்றைய பேஸ்புக் தத்துவம்

அடுத்தவனுக்கு கிடைத்து விட்டதே என்று பொறாமை படாத ஒரே விடயம் 'சாவு'



## கூரையைப் பிய்த்தெறிந்த அதிர்ஷ்டம்

வடக்கு லண்டனில் வசிக்கும் ஜோசப் வைட்டிங் (வயது -42) என்பவருக்கு தனது கண்களை தன்னாலேயே நம்ப முடியவில்லை.


தனது தாயாருக்கு தொலைபேசியூடாக விபரத்தை கூறியபோது, "முட்டாள் பயலே, காலையிலேயே ஜோக் அடிக்க கிளம்பிட்டியா" என்று அந்த அம்மையார் சலித்துக் கொண்டார். "அம்மா, நான் பொய் சொல்லவில்லை. சத்தியமா நான் வாங்கின அதிர்ஷ்டலாபச் சீட்டுக்கு 45 லட்சத்து 70 ஆயிரத்து 887 பவுண்ஸ் (இலங்கை ரூபாவில் அண்ணளவாக 100 கோடி) பரிசு விழுந்திருக்கு. அந்த அதிர்ஷ்டலாபச் சீட்டை தூக்கி குப்பையிலே போட வேண்டாம் என்று அழுத்தம் திருத்தமாக ஜோசப் கூறியும் "வேலையைப் பாருடா" என்று கூறி அவரின் அம்மா தொலைபேசியை வைத்துவிட்டார். வழக்கம் போல அதிகாலை 5 மணிக்கு வீதியைத் துப்புரவு செய்யும் வேலைக்குப் புறப்பட்ட ஜோசப், அந்த அதிர்ஷ்டலாபச் சீட்டுக் கடை வாசலுக்கு வந்தபோது, அவர் வாங்கிய சீட்டுக்குத்தான் பரிசு விழுந்துள்ளது என்பதை உறுதி செய்துக் கொண்டார்.

என்னும், கோடீஸ்வரனாகி விட்டோமே என்ற ஆணவம் கொஞ்சமும் இன்றி வழக்கம் போல் துடைப்பத்தைப் பிடித்து தனக்கு ஒதுக்கப்பட்ட தெருவைத் துப்புரவாக்கியுள்ளார்.

## விரிவடையும் கூகுள்

கூகுள் நிறுவனமானது நெதர்லாந்திலுள்ள தனது தகவல் மையத்தை விரிவுபடுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. சுமார் 600 மில்லியன் பவுண்ஸ் செலவினை அடிப்படையாகக் கொண்ட இந்த விரிவாக்கற் திட்டத்தில் 1000 இற்கும் அதிகானமவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதில் 150 இற்கும் அதிக மானவர்கள் முழுநேர வேலை மற்றும், ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களில் தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள், இலத்திரனியல் நிபுணர்கள், இயந்திரவியல் பொறியியலாளர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்பவர்கள் அடங்குகின்றனர். இதேவேளை- இந்த விரிவாக்கற் திட்டமானது 2016 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் முடிவடையும்.



## ஜாதகம் பார்க்கும் நிறுவனங்கள்

சீனாவில் பெரும்பாலான நிறுவனங்களில் வேலை தேடிச் செல்வோரின் ஜாதகத்தைப் பார்த்துத்தான் வேலைக்குத் தேர்வு செய்கின்றார்கள்.

வேலை தேடி வருவோருக்கும், ஏற்கனவே அங்கு வேலை பார்ப்போருக்கும் இடையே ஒத்துப் போகுமா, ராசிப் பொருத்தம் சரியாக இருக்கிறதா என்று பார்த்த பின்னர்தான் வேலைக்குச் சேர்த்துக் கொள்கின்றார்கள். அதை விட முக்கியமாக சில வகை ராசிக்காரர்களை வேலைக்கே தெரிவு செய்வதில்லை.

பொருத்தம் பார்த்து, ஜாதகம் பார்த்து வேலைக்குச் சேர்க்கும் பழக்கம் ஏஷ்யாவில் பரவலாக உள்ளது. ஒருவருக்கு வேலையில் நாட்டம் இருக்குமா, அவர் சரியாக வேலை செய்வாரா? அவரால் நிறுவனத்திற்கு இலாபம் இருக்குமா? சக ஊழியர்களுடன் ஒத்துப் போவாரா? என்பதையெல்லாம் கண்டுபிடிக்க ஜாதகத்தையே பெரும்பாலான நிறுவனங்கள் நம்புகின்றன.

திறமைக்கு வேலை கொடுப்பது போய் ஜாதகத்துக்கு வேலை கொடுக்கத் தொடங்கியிருக்கின்றார்கள்.

## நினைவுகளே என்றென்றும் இனிமை...



வலி கண்ட இதயத்தின் வலிகளை உணர்ந்து
ஓயாமல் துரத்தும்– உன்
நினைவுகளை இடைவிடாமல் சுமந்து
கனவில் வருகின்றது நம் காதல் பவனி
இதனை அறிய நீ என் இதயத்தை உற்றுக் கவனி
தூரத்தில் சென்றால் உன் நினைவுகள் தொல்லை
தூங்கினாலும் துயில் என்பது இல்லை
இதை அறிவாயோ என் இன்பக் கிள்ளை
மலர் வாடக் காரணம் உதயமாகும் வெய்யோன்
ஒரு மங்கை வாடக் காரணம்
அவள் நெஞ்சில் உதயமாகும் காதல்
இதயத்தின் சோக கீதங்களை
தினம் பிரசவிக்கின்றேன் இனிய காவியங்களாய்
இயற்கையை நேசித்தேன் வரவில்லை கவி
உன்னை நேசித்தேன் கவியே
சொல்கின்றது– நீ தான் என் பிரியசகி
என் கவியின் ஊற்று நீயாக இருந்தால்
அதில் ஒரு துளி நானாக மாட்டேனா?
காதல் எனும் பூங்காவனத்தில் பறந்து திரிந்து
சிறகொடிந்த பட்டாம் பூச்சியின்
பரிதாபக் கவி– இதுவன்றோ
பிரிவின் கொடுமை நினைவுகளுக்கு இனிமை
காதல் சாதலுக்கு இனிமை....

என்.பிறின்சி, சுதுமலை

# காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது பெண்களே

இன்றைய நடைமுறை சமூகத்தை நாம் எடுத்து நோக்கினோமானால் காதல் என்ற ஒன்று எமது இளைஞர்கள் மத்தியில் மிக அத்தியாவசியமான ஒன்றாகவே காணப்படுகின்றது.

கண்டதும் ஆசை கதைத்ததும் காதல். இது தான் காதல் என்ற கோட்பாட்டிலேயே இன்றைய காதல் நிலைமையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான காதல் நிலையில் காதல் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது பெண்களாகவே இருக்கிறார்கள்.

இன்றைய கால ஆண்கள் காதல் என்னும் பெயரில் பெண்களிடம் உள்ள ஓர் வகை எதிர்பார்க்கையான பலவீனத்தை வைத்தே காதல் கொள்கிறார்கள். பெண் ஆனவள் எதற்காக காதல் கொள்கிறாள் என்று நாம் பார்ப்போமாயின், ஒரு பெண்ணுக்கு தனது குடும்பத்தில் இருந்து கிடைக்கப்பெறாத அன்பு, கருணை, பாதுகாப்பு இவை எல்லாம் இன்னொரு ஆண்மகனிடம் இருந்து கிடைக்கின்றபோது அவள் காதல் கொள்கிறாள். காதலனே உலகம், காதலனே வாழ்வு என்றெண்ணி அவன் மீது அளவற்ற காதல் கொள்கிறாள்.

தனது காதலன் தனக்கு மட்டும் உரியவன் என்றெண்ணி, அவன் சொல்லுகின்றதை எல்லாம் கேட்டு அவனுக்காகவே வாழத் தொடங்குகிறாள். ஆனால் காதலனோ அவள் தன் மீது கொண்ட உண்மைக் காதலைப் புரிந்து கொள்ளாது ஒரு சில மாதங்களில் ஏதோ ஒரு போலிச் சாட்டுச் சொல்லி அவளை விட்டு, இன்னொரு பெண் மீது காதல் கொள்கின்றான். பெண் களின் பலவீனத்தை வைத்து இன்றைய நடைமுறை சமூக ஆண்கள் ஏமாற்றி விடுகின்றார்கள்.

அன்று ஒரு காலம் காதலில் தோல்வி கண்ட ஆண்மகன் மடல் ஊர்ந்து தன் இன் உயிரை மாய்த்தான். இன்று ஆண்கள் ஏமாற்றி விட்டு போனமை தெரிந்தும் பெண்கள் அவனை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு அவனைத் தேடிச் செல்கிறார்கள். ஆனால் ஆண்களோ "நீ எனக்கு வேண்டாம். உனக்கும் எனக்கும் ஒத்துவராது.



உனக்கு நல்ல வாழ்க்கை இருக்கு" என்ற வார்த்தையால் காதல் இல்லை என்று அந்தக் காதலிக்கு ஒரு முழுக்கு போட்டு இன்னொரு பெண்ணைத் தேடுகிறார்கள்.

இவற்றையெல்லாம் இன்றை சமூகத்தில் எமது கண்முன்னே கண்டு கொண்டு இருக்கின்றோம். இவைதான் இன்றைய சத்தியமான காதல் நிலை.

காதலில் தோல்வி அடைந்து விட்டேன். காதலி ஏமாற்றி விட்டாள் என்று கதறும் ஆண்கள் எவரையும் இன்றைய சமூகத்தில் நாம் காணமுடியாது. காதலில் தோல்வி அடைந்து விட்டேன். காதலன் ஏமாற்றி விட்டான் என்று கதறி அழும் பெண்களே இன்று அதிகம். காதலன் தனது உண்மைக் காதல் புரியும்போது ஒரு நாள் என்னைத் தேடி வருவான் என்று காத்திருக்கும் பெண்களே இன்று எமது கண் முன்னே நிற்கிறார்கள்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

**காதலில் தோல்வியை அதிகம் எதிர்கொள்வது**

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-...........................................

முகவரி :-........................................

.......................... திகதி

.......................... கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# இளைஞர்கள் கையில்தான் எதிர்காலம்

இறந்த காலம் என்பது முடிவடைந்துவிட்டது. எதிர்காலம் என்பது கானல் நீர்போல விரட்ட விரட்ட நகர்ந்து போவது. அது என்றுமே கைகளுக்கு வராதது.

நிஜம் என்பது நிகழ்காலம் ஒன்று மட்டும்தான். ஆகவே எதிர்காலம் ஒப்படைக்கப்பட முடியாதது என்பது பல மகான்களின் நூல்களில் காணப்படும் எளிமையான செய்தியாகும்.

இப்படியோர் உண்மை தெரிந்த காரணத்தாலோ என்னவோ மேலும் சிலர் ஒருபடி மேலே சென்று இளைஞர்கள் கையில் எதிர்காலம் என்பதில் எதிர்காலத்தை வெட்டிவிட்டு முதலில் இளைஞர்களை பாராட்டுவோம் என்று சட்டெனக் கூறுகிறார்கள்.

வெளிப்பார்வைக்கு இது மிகச்சிறந்த வாதமாகத் தெரியும்.

ஆம். பாராட்டுவது உண்மையில் நல்ல விடயம்தான். அதில் யாரும் பிழை காண மாட்டார்கள்.

இப்படி பிழை காண முடியாத பாராட்டுதல்களை அடையாளம் காண வள்ளுவர் தனது குறளில் பல தகவல்களைத் தந்துள்ளார்.

இளைஞர்களை அதிரடியாக பாராட்டி மகிழ்வதோ அல்லது அவர்கள் கையில் தான் எதிர்காலமென முழங்குவதோ சரியான வாதமல்ல என்று கூறும் வள்ளுவர் அதற்கான தனது வாதத்தை இப்படி முன் வைக்கிறார்.

ஒரு பிள்ளை கற்றவருடைய அவையில் இருப்பதற்குரிய தகுதியை சிறுபிராயத்தில் இருந்தே வளர்த்து வரும் செயல் மட்டும்தான் இளைஞர்களை பாராட்டுவதற்குரிய உயர்ந்த செயல்.



அந்தச் செயலைச் செய்தால் கோஷங்கள் இல்லாமலே இளைஞன் பாராட்டுப் பெறும் இடத்துக்கு தானாக முன்னேறி விடுவான். அப்படி அந்த இளைஞன் பாராட்டுப் பெறும் சிகரங்களைத் தொடும்போது.. அடடா.. இவனை இப்படியொரு சிகரத்துக்குத் தூக்கிவிட்டவன் யாரென்று சமுதாயம் திரும்பிப் பார்க்கும் அப்போது அங்கே ஒரு முதியவன் பாராட்டுக்களுக்கு உரியவனாக நின்று கொண்டிருப்பார்.

எனவே பாராட்டு என்பது இளையோருக்கு மட்டுமல்ல முதி யோருக்கும் இணைந்து வரவேண்டும், அதற்குரிய செயலை செய்வதே பாராட்டு என்பது வள்ளுவர் கருத்து. மேலும் அவர் அதிலிருந்து ஒருபடி முன்னேறி ஒட்டுமொத்த திருக்குறளிலுமே இந்த விடயத்தையே எழுதாத செய்தியாகவும் பேசியிருக்கிறார்.

(தொடரும்)

## பெண் பாதம் பட்ட பேருந்து



பேருந்து ஜன்னல் வழியே
நுழைந்து வந்த தென்றல்
காற்று உன்
நுதல் மேற்படர்ந்து கிடந்த
கூந்தல் கற்றைகளை
என் விரல்கள் மீட்டுவதற்கான
வீணையின் தந்திகளாய்
பரிசளித்துச் சென்றது....

காற்றோடு கூடி வந்த உன்
கூந்தல் வாசம் காதல் துளிர்க்கும்
கானகம் வரை என்னைக்
கூட்டிச் சென்றது....
கவி பேசும் உன் கண்கள்
காதல் மொழி பேசச் சொல்லின....

மொட்டாகி மலராகி முகிழ்ந்து
பூவான பெண்ணே! உன்னை
பூ என்று சொல்லவா? இல்லைப்
பூக்கள் சொரியும் தேன்
என்று சொல்லவா?

பேருந்தில் நீயேறிப் போகையிலே
பாவையுன் பாதம் பட்டதால்
வெட்கித்துச் சிவந்தனவோ நம்
சாலைப் பேருந்துகள்
செந்நிறமாய்....?

கிரிஷாந்த், தம்பாலை

# பெண்கள், மீனவர் மன்னாரில் பேரணி

## அபிவிருத்திப் பிரச்சினைகளை தீர்க்கக்கோரி நேற்று நடத்தினர்

மன்னார், செப் 25
கிராமிய அபிவிருத்தி பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கோரி தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட 'வளர்பிறை' பெண்கள் தலைமைத்துவ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த அமைதி ஊர்வலம் நேற்றுப் புதன்கிழமை காலை மன்னாரில் இடம்பெற்றது.



மன்னார் பெற்றாவில் அமைந்துள்ள மன்னார் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அலுவலகத்தில் இருந்து இந்த ஊர்வலம் ஆரம்பமானது.
மன்னாரில் உள்ள 13 கிராமங்களின் பிரச்சினைகள் தொடர்பிலும், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் தீர்வு வழங்குமாறு கோரி இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.
இந்த ஊர்வலத்துக்கு பேசாலை, வங்காலை மீனவர்களும் ஆதரவு தெரிவித்து அதில் கலந்து கொண்டனர்.
தடை செய்யப்பட்ட மீன்பிடி தொழில்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் பக்கச்சார்புடன் நடந்து கொள்ளக் கூடாது எனவும் இதன்போது மீனவர்கள் கோரினர்.
மன்னார் மாவட்டத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், குறிப்பாகப் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அரசினால் கிடைக்கப் பெறுகின்ற உதவித்திட்டங்கள் அரசியல் ரீதியாகப் பக்கச் சார்புடன் வழங்கப்படுவது குறித்தும் ஊர்வலத்தின் போது குரலெழுப்பப்பட்டது.
ஊர்வலம் மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்து அங்கிருந்து மன்னார் மாவட்ட செயலகத்தை அடைந்தது.
இதன்போது பல கோரிக்கைகள் அடங்கிய மனு மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்லிடம் கையளிக்கப்பட்டது.



இந்த ஊர்வலத்தில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிக்ற் குரூஸ், மாவட்ட பெண்கள் அமைப்பின் பொறுப்பாளர் ஜெரால்ட் மேரி பிரியந்தா, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட-கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசு தாஸன், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு-கிழக்கு பெண்கள் திட்ட இணைப்பாளர் ரவினா அசந்தி உட்பட மன்னார் மாவட்ட வளர்பிறை பெண்கள் தலைமைத்துவ அமைப்பின் பிரதிநிதிகள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (த-56)

## பால் கொள்வனவு நிலையம் கற்சிலைமடுவில் வேண்டும்

### கால்நடை வளர்ப்போர் கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.25
பால் கொள்வனவு நிலையமொன்றைக் கற்சிலைமடுவில் அமைக்கவேண்டும் என அந்தப் பகுதியைச் சேர்ந்த பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கற்சிலைமடு, பண்டாரவன்னி, பேராறு, 3ஆம் கண்டம் போன்ற கிராமங்களில் உள்ள மக்கள் பாலைத் தனியார் ஒருவரிடம் கொடுத்தனுப்பும்போது அவர் அதனை ஒட்டுசுட்டான் பால் கொள்வனவு நிலையத்துக்கு எடுத்துச் செல்லும் செலவாக லீற்றருக்கு இரண்டு ரூபா பெறுகிறார். இதனால் கால்நடை வளர்ப்போர் பெரும் நட்டமடைவதாகக் கூறப்படுகின்றது.
அத்துடன் சிலர் நேரடியாகவும் ஒட்டுசுட்டானுக்குக் கொண்டு செல்வதால் நேர விரயமும் தொழில் முயற்சியும் பாதிக்கப்படுகிறது.
இதனால் ஏனைய கிராமங்களுக்கு மத்தியாக உள்ள கற்சிலை மடுவில் பால் கொள்வனவு நிலையத்துக்கான கட்டடம் அமைக்கப்பட்டிருந்தும் அங்கு பால் கொள்வனவுப் பணிகள் ஆரம்பிக்கப்படாமையால் தாம் பாதிப்படைவதாகக் கால் நடைவளர்ப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.
எனவே அமைக்கப்பட்டிருக்கும் பாற் கொள்வனவு நிலையத்தில் பாலைக் கொள்வனவு செய்ய பால் சபையினர் ஆவன செய்யவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-500)



## சட்டமா அதிபர் பாலித நேற்று மன்னாருக்கு திடீர்ப் பயணம்

மன்னார், செப் 25
சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுப் புதன்கிழமை மாலை மன்னாருக்கு வந்தார்.
அவர் மன்னார் மேல் நீதிமன்றத்தில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி மஹிந்த பினிதிய, மன்னார் நீதிவான் செல்வி ஆனந்தி கனகரட்ணம், மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போது சட்டமா அதிபருடன் வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான குற்றவியல் குடியியல் மேற்பார்வை அதிகாரியும், நிர்வாக அதிகாரியும் வருகை தந்திருந்தனர்.
சட்டமா அதிபரை மன்னார் அரச சட்டத்தரணி எம்.ஏ. எம்.லாபீர், மன்னார் சட்டத்தரணிகள் மாலை அணிவித்து வரவேற்றனர்.
இதனைத் தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்றக் கட்டடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப் பட்டதாகக் கூறப்பட்டது. (த-56)

## கற்சிலைமடுவில் மாதிரிப் பண்ணை

முல்லைத்தீவு, செப்.25
ஒரு கோடி 50 லட்சம் ரூபா ஜேர்மன் நிதி உதவியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்சிலை மடு 3 ஆம் கண்டம் பகுதியில் சேவாலங்கா நிறுவனத்தினால் மாதிரிக்கால்நடைப் பண்ணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கற்சிலை மடு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் இது நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.
இந்த மாதிரிக் கால்நடைப் பண்ணை 7 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதும், பொதுக் கிணறு மற்றும் குழாய்க் கிணறு வசதிகளைக் கொண்டதாகவும் உள்ளதுடன் 7 நல்லினக் கறவை இனங்கள் தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்பட்டு அங்கு பராமரிக்கப்படுகின்றன.
இங்கு 50 பயனாளிகள் பயிற்சி பெற்றுள்ள போதிலும் நவீன வசதிகள் இல்லாதமையால் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பண்ணைக்குச் சிறியரக வாகனமும் உள்ளமையால் எதிர்காலத்தில் நல்ல பயனை அடைய முடியும் என சேவாலங்கா நிறுவனத்தினர் தெரிவித்தனர்.
அத்துடன் இந்தக் கிராமத்தில் 30 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 26 பேருக்கு நல்லின கறவையினங்கள் வழங்கப்பட்டு சி-3 புல் இனங்களும் வழங்கப்பட்டன. (த-500)



## இந்திய மீனவர் 36 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

மன்னார், செப் 25
இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாகத் தொழிலில் ஈடுபட்டதாகக் கூறிக் கைது செய்யப்பட்ட 36 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.
இவர்கள் நேற்றுப் புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இதன்போது அவர்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி செல்வி ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டார்.
கடந்த 9ஆம் திகதி 6 இந்திய மீனவர்களும், கடந்த 11ஆம் திகதி 30 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## புதிய பஸ் தரிப்பு நிலையத்திற்கு அரச பஸ்களும் வரவேண்டும்

### வவுனியா தனியார் பஸ் சங்கம் கோரிக்கை

வவுனியாவில் புதிதாக அமைக்கப்படும் பஸ் தரிப்பு நிலையத்தில் தனியார் மற்றும் இலங்கை போக் குவரத்துச் சபை பஸ்கள் இணைந்தே பணியாற்ற வேண்டும் என வவுனியா மாவட்ட தனியார் பஸ் சங்கம் தெரிவித்துள்ளது.
வவுனியா மாவட்ட தனியார் பஸ் சங்கத்தில் கடந்த 15 வருடங்களாக தலைவராக பணியாற்றிய எஸ்.இராஜேஸ்வரனுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 22ஆம் திகதி வவுனியா ஹொரவப்பொத் தானை வீதியில் உள்ள விருந் தினர் விடுதியில் இடம்பெற்ற போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.



இது தொடர்பில் வவுனியா தனியார் பஸ் சங்கத்தின் முன்னாள் தலைவர் உரையாற்றுகையில்,
வவுனியா- கண்டி வீதியில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற பஸ் நிலையம் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. எமது தனியார் பஸ்களுக்கு வவுனியாவில் பஸ்தரிப்பிடம் எதுவும் இல்லை. இதனால் இந்தத் தரிப்பிடம் எமக்காகக் கட்டப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு நாம்மட்டும் சேவையை மேற்கொள்ள முடியாது. இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களின் தரிப்பிடத்தையும் அங்கேயே மாற்ற வேண்டும். அதன்மூலமே இருதரப்பினரும் இணைந்து எமது சேவையை சிறப்பாக மேற்கொள்ள முடியும். அவ் வாறில்லாவிட்டால் பாதிப்பு எமக்கே. இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்தியுள்ளோம்-என்றார்.
இந்த நிகழ்வில் தனியார் பஸ் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பஸ் உரிமையாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் முன்னாள் தலைவர் போர்க் காலத்திலும், அதற்குப் பின்னரும் 15 வருடங்களாகச் சிறப்பான தலைமைத்துவத்தை வெளிப் படுத்தியமைக்காக கௌரவிக் கப்பட்டார். (த-421)

## மன்னாரில் இன்று குருதிக்கொடை

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு மன்னாரிலும் இன்று வியாழக்கிழமை தபாலகப் பணியாளர்களின் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

இன்றைய இரத்ததான நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற் பட்ட பணியாளர்கள் இரத்த தானம் வழங்குவார்கள் என்று மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஐ.சின்னப்பு தெரிவித்தார். அஞ்சல் அத்தியட்சகர் அலுவ லகத்தில் காலை 8.30 மணிக்கு இந்த நிகழ்வுகள் ஆரம்பமாகும். அதனைவிட மன்னாரில் அஞ்சல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் இந்த வாரத்தில் முன்னெடுக்கப்படும்.

குறித்த மாவட்டத்தில் தபால் சேவையை மேலும் மக்கள் மத்தியில் ஊக்குவிக்கும் நடவடிக்கையாக விழிப்புணர்வு கருத்தரங்கு, வீதி நாடகம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம், ஊர்வலங்கள் சிரமதானங்கள் என்பன முன்னெடுக்கப்படவும் உள்ளன. (வ-17)

## தங்க த் தகடுகளுடன் டுபாயிலிருந்து வந் ோர் கட்டுநாயக்காவில் கைது

டுபாயிலிரு  சட்டவிரோதமாக தங்  தகடுகளை வந்த 2 பே  நேற்று அதி காலை 1.4  மணியளவில் கட்டுநாயக்க  மான நிலைய சுங்க அதிகா களால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான சேவ  மூலம் வந்த இரண்டுபே  சுமார் இரண்டு கோடி பெறும தியான தங்கத் தகடுகளைக் கொண்டு வந்துள்ளனர். கைது செய்யப் பட்டவர்களிடமிருந்து 20 தங்கத் தகடுகள் கைப்பற்றப்பட் டுள்ளன.

முழங்காலில் போடப்பட்டிருந்த பன்டேஜ்ஜின் உட்புறமாக மறைத்து இவ்வாறு தங்கத் தகடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். டுபாயில் இருந்து நேற்று அதிகாலைகட்டுநாயக்காவிமான நிலையத்தை வந்தடைந்த வேளை அவர்கள் தங்கத் தகடுகளை விமான நிலைய ஊழியரொருவரிடம் இரகசியமாகக் கையளித்திருந்தனர். குறித்த ஊழியர் அதனை வெளியில் கொண்டுசென்ற வேளை பிடிபட்டுள்ளார்.

இந்தநிலையில் தங்கத் தகடுகளைக் கொண்டுவந்த இருவரும் அதனை வெளியில் கொண்டுசெல்ல முயற்சித் தவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-10)

## செயலமர்வு

தென்மராட்சி, செப்.25

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி தரங்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு பிள்ளை நேயப் பாடசாலை திட்டத்தின் கீழான செயலமர்வு இன்று காலை 8 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறும்.

வலயத்தில் உள்ள ஆரம்பக் கல்வி தரங்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர் மற்றும் ஆசிரியர் ஆகியோ ரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## ஆக்கப் பொருள் கண்காட்சி

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி இன்று முற்பகல் 9 மணிக்கு நிலைய மண் டபத்தில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் வை.இரா சரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய கல்வி முகா மைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவ நாதன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கி யராசா ஆகியோர் கலந்து கொள்வர். (வ-9)

## தபால் தினத்தையொட்டி குருதிக்கொடை



யாழ்ப்பாணம், செப்.25

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்.பிரதம தபாலகத்தைச் சேர்ந்த 50 வரையிலான பணியாளர்கள் குருதிக் கொடை வழங்கினர்.

பிரதம தபாலக கேட்போர் கூடத்தில் இந்த இரத்ததான நிகழ்வு நேற்றுக் காலை இடம் பெற்றது.

வடமாகாண பிரதி தபால்மா அதிகாரி என்.இரட்ணசிங்கம் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் கெ.புஸ்பநாதன் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட தபாலக பணியாளர்கள் போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு இரத்த தானத்தை வழங்கினார்கள்.

அதனைவிட தெல்லிப்பழை தபாலகத்தைச் சேர்ந்த பணியாளர்களும் நேற்று இரத்த தானம் வழங்கினார்கள்.

இந்தப் பணியாளர்கள் தெல்லிப்பழை அரசினர் மருத்துவமனைக்குச் சென்று இரத்த தானத்தை வழங்கியிருந்தனர். (வ-17)

## குற்றங்களும் கைதுகளும்

தென்மராட்சி

### தந்தை, மகள் மீது தாக்குதல்

அத்துமீறி வளவினுள் நுழைந்த கும்பல் அங்கிருந்த தந் தையையும் மகளையும் தாக்கி காயப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மீசாலையில் இடம்பெற்றது. அதேஇடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை [வயது–74] அவரது மக ளான ஆறுமுகம் சிவகாமசுந்தரி [வயது–50] ஆகியோரே தாக்குதலுக்கு உள்ளானவர்களாவர். குறித்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை – கடந்த திங்கட்கிழமை இரவு சரசாலை மத்தியில் இரண்டு பெண்களும் நேற்றுமுன்தினம் மட்டுவில் பகுதியில் ஒருவரும் தாக்குதலுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். [வ–9]

வலி.மேற்கு



### ( ாலி நகை  டைவு வைத்தவர் சமாக மாட்டினார்

ாலி நகையை வங்கியில் அடைவு வைத்த ரை வங்கியினர் பிடித்து பொலிஸில் ப்படைத்தனர். அவரை எதிர்வரும் 16 ஆம் கதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அராலி மேற்கைச் சேர்ந்த ஒருவரே ஒன்றரைப்பவுண் நிறையுடைய காப்பை வட்டுக்கோட்டையில் உள்ள வங்கி ஒன்றில் நேற்று முன்தினம் அடைவு வைத்துள்ளார்.

அதனைப் பரிசீலித்த போதே அந்தக் காப்பு போலியானது என்பது தெரியவந்தது. அது தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியதன் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தினர். அதன் போதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதுதொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ளப் படுவதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். [வ–4]

தென்மராட்சி

### இலத்திரனியல் கடையில் திருடர் கைவரிசை

சாவகச்சேரி பெரி  அரசடிப் பகுதியில் உள்ள இலத்திரனி யல் சாதன விற்பனை நிலையத்தில் நே றுமுன்தினம் இரவு திருட்டு இடம்பெ றுள்ளது.

வர்த்தகநிலைய  கூரை ஓட்டைப் பிரித்து உள்நுழைந்த தி நடர்கள் கையடக்கத் தொலைபேசி கள், மடிக் கணினிகள், சிற்காட்டுகள், ஒலிபெருக்கிச் சாதனங்கள், கமரா உட்பட பெறுமதியான பொருள்களுடன் கடையில் வைக்கப்பட்டிருந்த பணத்தையும் திருடிச் சென்றுள் னர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த தை அடுத்து பொலிஸார் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

திருட்டுப்போன பொருள்களின் பெறுமதி இன்னமும் கணக் கிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. சுமார் 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருக்கலாமென தெரிவிக்கப்பட்டது.[வ–9]



திருகோணமலை

### சிறுமியை ஏமாற்றியவர் மறியலில்

திருகோணமலை – உப்புவெளி அன்பு வெளிபுரம் பகுதியில் 15 வயதுச் சிறுமியை ஏமாற்றி அழைத்துச்சென்ற குற்றச்சாட்டில் கைதானவருக்கு எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. குறித்த சந்தேகநபரை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் திங்கட்கிழமை முன்னிலைப்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். [வ–10]

வடமராட்சி

### மாடு வெட்டியவரும் கசிப்பு காய்ச்சிய பெண்ணும் சிக்கினர்

துன்னாலையில் ஒரே வீட்டில் சட்டவிரோதமாகக் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த பெண்ணும் சட்டவிரோதமாக மாடு வெட்டி இறைச்சியை விற்பனைக்காகக் கொண்டு செல்ல முற்பட்ட நபரும்நெல்லியடிப் பொலிஸாரிடம் நேற்று முன்தினம் வசமாக மாட்டிக் கொண்டனர். கால்வாய் நோய் காரணமாக மாடு வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அதையும் மீறி மாடு வெட்டுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் நெல்லியடிப் பொலிஸார் துன்னாலை மேற்கிலுள்ள குறித்த வீட்டுக்குச் சென்றனர். பொலிஸார் வருவதை அவதானித்த அங்கிருந்த பெண் சமையலறை யிலிருந்து சட்டியுடன் வெளியே ஓடியுள்ளார். அவரைத்தடுத்து நிறுத்தியபோதே அவர் கசிப்புக் காய்ச்சியமை தெரியவந்தது. அவரிடமிருந்து 2 போத்தல் கசிப்பையும் அதனைக் காய்ச்சுவதற்கான பொருள்கள், உபகரணங்கள் உள்ளிட்ட வற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். அதன்பின்னர் அங்கு மோட்டார் சைக்கிளில் கட்டப்பட்டிருந்த பெட்டியைச் சோதனையிட்ட போதே அதனுள் 51 கிலோ கிராம் மாட்டிறைச்சி இருந்தமை தெரியவந்தது. அந்த இருவரையும் பொலிஸார் கைது செய்தனர். கசிப்பு வைத்திருந்த பெண்ணை பொலிஸ் பிணையில் விடுவித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

மாட்டிறைச்சியை வெட்டியவர் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது தம்மீதான குற்றச்சாட்டை அவர் ஒப்புக் கொண்டதை அடுத்து அவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இறைச்சியை அழிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டதற்கு இணங்க அது எரித்து அழிக்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். [வ–4]

## இலங்கைக்கு கடத்தவிருந்த கஞ்சா பாம்பனில் சிக்கியது

இராமநாதபுரம், செப்.25

பாம்பனில் இருந்து இலங்கைக்கு கடத்தவிருந்த 50 இலட்சம் (இந்திய ரூபா) மதிப்பிலான கஞ்சாவுடன் கார் கைப்பற்றப்பட்டதுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்டம் பாம்பனை அடுத்துள்ள நான்குபனை மீனவ கிராமம் வழியாக் இலங்கைக்கு கஞ்சா கடத்தல் நடைபெற உள்ளதாக இராமநாதபுரம் கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கியூ பிரிவு பொலிஸார் நான்குபனை கடற்கரை பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் அதிகாலையில் கடற்கரைக்கு கார் ஒன்று வருவதை கண்ட கியூ பிரிவு பொலிஸார் காரை முற்றுகையிட்டு சோதனையிட்டபோது காரில் கஞ்சா மறைத்து வைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் காரில் இருந்த மூன்று பேரை பிடித்து இராமநாதபுரம் கியூ பிரிவு அலுவலகம் கொண்டு சென்றனர். அதனை அடுத்து மூன்று பேரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் வாலாந்தரவை, அக்காள்மடம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த மூவர் இலங்கைக்கு கடத்துவதற்கு 130 கிலோ கஞ்சா கொண்டு வந்ததாகத் தெரிவித்தனர். அதனையடுத்து மூன்று பேரையும் கைது செய்து 130 கிலோ கஞ்சா மற்றும் காரையும் பறிமுதல் செய்தனர். மேலும் இந்தக் கடத்தலில் வேறுயாருக்காவது தொடர்புள்ளதா என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (வ-14)

## சட்டவிரோத மணல் ஏற்றியவர் செலுத்தினார் 20 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், செப்.25

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு ஆவணங்கள், இலக்கத்தகடு இன்றி டிராக்டரைப் பயன்படுத்திய குற்றத்துக்காக 12 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. புளியங்கூடல் அம்மன் கோயிலடி சுருவில் வீதியைச் சேர்ந்த ஸ்ரீ.ஸ்ரீபரன் என்பவரே டிராக்டருக்குரிய வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், இலக்கத்தகடு மற் றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி டிராக்டரைச் செலுத்திச் சென்று அனுமதிப் பத்திரம் இல்லாது மணல் ஏற்றிச் சென்றபோது ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட அவருக்கு நீதிமன்றில் நேற்று முன்தினம் வழக்குத் தொடர்ந்தனர். அங்கு தன்மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு 32 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-4)

## நடைபாதை கடைகள் அதிரடியாக அகற்றம்

மட்டக்களப்பு நகரில் வீதியோர வியாபாரங்களில் சட்டவிரோதமாக ஈடுபடுபவர்களை தடை செய்யும் முகமாக திடீர் நடவடிக்கையை மட்டக்களப்பு மாநகர சபையினர் நேற்று மேற்கொண்டனர். அதன்போது வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்யப்பட்ட பழங்கள், வெங்காயம் ஆகியவற்றை மாநகர சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

ஏற்கனவே பலமுறை எச்சரிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்து இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வியாபாரம் முன்னெடுக்கப்படுவதால் இந்தத் திடீர் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது என்று மாநகரசபை ஆணையாளர் எம்.உதயகுமார் தெரிவித்தார். "வீதியோரங்களில் பொது மக்களின் பாவனைக்குதவாத உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் வாய்ப்பு உள்ளது. அதே நேரம் இதனால் சூழலும் மாசடைக்கப்படுகின்றது."- என்றும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். (ற)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## காலநிலை உச்சிமாநாடு

காலநிலை மாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தாமதிக்கின்ற ஒவ்வொரு கணமும் உலகம் பேரழிவின் விளிம்பை நோக்கித் தள்ளப்படுகின்றது என்ற செய்தி நேற்றுமுன்தினம் நியுயோர்க்கில் இடம்பெற்ற உலக கால நிலை உச்சிமாநாட்டில் மீண்டும் ஓங்கி ஒலித்திருக்கின்றது. உணர்ச்சிமேலிட்ட உரைகள், நாடுகளது மீளுறுதி செய்யப்பட்ட உறுதிமொழிகள், புதிய துறைசார் முன் முயற்சிகளை இம்முறை காலநிலை உச்சிமாநாட்டில் காண முடிந்தது.

பாரிஸில் 2015ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஐ.நாவின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் உலகளாவிய ரீதியிலான காலநிலை மாற்றம் தொடர் பில் அர்த்த பூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது தொடர் பான உடன்பாடுகளை எட்டுவதற்கான அரசியல் உத்வேகத்தை உருவாக்குவதற்கு நியுயோர்க்கில் திரண்ட 120ற்கும் மேற்பட்ட சர்வதேச முக்கியஸ்தர்கள் முயற்சித்திருந்தனர்.

மனித உரிமைகள் போன்ற விடயங்களில் ஒன்றுக் கொன்று முரண்படும் தரப்பினர் கூட காலநிலை மாற் றம் என்று வரும் போது கைகோத்துச்செயற்பட வேண்டிய நிலைமையானது அந்த விடயத்தின் பாரதூரத்தன்மை யைக் கருத்திற்கொண்டேயாகும்.

“வருகின்ற நூற்றாண்டை வேறெந்த விடயத்தைப் பார்க்கிலும் காலநிலை மாற்றமே வரைவிலக்கணப் படுத்தப்போகின்றது” என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்த உச்சிமாநாட்டை முன்னிட்டு விடுத்த செய்தியிலிருந்து இதன் தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளலாம்.

காலநிலை மாற்றம் தொடர்பான காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான சாதகமான உறுதிமொழிகள் அளிக்கப்பட்ட நிகழ்வாக ஒரு தரப்பினரும், கால நிலை மாற்றத்தின் அவசரத்தன்மை குறித்த எவ்வித அறிவோ அக்கறையோ அற்ற தரப்பினர் என பிறி தொரு தரப்பினரும் ஒன்றுக்கொன்று தீவிர முரண் பாடுடைய கருத்துக்களை நியுயோர்க் உச்சிமாநாடு தொடர்பில் முன்வைத்துள்ளனர்.

ஆக்கபூர்வமான விமர்சனங்கள் இவ்விடயத்தில் அவசிமானபோதிலும் மாநாட்டில் அடையப்பட்டுள்ள சில உடன்பாடுகள் உண்மையிலேயே பாராட்டுக்குரியதாக அமைந்திருக்கின்றன

★ வரலாற்றில் முதன்முறையாக காலநிலை மாற் றம் தொடர்பில் தீர்க்கமான நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது. இந்தவகையில் 2020ஆம் ஆண்டளவில் உலகில் அதிகமாக காபன் வெளியேற்ற அளவை கிட்டத்தட்ட சரிபாதியாகக் குறைப்பதற்கு உறுதியளித்துள்ளமை.

★ ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் தனது ஆரம்ப உரையில் காபன் தொடர்பான விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இதன்படி 73நாடுகளும் மாநிலங்களும் மாகாணங்களும் நக ரங்களும் ஆயிரத்திற்கு மேற்பட்ட வியாபார நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் வெப்பத்தை வெளியேற்றும் காபன் தொடர்பில் உள்ளக விலை நிர்ணயத்தை செய்வதற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியமை.

★ காடழிப்பை 2020ஆம் ஆண்டளவில் அரைவாசியாகவும் 2030ஆம் ஆண்டளவில் முற்று முழுதாகவும் இல்லாமற் செய்வதற்கு உறுதியளிக்கப்பட்டுள்ளமை.

அளிக்கப்பட்டுள்ள உறுதிமொழிகளுக்கமைவாக வருடந்தோறும் 450 கோடி முதல் 850 கோடி தொன் கள் அளவிலான காபனீரொக்சைட் வெளியேற்றப்படுவது தவிர்க்கப்படும். இது நடைமுறைச்சாத்தியமானதா என்ற கேள் விகளையும் நியுயோர்க் உச்சி மாநாடு எழுப்பிவிட்டுள்ளது.

காடழிப்புக்கு எதிரான உறுதிமொழித் தீர்மானத்தில் கைச் சாத்திடுவதற்கு உலகில் மிகப்பெரியதான அமேசன் காடுகளைக் கொண்டுள்ள பிரேஸில் மறுத்துள்ளமையானது ஒட்டுமொத்த மாநாட்டின் நோக்கங்களையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பிரேஸில் நாட்டின் பங்கேற்பின்றி இதற்கான உடன்படிக்கை வரையப்பட்டமையாலேயே தான் கையொப்பமிட மறுத்ததாக பிரேஸில் சுற்றாடல் துறை அமைச்சர் இஸபெல்லா டெய்க்ஸிரா குறைப்பட்டிருந்தார்.

இருந்தபோதிலும் எந்தவொரு சவாலான விடயத்தை செய்கின்ற போதும் எதிர்ப்புக்கள் நிச்சயமாக எழுவதுண்டு என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த உலகுக்கே நன்மையைக்கொண்டுவரும் நடவடிக்கை களை உலகத்தலைவர்கள் அர்ப்பணிப்புடனும் விட்டுக் கொடுப்புக்களுடனும் முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

# ஊவாவில் இடப்பட்டது மாற்றத்தின் அத்திபாரம்






சேரலாதன்

ஊவா மாகாண சபைக்கு இடம் பெற்ற தேர்தல் முடிவுகள் ஆளும் கூட்டணியினருக்குப் பயத்தை ஏற்படுத்தும் செய்திகளை வழங்கியிருக்கின்றன. இந்தத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ள போதிலும் ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் கூறிக்கொள்வதைப் போன்று மக்கள் அரசுக்கே ஆதரவு வழங்கியிருப்பதாகக் கருத முடியாது.

**எழுச்சி பெற்றது ஐ.தே.க.**

கடந்த 20 தேர்தல்களிலும் பின்னடைவை எதிர் கொண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி பெரும் எழுச்சி பெற்றுள் ளமை பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. சஜித் பிரேம தாஸவின் வருகையே இதற்கான பிர தான காரணமெனக் கூறப்பட்டாலும் அரசின் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பையே முடிவுகள் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றன. கடந்த 2009 இல் இடம்பெற்ற தேர்தலில் பெற்றதை விட சுமார் 69 ஆயிரம் வாக்கு களை இந்த முறை ஆளும் கூட்டணி இழந் துள்ளதை சாதாரண ஒரு விடயமெனக் கூற முடியாது. இந்தத் தேர்தலில் அரசு பல் வேறு தில்லு முல்லுகளில் ஈடுபட்டதாக தேர் தலைக் கண்காணித்த அமைப்புக்கள் குற்றஞ்சாட்டிய நிலையில் இவ்வாறான தொரு வீழ்ச்சியை அரசு எதிர் கொண்டுள்ளது. சுதந்திரமானதொரு தேர் தல் ஆணையகம் இந்த நாட்டில் அமைக்கப் படாததால் அனைத்து விதமான தேர்தல் விதி மீறல்களையும் பார்த் துக் கொண் டிருக்கவே தேர்தல் ஆணையாள ருக்கு முடிந்துள்ளது.

**கடந்த 2009 இல் இடம்பெற்ற தேர்தலில் பெற்றதை விட சுமார் 69 ஆயிரம் வாக்குகளை இந்த முறை ஆளும் கூட்டணி இழந்துள்ளதை சாதாரண ஒரு விடயமெனக் கூறமுடியாது.**

**கையாலாகாத நிலையில் தேர்தல் ஆணையாளர்**

பொலிஸா ரும் வழக்கம் போல எதையும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் இந்த நிலை யிலும் மக்கள் தமது ஆணையைத் தெளிவாக வழங்கியுள்ளனர். முக்கிய அமைச்சரொருவரின் பதுளை மாவட்டத்தில் ஆளும் கூட்டணி மயிரிழையில் தோல்வியைத் தவிர்த்துள்ளது. இந்த மாவட்டத்தில் ஆளும் கூட்டணிக்கு 2 லட்சத்து 9 ஆயிரத்து 56 வாக்குகளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு லட்சத்து 97 ஆயிரத்து 708 வாக்குகளும் கிடைத் துள்ளன. ஆக மொத்தமாக 11 ஆயிரத்து 248 வாக்கு களை மாத்திரமே ஆளும் கூட்டணியினால் அதிகமாகப் பெற முடிந்துள்ளது. ஆனால் அந்தப் பிரபலமான அமைச்சரோ மக்களை முட்டாள்கள் என்று என எண் ணிக் கொண்டோ என்னவோ தேர்தலில் தாம் பெரு வெற்றி பெற்றதாகப் பிதற்றி வருகின் றார். இவருக்கு ஜனாதிபதி நல்ல சூடு கொடுத்ததாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. மேலும் என்றுமே இல்லாத வாறு பதுளை மாவட்டத் திலுள்ள மூன்று முக்கியமான நாடாளுமன்றத் தொகுதி களை ஐக்கிய தேசியக் கட்சி யிடம் ஆளும் தரப்பினர் இழந் துள்ளமை புதியதொரு சரித் திரமாகும். மலையகத் தமிழ் மக்களின் வாக்கு களே அரசு பதுளை மாவட்டத்தில் வெற்றி பெறுவதற்கு உறுதுணை புரிந்துள்ளன.

**சின்னங்களை மறந்த கட்சிகள்**

மலையகத்தின் முக்கியமான தொழிற் சங்கங்கள் அரசுடன் ஐக்கியமாகியுள்ள தைக் காண முடிகின்றது. அத்துடன் அவை அரசியல் கட்சிகள் என்ற வகையில் வழங்கப்பட்ட சின்னங் களை மறந்து வெகு நாள்களாகி விட்டன. மலையகத்தின் முக்கியமான தொழிற் சங்கமும், அரசியல் கட்சியுமான இலங் கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது சேவல் சின்னத்தை தாரைவார்த்து விட்டு வெற் றிலைக்குள் தன்னை மறைத்துக் கொண் டுள்ளது. அரசியல் ஆதாயங்களுக்காக தமது அடை யாளங்களை இழந்து நிற்கும் இத் தகைய அரசியல்வாதிகள் எதைச் செய் வதற்கும் தயங்க மாட்டார்கள். பாவம் இவர்களை நம்பியிருக்கும் தோட்டப் புற சாதாரண மக்களின் நிலைதான் பரிதாப நிலைக்கும் மேலாகச் சென்று விட்டது. இவர்களின் தலைவர்கள் நாளைக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் அதன் பின்னால் சென்று விடு வார்கள். கேட் டால் இணக்க அரசியல் அது இதுவெனக் கதை விடுவார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர் களின் தலை விதியில் மாற்றம் என்பது ஒருபோதுமே வரப்போவதில்லை. ஏனென்றால் அவர்கள் ஒரு போதுமே பெரும்பான்மையினராக மாறப் போவ தில்லை. ஊவா மாகாண சபைத் தேர் தலைப் பொறுத்த வரையில் நான்கு தமிழர்கள் மாகாண சபை உறுப்பினர் களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**முஸ்லிம்களுக்கு பெரும் பின்னடைவு**

ஆனால் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து எவரும் தெரிவு செய்யப்படவில்லை. அரசுடன் இறுக்கமாகப் பிணைந்திருக் கும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸும், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான மக்கள் காங்கிரஸும் ஒன்றிணைந்து ஏதோவொரு நோக் கத்தை நிறைவு செய்யும் பொருட்டு அரசுடன் இணைந்து போட்டியிடாமல் பதுளை மாவட்டத்தில் தனித்துப் போட் டியிட்டன. ஆனால் அவமான கரமான தோல்வியை மக்கள் இவர்களுக்கு வழங்கியுள்ள னர். மகியங்கனைத் தொகு தியில் வெறும் 79 வாக்குகள் மட்டுமே இவர்களுக்கு கிடைத்தன. வேறு ஏழு தொகுதிகளில் மூன்று இலக்க வாக்கு களும், வெலிமடைத் தொகுதியில் மட் டுமே நான்கு இலக்கத் தில் அதுவும் 2 ஆயிரத்து 363 வாக்கு கள் கிடைத்தன. இதற்குப் பிறகும் இந்தக் கட்சிகள் அர சுடன் இணைந்திருப்பது தொடர்பாகச் சிந்திக்க மறந்தால் எதிர்காலத் தில் முஸ்லிம் மக்கள் இவர்களை மறந்து விட்டாலும் ஆச் சரியப்படுவதற்கு ஒன்று மில்லை.

அதைவிட ஆளும் தரப்பிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியை நோக்கிப் படையெடுப் பவர்களையும் எதிர்வரும் நாள்களில் பார்க்க முடியும். பதவிச் சுகத்தை அனு பவித்த அரசியல் வாதிகள் எத னையும் செய்வதற்குத் தயங்கமாட்டார்கள்.

இலங்கை அரசியலில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்வதற்கான அத்திபாரம் ஊவாவில் இடப்பட்டுவிட்டது. இதனை ஆக்கபூர்வமாக மாற்றி விடுவதற்கான செயற்திட்டம் எதிர்க்கட்சிகளின் கைக ளிலேயே உள்ளன.

அ. சஞ்ஜீவ்

# அதிக பயன் தரும் மண்புழு உரம்

விவசாயத்தில் இரசாயன உரங்களுக்கு பிரதியீடாக அல்லது இரசாயன உரத்தின் பாவனையைக் குறைக்கும் முகமாக பல்வேறு வகையான புதிய வழிமுறைகளில் சேதன உரங்களும் அவைசார் உற்பத்திகளும் சமகாலத்தில் அதிகரித்து வருகின்றன. பல்வேறு பட்ட விவசாயப் பிரிவினர் முற்றிலுமாக சேதன உரப் பாவனையும் மரபு வழி முறை பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ள, இன்னும் சிலர் மெல்ல மெல்ல அதை நோக்கிய நாட்டத்தை அதிகரிக்கின்றனர். இவ்வாறான சேதன உரம் சார் உற்பத்திகளில் ஓர் உன்னதமான வருகைதான் "மண்புழு உரம் மற்றும் மண்புழு உற்பத்திகள்".

இத்தகைய சேதனமுறையிலான சிறந்த உற்பத்தி தொழில் முறைகள் மெல்ல மெல்ல எம் நாட்டிலும் நுழைந்து வருவதுடன் பலர் அவ்வாறான உற்பத்திகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சிலர் போதிய வழிகாட்டலின் மையால் உற்பத்தியை தொடர முடியாதுள்ளனர்.

**மண்புழு உற்பத்திகளின் நன்மைகள்**

மண்புழு உற்பத்திகள் மற்றும் உரங்களினால் உண்டாகும் நன்மைகளையும் அசேதன இரசாயன உரங்களிலும் பார்க்க இவை எவ்வகையில் சிறப்பானவை என்பதையும் அறிதல் அவசியமாகும்.

1. இந்த உற்பத்திகள் செலவு குறைந்தது என்பதுடன் இலகுவாக எல்லோரும் செய்யக் கூடியவை.

2. மண்புழு உரத் தயாரிப்புகளை வீட்டுக் கழிவுகள் நகரக்கழிவுகள், தாவர விலங்குக் கழிவுகள், விவசாய தொழிற்சாலைக்கழிவு களில் இருந்து உற்பத்தி செய்ய முடிவதுடன் இவை அசேதன இரசாயன உரங்களைப் போலன்றி தாவரத்துக்கு தேவையான மா, நுண் போசணைகளை ஒருங்கே, எளிய அகத் துறிஞ்சக் கூடிய வடிவங்களில் கொண்டுள்ளன.


3. மண் வாழ் உயிரினங்கள் மற்றும் நுண்ணுயிர்களுக்கு தீமையை ஏற்படுத்தாது அவற்றின் நிலைபேறிற்கும் வழி வகுக்கின்றன.

4. மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்பு, வளியூட்டம், நீர் கொள்ளும் ஆற்றல் போன்ற பல்வேறு மண் தன்மைகளை மெரு கூட்டுகின்றன.

5. மண்புழு சார் உற்பத்திகள் பல்வேறு வகையான தாவர வளர்ச்சிப் பதார்த்தங்களையும் தூண்டிகளையும் (IAA, Gibberalic acid) பிரத்தியேகமாக தம்மிடையே கொண்டிருப்பதனால் தாவர உற்பத்திகளைப் பெருக்கி வருகின்றன.

6. தாவர உற்பத்திகளையும் அவற்றின் தரத்தையும் கூட்டுகின்றன.


இது மட்டுமில்லாமல் இந்த உற்பத்திகளில் பயன்படும் மண் புழுக்கள் விலங்கு வளர்ப்பின் உணவு உள்ளீடாகவும் நீர் வளப் பின் உணவு உள்ளீடாக வும் பயன் படுத்தக் கூடியதாகவுள்ளமை இவற்றின் சிறப்பியல்புகள் ஆகும். மேலும் இது ஒரு சிறந்த பக்க வருமானத்தையீட்டித் தரும் சிறு உற்பத்தியாக அமைகிறது.







## அதன் உற்பத்திப் படிமுறைகள்



**மண்புழுத் தெரிவு**

இவ்வாறான சிறப்புள்ள மண்புழு உற்பத்தி மற்றும் உரத் தயாரிப்பை மேற்கொள்வதில் பிரதானமாக கருதவேண்டிய விடயம் மண் புழுத் தெரிவு. எல்லாமண்புழுக்களும்வினைத் திறனான திறமையான உற்பத்தியாளர்கள் அல்ல. பொதுவாக மண்புழுக்களை அவை வாழும்நிலைஉணவுஉள்ளெடுக்கும் நிலைகள் அடிப்படையில் மூன்றுவகையாக நோக்கலாம்.

அ. மண்மேற்பரப்பில்வாழ்பவை

ஆ. மேல் மண்படையில் (20-30cm)வாழும்மண்புழுக்கள் (En dogeic spp ) யில் வாழ்பவை

இ. ஆழ் மண்படை (23)(Anecic spp) யில் வாழ்பவை

பொதுவாக (அ) வகைக் குரிய மண் புழுக்களே தெரிவு செய்யப்படுகின்றன. அதிலும் இந்த மண்புழுக்களின்


1. குறுகிய வாழ்க்கை வட்டம்
2. இனப்பெருக்க ஆற்றல் (இளத் தளைகளின் பெருக்க வீதம்)
3. வினைத்திறனான உணவு உள்ளீடு மாற்றம்
4. வளர்ச்சி வீதம் கூடிய தன்மை, காலநிலை, உணவு மாற்றங்களுக்கு சகிப்பு/கடினத் தன்மையான இயல்புகளைக் கொண்ட இனவர்க்கங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

அந்த வகையில்

1. (Eisenia foetida) ஈசினியாவிட்டிடா
2. (Enarilus eugeniae)என்றிலஸ் இயூஜினியா
3. (Perlonyx excauatus) பெரியோனிக்ஸ் எக்ஸ்கவேடஸ்

போன்ற மண்புழு இனங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தி களாக

- மண்புழு உரம்
- மண்புழு வடிதிரவம்
- மண் புழுப் பசை
- மண்புழு +நீர் வளர்ப்பு முறை
- மண் புழுத் திரவம் + மண்ணுடன் ஒன் றிய பயிர்ச் செய்கை
- விலங்கு உண வுகள் என்பன காணப்படுவதுடன் இன்னும் புதியனவும் அறி முகமாகக் கூடிய சாத்தியங்களும் உள்ளன.




**மண்புழு உரத் தயாரிப்பு.**

மண்புழு சார் உற்பத்திகளில் ஒன்றான "மண்புழு உரம்" எல்லோராலும் சுயமாக உற்பத்தியாக்கக் கூடிய ஓர் உற்பத்தியாகும். இதனை சிறி தளவாகவும் வீட்டுத் தேவைக் கெனவும் பெரிதளவாக உற் பத்தி நோக்கமாகவும் மேற் கொள்ளக் கூடியதாகவுள்ளது. எவ்வாறெனினும் பின்வரும் படிமுறைகளினூடாக வினைத்திற னாக வெற்றிகரமாக உற்பத்தியில் ஈடுபட முடியும்.

படிமுறை 1

நல்ல இனவர்க்க மண்புழுத் தெரிவு. இதற்கு ஏற்கனவே கூறப்பட்டவகைமண்புழுக்களைப் பாவிப்பது சிறந்தது.

படிமுறை 2

கழிவுகளைத் தயார்ப்படுத்தல் பொருத்தமான உக்கக்கூடிய/ மக்கக்கூடிய, மக்கிய கழிவுகளைச் சேகரித்தல் (வீட்டு, நகர, தொழிற்சாலை, விலங்கு, தாவரக் கழிவுகள்- தேவையற்ற உலோகங்கள், கண்ணாடிகள், கற்கள் பிளாஸ்ரிக் பொருள்கள் அகற்றுதல்).

தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை சிறுசிறு துண்டுகளாக்குதல் சாணக் கரைசலை நன்கு தெளித்து சிறிது நாள்கள் விடல் சிறிதளவான உற்பத்தி எனின் படத்தில் உள்ளவாறு பொருத்தமான பிளாஸ்ரிக் வாளியினுள் அதன் அடிப் பகுதியில் நீர்வழிந்தோடுவதற்கு ஏற்புடைய வாறான சாய்வை உருவாக்கி அதன் கீழ்ப் புறத்தில் நீர்திருகுபிடியை இணைத்து படத்தில் உள்ளவாறு கழிவுகளுடன் மண்புழுக்களை இட்டு மக்க அனுமதித்தல். பெரியளவிலான உற்பத்தி எனின்

படிமுறை 3

இடத்தெரிவு தரை- மண்புழு உரத் தயாரிப்புக்கான தரை மிகவும் கடினமானதாக அல்லது கொங்கிறீட் இடப்பட்ட தரையாக இருத்தல் அவசியம். ஏனெனில் மண் புழுக்கள் மண்ணினுள் செல்லலாம் அல்லது நீரில் கரை தகு போசணைகள் மண்ணினுள் செல்வதனைத் தவிர்க்க.

இடம்

நிழலுடன் கூடிய குளிர்ச்சியான பகுதியாக இருத்தல் அவசியம் (பழைய கொட்டில் தொழுவம்) கூரை மழை, வெயில் என்பவற்றுக்கு பாதுகாப்புக் குரியதாயிருத்தல் அவசியம்.

படிமுறை 4

வளர்ப்புத் தொட்டிகளை அமைத்தல்- சாதாரணமாக உயரம் 2 அடி X அகலம் 3 அடி உடைய தேவைக்கேற்ற அளவான நீளம் கொண்ட கொங்கிறீட் அல்லது மண் தொட்டி- இதன் அடிப்பகுதி கற்கள் மண் செங்கற்களைக் கொண்டு நீர் வழிந்தோடும் சாய்வைக் கொண்டிருக்க வேண்டும். வழிந்தோடும் நீரைச் சேமிக்கவென சேமிப்புப் பகுதியிருத்தல் அவசியம்.

படிமுறை 5

படுக்கை மற்றும் கழிவுகளைப் போடும் முறை படுக்கை - நெல், உமி, தென்னை நார்க் கழிவுகளை அடியில் இடுதல். நீர் தெளித்து ஈரப்படுத்துதல்

மக்கிய மக்கக்கூடியகழிவுகளை இடுதல் (இதற்கு பயன்படும் கழிவுகள் படிமுறை 2 படி தயாரிக்கப்பட்டவற்றில் சாணக் கரைசலை தெளித்து 20 நாள்களின் பின் இடுதல் அவசியம்) கழிவுகளுடன் 30% கால் நடைக் கழிவு களைக் கலந்து முற்று முழுதாக விளிம்பு வரை நிரப்புதல்

படிமுறை 6


தேர்ந்தெடுக்கப்பட்ட மண்புழுக்களை (10 M³ 2kg மண்புழு) மேற் பரப்பில் விடுதல் (இவை கழிவுகளை உக்கச் செய்த வண்ணம் கீழ் நோக்கிச் செல்வதினால் ஆழமான பகுதியில் இடத் தேவையில்லை)

படிமுறை 7

பராமரித்தல்

60% ஈரப்பதன் இருக்கும் வண்ணம் தினமும் நீர் தெளித்தல் (நீர் ஊற்றுதல் கூடாது. அறுவடைக்கு முன் நீர் தெளித்தலை நிறுத்தல் வேண்டும்.)

மண் புழு உரத்தின் செயன்முறை




(20 ஆம் பக்கம் பார்க்க)

---

**வாசகர் திருமுகம்**

## இப்படியும் பிழைப்பு

நபரொருவர் இரண்டு படங்களைக் கொடுத்து 'அடையாள அட்டைப் படமளவு படம் தேவை புத்தகம் ஒன்றுக்குப் போடுவதற்கு' என்று கூறினார். பின்னர் தொலைபேசி மூலம் செய்தி வந்தது. பட வேலை முடிந்தது. இரண்டாயிரம் ரூபாவுடன் வரவும் என்று இரண்டாயிரம் ரூபாவா? என்று ஆச்சரியத்துடன் சென்ற நபரிடம்- சுவரில் மாட்டும் பெரிய படங்கள் இரண்டைக் கொடுத்தார். படப் பிடிப்பாளர்? அதிர்ச்சி வயப்பட்ட நபர் கூறினார். அடையாள அட்டை அளவு படமல்லவா கேட்டிருந்தேன் என்று. அடபொடியா? அடையாள அட்டைப் படம் அளவு படம் செய்து கொடு என்றார் படப்பிடிப்பாளர் பொடியன் உடனே செய்து கொடுத்தான். சிவனே என்று இரண்டாயிரம் ரூபாவுடன் அடையாள அட்டைப் படத்துக்கும் கூலி கொடுத்தார் அந்த நபர். இது நடந்து இரண்டு வருடத்துக்கு மேலாகிறது. சென்ற மாதம் கலர்ப் படம் செய்து தாருங்கோ என்று படங்கள் கொடுத்தபோது அடுத்த வாரம் வரும் படி கூறினார் படப் பிடிப்பாளர். அப்படிப் போனபோது - பெரிய கறுப்புப்படம்ஒன்றுகொடுத்தார்படம்பிடிப்பாளர்? நானூறுரூபாகூலி. நான் கூறியது கலர்ப்படம் அல்லவா? என்று நபர் கூறிய போது- அது அடுத்த வாரம் வாருங்கோ? என்று தயக்கமின்றிக் கூறினார் படப்பிடிப்பாளர். எனக்குக் கலர் படம் தேவையில்லை என்று கூறிய நபர் கூலியைக் கொடுத்துவிட்டு படங்களை வாங்கிச் சென்றார். ஏமாற்றப்பட்ட நபர்? இப்படிப் பலரும் ஏமாறுகின்றனரா? அல்லது தான் மட்டுமா? வீட்டுக்கு வந்த நபர் யோசனையில் ஆழ்ந்துவிட்டார். இதை எழுதியது ஏனென்றால் என்னைப் போல் மற்றவர்களும் ஏமாற வேண்டாம் என்பதற்காகவே!

ஞானாம்பிகா.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: கடுமையாக உழைத்தால் மட்டுமே வெற்றிகளைக் குவிக்க முடியும். பணப் பற்றாக்குறையால், குடும்பத்தாரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் போகும். இதனால் குடும்பத்தினரின் வெறுப்புக்கு ஆளாக நேரும்.

**இடபம்**: உறவினர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. பெரியோர் ஆதரவும் கிடைக்கும். கோபத்தைக் குறைத்து நிதான மாகப் பேசுவதன் மூலம் நன்மை ஏற்படும். கூடுதலாக எதிலும் உழைக்க வேண்டி இருக்கும்.

**மிதுனம்**: தொழில் தொடர்பான விடயங்களில் கூடுதல் அலைச் சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். உத்தி யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக வேலை தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும். மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்**: பயணங்களின் போது பொருள்களின் மீது கவனம் தேவை. எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படலாம். சொன்ன சொல்லைக் காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது.

**சிங்கம்**: நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகளை லாவகமாகக் கையாண்டு சமாளிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**கன்னி**: கடமைகளை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. தொழிலில் முன்னேற்றம் காண தேவையான பணிகளில் ஈடுபடு வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர் பான வேலைகளில் அலைச்சல் இருக்கும்.

**துலாம்**:பெண்களுக்கு வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். கவனம் தேவை. வழக்கத்தை விட கூடுதல் நேரம் ஒதுக்கி உழைத்தால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம். நினைத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் நீங்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**தனுசு**: திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலைப் பளு இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள்.

**மகரம்**: பொறுப்புகள் அதிகரிக்கும். வாழ்வில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். செல்வம் சேரும். வெளியூர் பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது.

**கும்பம்**: எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் நோய்கள் வரு வதைத் தடுக்கலாம். வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தாராளமாகப் பணம் செலவு செய்து தேவை யானவற்றை வாங்குவீர்கள். மனதில் உற்சாகம் பிறக்கும்.

**மீனம்**: நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக் கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேலதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.

## நாளை

**புரட்டாதி-10 வெள்ளிக்கிழமை | 26.09.2014**

திதி: துதியை பி.ப.02.09 வரை
நட்சத்திரம்: சித்திரை
மு.இ.09.39 வரை

சுபநேரம்:06.02-07.32 வரை
இராகுகாலம்:10.32-12.02 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## தன்னம்பிக்கையும் கடவுள் நம்பிக்கையும் வேண்டும்

மனிதர்களுடைய மனதில் தாங்கள் எப்போதும் தவ றையே செய்கிறோம் என்ற எண்ணம் உண்டானால் அவர்களது மனவலிமை அழிந்து விடும். தான் செய்வதெல்லாம் தீமை என்று நினைக்கும் மன நிலை ஒரு மனிதனிடம் வந்து விட்டால் மனிதனுக்கு அது ஏனைய பலவீனங் களைஉண்டாக்கும்தீமையை விட இது அதிகத் தீமையை தந்துவிடும். எந்த மனி தன் தன்னைத் தானே வெறுக் கத் தொடங்கி விட்டானோ அவனுக்கு அழிவினுடைய வாசல்கள் எப்போதோ திறந்து விடுகின்றன. இந்த நிலை ஒரு நாட்டுக்கும் பொருந்தும்.

நம்முடைய முதல் வேலை எம்மை நாம் வெறுக்கா மலிருப்பது தான். ஏனெ னில் நாம் முன்னேற வேண் டுமானால் முதலில் எம் மிடம் நமக்கு நம்பிக்கை வேண்டும். பிறகு கடவுளி டம் நம்பிக்கை வேண்டும். தன்னிடத்தில் நம்பிக்கை இல்லாதவன் கடவுளிடத் திலும் நம்பிக்கை வைக்க முடியாது. எனவே எமக்கு எஞ்சியுள்ள வழி இந்த ஒழுக் கம், கடமை, பற்றிய கருத் துக்கள் எல்லாம் சூழ்நிலைக் கேற்ப மாறுபடும் என்பதைப் புரிந்து கொள்வ தாகும். எதிர்ப்பதுஎன்பதுஎப்போதும் தவறாக இருக்க முடியாது. சில சூழ் நிலையில் தீமையை எதிர்ப்பதே ஒருவனது கட மையாகவும்அமையக்கூடும். பகவத் கீதையில் தன் உற வினர்களும் நண்பர்களும் எதிரிகளாக இருப் பதைக் கண்டதும் கொல்லாமை யாகிய அகிம்சையே மேலான கொள்கை என்று கூறி அவர்களைக்கொல்ல முடியாது என்று கூறும் அர்ஜுனனை ஸ்ரீகிருஷ் ணர் கோழை என்றும் கபடதாரி என்றும் கடுமை யாக ஏசுவதைக் கேட்க ஆச்சரியமாக இருக்கும். இது நாம் அனைவரும் வாழ்க்கையில் நன்றாக நினைவில் • வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு பெரிய பாடமாகும்.

# டுபாயில் தாஜ்மஹால் வடிவில் ஹோட்டல்



டுபாயில் உலக அதிசயங் களில் ஒன்றான தாஜ்மஹால் வடிவ மைப்பில் 2017 இல் ஹோட் டலொன்று திறக்கப்பட உள்ளதாக இதனை உரு வாக்க உள்ள தனியார் நிறு வனத்தின் இயக்குநர் அருண் மெஹ்ரா தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் அவர் கூறுகையில், "தாஜ் அரேபியா என்ற பெயரில் 20 மாடிகளும், 350 அறை களும் கொண்ட கண்ணாடிகளாலான ஹோட் டலொன்றை உருவாக்க நீண்ட காலமாக திட்டமிடப்பட்டு இதற்காக டுபாய் அரசிடம் அனுமதி கேட்டுள்ளோம் என் றும் விரைவில் இதற்கான அனுமதி கிடைத்து விடும் எனவும் எதிர்பார்க்கிறோம் எனத் தெரிவித்தார். இவ் வருட கடை சியில் இதற்கான பணிகளைத் தொடங்கி 2016 இல் பணிகளை நிறைவு செய்ய திட்ட மிட்டுள்ளோம் எனவும், 2017 இல் ஹோட் டல் திறக்கப் பட்டு பயன் பாட்டுக்கு வந்து விடும் என வும் நம்பிக்கை தெரிவித் துள்ளார்..

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் த்னி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9 | | | | 1 |
| | | | 1 | | 3 | | 6 | |
| 7 | | | 5 | | 2 | 9 | | |
| 4 | 3 | | 6 | 1 | | 5 | | |
| 6 | 1 | | 2 | 3 | 5 | | 7 | 9 |
| | | 5 | | 8 | 4 | | 1 | 3 |
| | | 2 | 7 | | 1 | | | 6 |
| | 4 | | 3 | | 6 | | | |
| 5 | | | | 4 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 7 | 8 | 5 | 1 | 2 | 3 | 6 |
| 5 | 3 | 2 | 7 | 4 | 6 | 8 | 1 | 9 |
| 8 | 1 | 6 | 2 | 3 | 9 | 4 | 7 | 5 |
| 1 | 7 | 8 | 4 | 6 | 5 | 3 | 9 | 2 |
| 9 | 5 | 4 | 1 | 2 | 3 | 7 | 6 | 8 |
| 2 | 6 | 3 | 9 | 8 | 7 | 1 | 5 | 4 |
| 6 | 2 | 5 | 3 | 7 | 8 | 9 | 4 | 1 |
| 7 | 4 | 9 | 6 | 1 | 2 | 5 | 8 | 3 |
| 3 | 8 | 1 | 5 | 9 | 4 | 6 | 2 | 7 |

# காலிறுதியில் யாழ். மாவட்ட அணிகள்

யாழ்ப்பாணம்,செப்.25

தேசியமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான எறிபந்துப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் தெரிவுப் போட்டிகளில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளன. நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை சிவிலிய மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி விக்கிரமசீல தேசிய பாடசாலை அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 25:18 ;25:11 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டதிற்கு தகுதி பெற்றது.

மற்றைய ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து வெலிமட மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் தெல்லிப்பழையூனியன் கல்லூரி அணி 25:14, 25:21 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியை உறுதிசெய்துகொண்டது.(ரி-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.25

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஈ.கே குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும், பி.ப. 4.55 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (ரி- 23)

* * *

யாழ்ப்பாணம்,செப்.25

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று [illegible]மை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இ[illegible]பாணன் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலையங் ஹென்றிஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுடர் ஒளி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி- 23-108)

* * *

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பிற்பகல் 3.30 மணிக்கு சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 4.30 மணிக்கு கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ரி- 108)

# காலிறுதியில் மத்திய கல்லூரி



யாழ்ப்பாணம்,செப்.25

தேசியமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணி காலிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து அனுராதபுரம் மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். மத்திய கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற காலிறுதியாட்டதிற்கு முன்னைய ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி களுத்துறை ஸ்ரீகுருஸ் வித்தியாலய அணியுடன் மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரத்தில் கோல்கள் எதனையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கான சமநிலை தவிர்ப்பு உதையில் யாழ்.மத்திய கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டதுக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை வெள்ளவத்தை குரே விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப்பிரி[illegible] ஆண்களுக்கான உதை[illegible]தாட்டப் போட்டியில் இள[illegible]லை சென். ஹென்றிஸ்[illegible]லூரி அணியை எதிர்த்து ம[illegible]னல்ல சாஹிராக் கல்லு[illegible] அணி மோதிக் கொண்டது.

இதில் இ[illegible]பாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி- 23)

# சதுரங்க சுற்றுப் போட்டி

கரணவாய்,செப்.25

வடமராட்சிக் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் தனிநபர் சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி யில் இடம் பெறவுள்ளன.

6 வயது முதல் 10 வயது வரையான மாணவர்களுக்கான போட்டிகள் 25 ஆம் திகதியும் 11 வயது தொடக்கம் 15 வயது வரையான மாணவர்களுக்கான போட்டிகள் 26 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

குறித்த போட்டிகள் இன்று வியாழக்கிழமை முதல் நடைபெறும் என்று நேற்றைய உதயனில் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. (ரி-108)

# உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் உதயதாரகை விளையாட்டுககழக மைதானத்தில் இடம்பெறவுள் ளது.

மேற்படி சுற்றுப் போட்டியில் 32 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ரி- 23)

# கலைமதி உதை[illegible]ந்தாட்டத் தொடர்
# பாரதி, பொம்மர்ஸ் அணிகள் வெற்றி

கரணவாய்,செப்.25

எதிரணியினரை இலகுவாக வீழ்த்தி அடுத்து சுற்றுக்கு முன்னேறின அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகம், வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம்.

நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகமும் கொற்றாவத்தை அன்பாலயம் விளையாட்டுக்கழகமும் மோதின. ஆட்டத்தின் தொடக்கம் முதல் இறுதிவரை அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்தின் கையே மேலோங்கியிருந்தது. ஆட்டத்தின் நிறைவில் 4:0 என்ற கோல் கணக்கில் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. அந்த அணியின் சார்பாக அருள்வேந்தன் 12 ஆவது மற்றும் 29 ஆவது நிமிடங்களிலும், சசிதரன் 14 ஆவது நிமிடங்களிலும், கமலநீதன் 21 ஆவது நிமிடத்திலும் கோல்களைப் போட்டனர்.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் அராலி திருமகள் விளையாட்டுக் கழகமும் மோதின. தமது சொந்த மைதானத்தில் விளையாடிய பொம்மார்ஸ் அணியின் முன்கள வீரர் சாரங்கன் மிகவும் விரைவாகவும் அதேவேளை அபாரமாகவும் விளையாடி 2 ஆவது, 9 ஆவது, 11 ஆவது, 26 ஆவது, மற்றும் 39 ஆவது நிமிடங்களிலும் அடுத்தடுத்து 5 கோல்களைப் போட்டு அசத்தினார். அதே போல அந்த அணியைச் சேர்ந்த கோபி 8 ஆவது நிமிடத்திலும் கோல் போட 6:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம். (ரி-108)

# சுப்பர் ஓவரும் சமனிலை; சம்பியனானது சென்.ஜோசப்



*இறுதிப் போட்டியில் மோதிய அணியினர்*

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென்.ஜோசப் அணி வெற்றி பெற்று சம்பியனானது.

வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் பெரியகடை ஸ்டார் ஈகிள் அணியும், சென். ஜோசப் அணியும் மோதிக் கொண்டன.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோசப் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். துடுப்பாட்டத்தில் அன்ரன் 31 ஓட்டங்களையும், அருள் 17 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் ரெக்சன், நார்த்தீபன், அஜித், அரவிந்த், ஜக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 95 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்டார் ஈகிள் அணியினர் 10 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற ஆட்டம் சமனிலை அடைந்தது. துடுப்பாட்டத்தில் நார்த்தீபன் 25 ஓட்டங்களையும், அரவிந்த் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மஹ்தி 3 இலக்குகளையும், கீர்த்தன், அருள் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

சமனிலையில் முடிவடைந்த ஆட்டத்தின் வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்கான சுப்பர் ஓவரில் ஸ்டார் ஈகிள் அணியினர் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள, பதிலுக்கு ஆடிய சென்.ஜோசப் அணியினரும் 18 ஓட்டங்களையே பெற்றனர்.

இதனால் சுப்பர் ஓவரிலும் ஆட்டம் சமனிலை அடைந்தது. போட்டி விதியின்படி அடிக்கப்பட்ட சிக்ஸர்கள் மற்றும் பவுண்டரிகளின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையில் 17:16 என்ற கணக்கில் சென்.ஜோசப் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சென். ஜோசப் அணி தன்வசப்படுத்தியது.

சுற்றுப் போட்டியில் அல்பதா அணிக்கு எதிராக ஸ்டார் ஈகிள் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் றொய் 13 பந்துகளில் 50 ஓட்டங்களை பெற்று மன்னார் மாவட்டத்தில் புதிய சாதனை படைத்தமைக்கான கேடயம் வழங்கப்பட்டது.

மேலும் சுற்றுத்தொடரில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற சென்.ஜோசப் அணியின் அன்ரன், அதிக இலக்குகளைக் கைப்பற்றிய சென்.ஜோசப் அணியின் மஹ்தி, ஆகியோருக்கும், தொடர்ஆட்ட நாயகன் விருதினை பெற்ற சென்.நீக்கிலஸ் அணியின் அன்ரனிக்கும் கிண்ணங்கள் வழங்கப்பட்டன. (ரி- 56)

# ஹரிக்கேன்ஸின் பந்து வீச்சில் சுழன்றாடிய நோர்தன்



ஹரிக்கேன்ஸ் அணியின் பந்துவீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் சுழன்றாடிய நோர்தன் அணி 86 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

சம்பியன் லீக் ரி- 20 தொடரில் நேற்று முன்தினம் ராய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் ஹோபார்ட் ஹரிக்கேன்ஸ் அணியை எதிர்த்து நோர்தன் டிஸ்ரிக்ஸ் அணி மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வென்ற நோர்தன் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் ஹோபார்ட் துடுப்பெடுத்தாடிய அணியின் ஓட்டவேகம் மிக மந்தமாகவே இருந்தது. ஆறாவது ஓவரின் 3ஆவது பந்தில் அணி 21 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருக்க பந்துகளை தின்று தள்ளிய பென் டங்க் 17 பந்துகளில் 12 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அணியின் ஓட்டவேகம் சற்று அதிகரித்தது. மற்றைய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் டிம் பெய்ன் 34 பந்துகளில் 43 ஓட்டங்களைப் பெற்று வெளியேறினார். அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அதிரடி ஆட்டக்காரர் பிலிஷார்ட்டும், சொய்ப் மலிக்கும் நோர்தன்ஸின் பந்துகளை வெளுத்து வாங்கினர். இந்த ஜோடி 50 பந்துகளில் 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை வலுப்பெறச் செய்தனர். பிலிஷார்ட் 43 பந்துகளில் 62 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க, மலிக் 22 பந்துகளில் 45 ஓட்டங்களைக் குவித்து இறுதிவரை களத்தில் இருந்தார். 20 ஓவர்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்த ஹரிக்கேன்ஸ் அணி 178 ஓட்டங்களைக் குவித்தது.

179 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நோர்தன் அணி ஹரிக்கேன்ஸின் பந்து வீச்சுக்கு ஆரம்பத்திலேயே தடுமாறியது. 5 ஓட்டங்களிலேயே 3 இலக்குகளை இழந்த அந்த அணி 16.4 ஓவர்களில் 92 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அந்த அணி சார்பில், ஸ்ரைரிஸ் 27 பந்துகளில் 37 ஓட்டங்களையும், சௌதி 12 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொள்ள ஏனைய அனைவரும் ஒற்றை இலக்கங்களுடன் நடையைக் கட்டினர். ஹரிக்கேன்ஸ் தரப்பில் ஹில்பனாஸ், போலிஞ்சர் தலா 3 இலக்குகளையும், மென்னி, டொஹெற்றி தலா 2 இலக்குகளையும் சாய்த்தனர். ஆட்டநாயகனாக 4 ஓவர்களை வீசி 14 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றிய கில்பனாஸ் தெரிவானார். (ரி)

# தனிநிறுவனமாக சென்னை?



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தனி நிறுவனமாக மாற்றவுள்ளது இந்தியா சீமெண்ட்ஸ் நிறுவனம்.

இந்த நிறுவனத்திற்கு சொந்தமான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தனிநிறுவனமாக மாற்றுவது பற்றி மும்பை பங்குச் சந்தைக்கு அனுப்பிய மனுவில், சென்னை சுப்பர் கிங்ஸ் பிரிவை தனிஉரிமை துணை நிறுவனமாக மாற்ற எங்கள் நிறுவனம் முன்மொழிந்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் என்ற பெயர் இந்தியாவில் வீடுதோறும் பழக்கத்திற்கு வந்துவிட்ட ஒரு பெயராக மாறிவிட்டதா[illegible] இந்தியா சீமெண்ட்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ்க்கு த[illegible] சிறப்பான ஒரு விம்பத்தை வழங்க முடிவு செய்துள்ளது.

மேலும் அனைத்து இந்திய கார்ப்பரேட் நிறுவனம் என்ற அடையாளத்தை இந்தியா சீமெண்ட்ஸிற்கு சென்னை அணி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. 2013-14ஆம் ஆண்டில் சென்னை சுப்பர் கிங்ஸ் மூலம் குறித்த நிறுவனத்திற்கு 166 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்நிலையில் செப்ரெம்பர் 26ஆம் திகதி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை தனி நிறுவனமாக மாற்றுகின்றமை பற்றி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. (ரி)

# உடற்தகுதி இல்லை:

## விதிக்கப்பட்டது அபராதம்

உடற்தகுதியை ஒழுங்காகப் பேணாத குற்றத்துக்காக பாகிஸ்தான் அணியின் 4 முன்னணி வீரர்களுக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது

ஒப்பந்தத்தில் இருக்கும் வீரர்கள் உடல் தகுதி இல்லாவிட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தில் இருந்து 25 சதவீதம் அபராதம் விதிக்கப்படும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சமீபத்தில் அதிரடியான உத்தரவு ஒன்றை வெளியிட்டிருந்தது.

அதன்படி தேசிய கிரிக்கெட் அக்கடமி வீரர்களின் உடல்தகுதி சோதனை நடத்தப்பட்டது. இதன் போது ரி- 20 அணிக்கு தலைவராத் தெரிவு செய்யப்பட்டுள்ள சயீட் அப்ரிடி, உமர் அக்மல், அப்துர் ரகுமான், ராசா ஹசன் ஆகிய 4 முன்னணி வீரர்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிகமான எடையுடன் இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவர்களது சம்பளத்தில் இருந்து 25 சதவீதத்தை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அபராதமாக விதித்துள்ளது.

4 மாதங்களுக்கு ஒரு முறை இந்த உடல் தகுதி சோதனையை நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

CHENNAIYIN F.C.

இந்தியன் சுப்பர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் பங்குபற்றவுள்ள சென்னை அணியின் 'லோகோ ' வெளியிடப்பட்டுள்ளது. நாக்கு வெளியே தொங்கியவாறு, இரண்டு கூர்மையான பற்கள் நீட்டியபடி உள்ள இந்த 'லோகோ' திருஷ்டி பொம்மை போல காணப்படுகிறது. (ரி)

# கோவாவின் உரிமையாளராக கோஹ்லி




இந்தியன் சூப்பர் லீக் உதைபந்து தொடரில் பங்கேற்கும் கோவா அணியின் சக உரிமையாளராக நீடிக்கப்போவதாக இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

இந்தியன் சுப்பர் லீக் தொடரில் பங்கேற்கும் கோவா அணியின் சீருடை அறிமுக விழா நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த கோஹ்லி,நான் இள வயதிலேயே உதைபந்து அணிக்கு உரிமையாளராக மாறியதாக சிலர் நினைக்கக் கூடும். ஒரு விடயத்தின் மீது நம்பிக்கை வைத்து விட்டால், நூறு சதவீதம் நம்மை அதில் இணைத்துக் கொள்ள வேண்டும். இந்தியாவில் உதைபந்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த முடிவை எடுத்துள்ளேன். அதேநேரத்தில் எதிர்கால முதலீட்டுக்கான களமாகவும் இதை கருதுகிறேன். ஐ.பி.எல். தொடருக்கும் ஆரம்பத்தில் எதிர்ப்பு இருந்தது. ஆனால், ஐ.பி.எல். மூலம் இளம் வீரர்கள் பயனடைந்துள்ளனர். அதேபோல, ஐ.எஸ்.எல். தொடரின் மூலம் இளம் வீரர்கள் பயனடைவர் என கோஹ்லி தெரிவித்துள்ளார். (ரி)

# கெய்ல் அவுட்

காயத்தினால் அவதிப்பட்டுவரும் மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடித் துடுப்பாட்டவீரர், இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம்பெறவில்லை.

அடுத்த மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியதீவுகள் அணி 5 ஒருநாள், 3டெஸ்ட், ஒரு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரில் பங்கேற்கவுள்ளது. இந்த இரு அணிகளும் மோதும் ஒருநாள் தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கான 15 பேரைக் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது. டுவைன் பிராவோ தலைமையிலான அணியில், அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் குணமடையாத காரணத்தால் இடம்பெறவில்லை. சாமுவேல்ஸ், டுவைன் ஸ்மித், வேகப்பந்துவீச்சாளர் ஜெரோம் ரெய்லர் ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி விவரம் : டுவைன் பிராவோ (அணித்தலைவர்), டரன் பிராவோ, ஹோல்டர், லியன் ஜோன்சன், நரைன், பொலார்ட், ரம்டின், ராம்போல், கீமர் ரோச், ரசல், டரன் சமி, சாமுவேல்ஸ், சிம்மன்ஸ், டுவைன் ஸ்மித், ஜெரோம் ரெய்லர். (ரி)



# இன்றைய CLT-20 ஆட்டம்

இரவு 8 மணி

CHENNAI SUPER KINGS VS LAHORE LIONS

சென்னை சுப்பர் கிங்ஸ் | லாகூர் லயன்ஸ்

## கண்ணீர் அஞ்சலி

எமது வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் சிவசிவா அவர்களின் தந்தை

**கிருஸ்ணசாமி சிவபாதரத்தினம்**

அவர்கள் 24.09.2014 அன்று காலமாகிய துயரில் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்**
வலயக் கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

## பயிற்சியாளராக அத்தப்பத்து



இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளராக மார்வன் அத்தப்பத்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னதாக குறித்த பதவிக்கு விண்ணப்பித்திருந்த 21 பேரைக் கொண்ட பட்டியலில் இருந்து 9 பேரைக் கொண்ட குழு தெரிவு செய்யப்படிருந்தது. இந்நிலையில் நேற்று முன் தினம் குறித்த 9 பேரிலிருந்து அத்தப்பத்து அடங்கலாக இருவராக குறைக்கப்பட்டிருந்தனர். குறித்த இருவரில், அத்தப்பத்துவே பயிற்சியாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், நேற்றைய தினம் அவர் பயிற்றுவிப்பாளராக 2 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் மோகன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

(ரி)

**வீடு வாடகைக்கு**

சகல வசதிகளுடனும் கூடிய (குழாய் நீர் வசதியுடன்) 3 படுக்கையறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 324, மானிப்பாய் வீதி,
யாழ். (ஐந்து சந்திக்கு அருகில்)
077 775 2450 (52414)(46.3)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை - அருணாகரன் (அப்பன்)



நாவலடி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை - அருணாகரன் 17.09.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி-பூரணம் தம்பதியரின் மருமகனும், உதயராணியின் அன்புக் கணவரும், ஆகாஷ், அக்ஷயா, அனாமிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதி நிதிவதனன், மாலினி சிவராஜா, தசிகரன், சுபாகரன், மாதவி சிவவாசன், ஹரிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை சுவிஸ் நாட்டில் உள்ள Friedof02, 3400 Burgdorf என்னும் இடத்தில் முற்பகல் 11.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலங்கை நேரம் பிற்பகல் 3.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

**"மாலா பவனம்"**
**நாவலடி,**
**உடுப்பிட்டி.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**021 2055042**
**0771047747, 0041779441568**

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா கனகரட்ணம்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல் லம்மா கனகரட்ணம் நேற்று (24.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கண்டுவில் முதலாம் ஒழுங்கை,**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**

(C/15957) (10)

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 613 6575, 077 160 7279,**
**077 600 5311**

## மரண அறிவித்தல்

### சித்தர் குழந்தைவேலு



வசாவிளான் கோணவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சித்தர் குழந்தைவேலு நேற்று (24.09.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர்-சோதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையவி-கறுப்பி தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னரத்தினத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பார்வதி, சிதம்பரம், சேதுப்பிள்ளை, மாணிக்கம், முத்துலிங்கம், மற்றும் கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கணபதி, சின்னத்தம்பி, கந்தன், இராமன், சரஸ்வதி, பரமேஸ்வரி, நாகம்மா மற்றும் மனோன்மணி, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் முத்துலிங்கம், வல்லிபுரம் காலஞ்சென்ற மைனாக்கண்டு ஆகியோரின் சகலரும் தவலிங்கம்(குணம்), மாயவலிங்கம், வசந்தலிங்கம்(கனடா), கலாதேவி, பவானிதேவி, அசோகலிங்கம், வினோதலிங்கம், வரதலிங்கம்(வரதன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருக்கௌரி (கனடா),ஜெயரத்தினம்(ஜெயம்), யோகசிங்கம்(குமார்-தேனுஜன் ரேடர்ஸ்), கிசாந்தினி(கிருஷா), பிருந்தாவனா, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் கௌதமன்(கனடா), நிரோஸன்(கனடா), சிந்துஜா(கனடா), பிரியதர்சன், மதிலோஜினி, சதீஸ்கரன், லவிஜெனா, தேனுஜன், துளசிகா, கிருசன், திருசன், மகிஸன், தர்மித், தயானந்தன், டக்சனா, ஜெனார்த்தனன், கயநிலா ஆகியோரின் அன்புப் பேரனும் சபகீத்தின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.09.2014) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிள்ளையான்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோணவளை,**
**வசாவிளான்**

(c/15956)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

### வேலுப்பிள்ளை விநாயகமூர்த்தி

(ஓய்வுநிலை அதிபர்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)



திண்ணிய நெஞ்சினராய் அடியெடுத்து வைத்தீர்
நுண்ணிய திறனால் கல்லூரி நுட்பங்களை அறிந்து
எண்ணியதை எண்ணி யாங்கு செய்து முடித்தீர்
பண்ணிய கருமங்கள் பழுதடையவில்லை.

கலை, வர்த்தக நெறியோடு கணித விஞ்ஞானம் - புகுந்துகொள்ள
1C பாடசாலை 1 ABகல்லூரி ஆக உயர
கட்டடங்கள் யாவும் மாடிக் கட்டடங்களாக மாற
வழி சமைத்தீர் ஈரிரண்டு ஆண்டுகளில்

தற்துணிவும் வேகமும் உமதியல்பு
கூற்றுவனும் உமதியல்பை உம் மீது கொண்டானோ?
பிரிந்து வானுலகு ஏகியதேன்? காலத்தின் நியதியோ
பரிவோடு விம்மி அழுகின்றோம் - ஈ...

அன்னாரின் ஆத்மா சா... ...களுடன் பிரார்த்திப்ப... ...யடைய எல்லாம்வல்ல வேம்படி விநாயகனைப் ... ...டன அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கல்லூரிச் சமூகம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி

(சி/15948)
(12.5.6)

## மரண அறிவித்தல்

### திருமதி கெங்காதேவி கனகசிங்கம்



(ஓய்வுநிலை முன்பள்ளி ஆசிரியை
சாவகச்சேரி நகரசபை)

சாவகச்சேரி கச்சாய் வீதி, மூன்றாம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி கனகசிங்கம் நேற்று (24.09.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ... ...லம்-சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை- நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகசிங்கத்தின் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் சாவகச்சேரி பலநோக்குக் கூட்... ...றவுச் சங்கம்) அன்பு மனைவியும், அர்ஷனா, தர்ஷன் (... யாழ்ப்பாணம்), ஜனனி (அபிவிரு... ...பனான்ஸ் கம்பனி- நீதிமன்றம்-கிளிநொச்சி) ... அலுவலர், மாவட்ட நீதிவான் அன்பு ... ஆகியோரின் பாசமிகு தாயும், சுரேஸ்குமாரின் ...யும், லிர்த்திகா ஜோர்த்திகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கனகேஸ்வரி காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் ஆனந்தம் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூன்றாம் ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## அட்டாளைச்சேனையில் குருதிக் கொடை நிகழ்வு

அட்டாளைச்சேனை, செப், 25
அட்டாளைச்சேனை ஜம்இய்யத்துத் தர்பிய்யத்தில் இஸ்லாமிய்யா அமைப்பு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அட்டாளைச்சேனை ஜம்இய்யா வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் மௌலவி எம்.ஏ முபீன் (ஸஹ்வி) தலைமையில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ள இரத்ததான முகாமில் இரத்ததானம் செய்ய ஆர்வமுள்ளோர் தொடர்பு கொண்டு தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறும், ஏனையோர் அன்றைய தினம் ஜம்இய்யா வளாகத்துக்குச் சமூகமளித்து இரத்ததானம் வழங்க முடியும் எனவும் அமைப்பின் செயலாளர் தெரிவித்துள்ளார். (த-10)



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சீன மத்திய இராணுவ திணைக்களத்தின் துணைத்தலைவர் சீயூலியாங்கை நேற்று முன்தினம் சந்தித்து உரையாடினார். பீஜிங் பாதுகாப்பு அமைச்சில் சந்திப்பு இடம்பெற்றது என்று பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (ற)

## சிறுமியை ஏமாற்றியவருக்கு நீடிக்கப்பட்டது விளக்கமறியல்

திருகோணமலை, செப், 25
திருகோணமலை - உப்புவெளி அன்புவெளிபுரம் பகுதியில் சிறுமியை ஏமாற்றி அழைத்துச்சென்ற குற்றச்சாட்டில் கைதானவருக்கு எதிர்வரும் 06 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் திங்கட்கிழமை ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் 15 வயதான சிறுமியொருவரை அழைத்துச் சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து சிறுமியின் பெற்றோர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கு அமைய சிறுமி மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (த-10)

## ஐ.நாவுக்குச் சென்றன ஊவா வன்முறைகள்

கொழும்பு, செப்.25
ஊவா மாகாணசபைத் தேர்தலின்போது இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான காணொலி, புகைப்படங்கள் மற்றும் அறிக்கைகள், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வதேச நடவடிக்கை தொடர்பான உதவிச் செயலாளர் சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.

மாகாணசபை வரலாற்றிலேயே அதிகூடுதலான விருப்பு வாக்கு சதவீதத்தைப் பெற்ற ஊவா மாகாணசபைக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்ட எதிர்க்கட்சி வேட்பாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் 100இற்கும் அதிகமானவை பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள வீடியோ, புகைப்படங்கள் மற்றும் அறிக்கைகளின் பிரதிகள் ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவை மற்றும் அனைத்துல நாடாளுமன்றச் சங்கம் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

### வெள்ளை நாகம் விடுவிப்பு

கொழும்பு, செப்.25
குளியாபிட்டிய தொழில் நீதிமன்றத்தின் காவலாளி அறையில் இருந்த வெள்ளை நாகத்தினை கன்கானியமுல்லை காட்டுக்குள் கொண்டு சென்று விடுமாறு, குளியாப்பிட்டிய மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் பந்துல குணரத்ன பணித்துள்ளார்.

கம்பி கொக்கி மூலம் வெள்ளை நாகத்தை தூக்கி வாளி ஒன்றினுள் இட்டு, நீதிவானின் காரில் 5 கிலோமீற்றர் தூரம் வரை கொண்டு சென்றதுடன் காட்டு பிரதேசத்தில் வைத்து வெள்ளை நாகம் விடுவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மண்புழு உரம்

படிமுறை 8
உரப் பிரித்தெடுப்பும் மண் புழு அறுவடையும்
உரப்படுக்கையின் மேலுள்ள உக்கலை அல்லது மண்புழு உரத்தை வாரத்துக்கு ஒரு தரம் சல்லடையில் இட்டு அரித்தல் அல்லது சலித்தல். மக்காத கழிவுகளை பிரித்து மீண்டும் பயன்படுத்துதல்.

பிரித்தெடுத்த உரத்தை 40% ஈரப்பதன் உள்ளவாறான திறந்த அமைப்பில் வைத்து ஈரப்பதனை பேணுதல் வேண்டும். இது உரத்தின் தரத்தை பேண உதவும்.

மக்கிய உரக் குவியலில் இருந்து மண்புழுக்கள் 'கருவுறுதல்' முறை மூலம் பிரித்தெடுக்கப்படுகின்றன. அதாவது உரக்குவியலில் பல இடங்களில் மாட்டுச் சாணக் கோளங்களை வைத்தல். அவற்றால் கவரப்பட்ட மண் புழுக்கள் அவற்றை நாடிச் செல்லும் பின்னர் சேகரித்துக் கழுவி மண் புழுக்களை பிரித்து மீளப் பயன் படுத்த முடியும்.

மண்புழு உரத்தின் போசணை விவரப்பட்டியல்

| | |
|---|---|
| கரிமச் சத்து | 9.5-11.98 சதவீதம் |
| தழைச்சத்து | 0.5-1.5 சதவீதம் |
| மணிச்சத்து | 01-0.3 சதவீதம் |
| சாம்பல் சத்து | 0.15-0.56 சதவீதம் |
| சோடியம் | 0.06-0.30 சதவீதம் |
| கல்சியம்+ மக்னீசியம் | 22.67-47.6 மி.இக்/100 கிராம் |
| தாமிரச் சத்து | 2-9.5 மி.கிராம்/ கிலோ |
| இரும்புச்சத்து | 2-9.3 மி.கிராம்/ கிலோ |
| துத்தநாகச் சத்து | 5.7-11.55 மி.கிராம்/ கிலோ |
| கந்தகச் சத்து | 128-5485 மி.கிராம்/ கிலோ |

மேற்கூறியவாறான போசணை மிக்க சிறந்த சேதன உரமான மண்புழு உற்பத்தியை சிறிய, பெரிய அளவில் மேற்கொண்டு சூழலுக்கு நேசமான வளமான விவசாய வீட்டுத் தோட்டங்களை நாம் இலாபகரமாக மேற்கொள்ள முடியும். இது தொடர்பான போதிய பயிற்சிகளை 'யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம் 25.04.1941 — மறைவு 26.08.2014



அமரர்
**மாணிக்கம் சாம்பசிவம்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

... 26.08.2014 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர் மாணி... சாம்பசிவம் அவர்களது வீட்டுக் கிருத்தியக் கிரியையும் ஆத்மசாந்திப் ... பிரார்த்தனையும் இன்று (25.09.2014) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணி... அளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்களது குடும்பத்தினர் சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வருகை தந்து எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர், மலர் வளையம் சாத்தியோர் மற்றும் பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.14, கோப்பாய் வீதி, உரும்பிராய். — குடும்பத்தினர். (52413)(10.6.3)

**கல்வி** SLAS, SLES, Law Entrance
மற்றும் அனைத்துப் போட்டிப் பரீட்சைகளுக்கும்
Viruthu. Com
விருது .Com (சி.16640) (45.6.3)

**விற்பனைக்கு**
பந்தல் விற்பனைக்குண்டு.
(வில்லு, சொக்கடடான் )
தொடர்பு: 076 540 8095 (51635) (45.6.3)

**BARBEQUE (BBQ)**
* Soops ... from
* Tasty Bites every day from **4.00 pm** bring your bottle bar
* Traditional kool (கூழ்)
**Saturday, Sunday**
**10.00 am - 1.00 pm**
மாவடிவம்பு@YARLPARDY
இல: 49.51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
TP:077 736 0353/077 421 9247
tysunda@gmail.com (52411) (12.3.6)

### மரண அறிவித்தல்



**சங்கரன் பாஸ்கரன்**

கொழும்பை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரன் பாஸ்கரன் நேற்று (23.09.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரன் அம்மாலு தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- யோகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் செல்லமதியின் அன்புக்கணவரும் அனுஷா, பாமினி, வினோத் (டுபாய்), சரண்யா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயகுமார், ஜெயறூபன், நாகலோஜினி (ஆசிரியை), மணியரசு(மலேசியா) ஆகியோரின் மாமனாரும் ஹஸ்வெல், ஜிறோஸ் வெல், அபிஷேக், யாலுஷா, தரணிஷா, நிஷானா, சஞ்சனா(மலேசியா) ஆகியோரின் அன்புப் பேரனும் சுமித்திரா, சுகுமார், காலஞ்சென்ற புஸ்கரன் மற்றும் சீதா, சுப்பிரமணியம் சாந்தா(இத்தாலி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.09.2014 வியாழக் கிழமை பி.ப 3.30 மணியளவில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

202/5 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (52417)
தகவல்: வினோத் (மகன்)

### ஏழாம் ஆண்டு நினைவில்



திருமதி
**சாரதா பரஞ்சோதி**
(இசை ஆசிரியர்- யா/சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சங்கானை)

தோற்றம் 03.11.1965 — மறைவு 25.09.2007

...தமிழ் நாதமே...
... ஒலங்கி நின்று
சுந்தரச் சுருதி தந்து சுடரென ...
நல்லிசை மீட்டிய எம் நற்றமிழ் வீணை உந்தன்
நரம்புகள் அறுந்திடினும் எம் நெஞ்சத்து மையத்தில்
நித்தமும் கேட்குதுந்தன் தீந்தமிழ் நாதமம்மா...
அது தீராத தாகமம்மா

டச்சு வீதி, மூளாய், சுழிபுரம். (52599)(4.3.6) — குடும்பத்தினர். (52599)(3.6.4)

25 SEP 2014



## நினைவு அலைகள்

### சாந்தலிங்கம் சாந்தகுமார் (குகன்)



எம் நட்பின் சிகரமே!
நாம் தேடிப்பெற்ற சுடரே!
அன்பை ஊட்டும் ஆருயிரே!
பாசம் நிறைந்த அண்ணாவே!
நீ மறைந்தாய் என்பதை
நம்பவே முடியவில்லை!
எம் மனசுக்குள் அழியாத
உருவமாய் வாழ்வாய்!
எம்பிரியமான நண்பரே!

உரிமையாளரும் பணியாளர்களும்,
பார்நிலா றேடர்ஸ், கிளிநொச்சி.

(47884)(08)

---

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### கடை விற்பனைக்கு

யாழ்.நகர் மத்தியில் மணிக்கூட்டு வீதியில் உள்ள சகல வியாபாரங்களுக்கும் பொருத்தமான கடை விற்பனைக்குண்டு.
60 X 11 இரண்டுமாடி
விலை 19 Million
தொடர்பு : 0777 608 930

(52416)

---



### சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கண்ணீர் அஞ்சலி

எமது லயன்ஸ் கழகத்தின் தலைவர்
**லயன் க.தர்ஷன்** அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி கெங்காதேவி கனசிங்கம்

அவர்கள் 24.09.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆதியாம் பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்.

**சாவகச்சேரி லயன்ஸ் கழகம்**

(c/15952)(08)

---

## பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு மட்டக்களப்பில் இலவச வகுப்புகள்

மட்டக்களப்பு, செப். 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியினை மேலோங்கச் செய்யும் நோக்குடன் யூனியன் அசூரன்ஸ், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட றெட்றிக் கழகம் அகி யவற்றின் அனுசரணையில் வாகரைப் பிரதேசத்தில் கல்விப் பொதுத்தர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டுள் ளன.

யூனியன் அசூரன்ஸின் செங்கலடி மற்றும், வாழைச்சேனை ஆகிய இரு கிளைக் காரியா லயங்களுடன் மட்டக்களப்பு மாவட்ட றோட்டறிக் கழகமும் இணைந்து இப்பயிற்சி வகுப் பினை ஆரம்பித்துள்ளன. இதன்மூலம் மாணவர்களுக்கு இலவசமாக கணிதம், ஆங்கி லம், வரலாறு, மற்றும் விஞ்ஞானம் அகிய பாடங்கள் கற் பிக்கப்படவுள்ளன.

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் பால் சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இந்த இலவச பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளதாகவும், இதில் வாகரைப் பிரதேசத்திலுள்ள 4 பாடசாலைகளை சேந்த கல்வி பொதுத்தர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 120 மாணவர்கள் நன்மையடைவ தாகவும், யூனியன் அசூரன்ஸின் கிழக்கு வலய முகாமையாளர் ம.ஜெகவண்ணன் கூறினார்.

மட்டக்களப்பு பால்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பிரதி அதிபர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில் யூனியன் அசூரன்ஸின் கிழக்கு வலய முகாமையாளர் ம.ஜெகவண்ணன், கிழக்கு வலய ஆள்இணைப்பு முகாமையாளர் ஏ.நிரோசன், மற்றும் செங்கலடிக் கிளையின் விற்பனை முகாமையாளர் ரி.ஜெயக்குமார், வாழைச்சேனைக் கிளையின் விற்பனை முகாமையாளர் யு.மனோபவன், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட றெட்றிக் கழக அங்கத்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர். (த-10)

## சிறுவன் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 25

கண்டி- மத்துரட்ட பகுதியில் பதின்னான்கு வயது சிறுவன் ஒருவனின் சடலம் நேற்றுமுன் தினம் காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. எலமுல்ல தோட்டத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் விஜயகுமார் என்ற சிறுவனே் இவ்வாறு காட்டுப் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சிறுவன் கடந்த 19 ஆம் திகதி முதல் காணாமல்போயுள்ளதாக சிறுவனின் தந்தை விஜயகுமார் மத்துட்ட பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். இந்த நிலையிலேயே சிறுவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ற)

---

## மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2014, செப்டம்பர்

## BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 15 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)




கற்கை நெறிகள்

- **Civil Engineering**
- **Biomedical Science**
- **Quantity Surveying**
- **Computing & System Development**
- **Business Management**
- **Business Marketing**
- **HR Management**

| | |
|---|---|
| காலம் | : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி) |
| கட்டணம் | : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும் |
| மொழிமூலம் | : ஆங்கிலம் |
| அனுமதி | : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்) |

மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

### டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

  க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

  Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லத் முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

### கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

  நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

  Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

  சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:

**077 710 2131**

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS of Trust & Excellence in Higher Education

Design: www.MacroAdz.com

# தொடர்ச்சிகள்

## பொதுவேட்பாளர்

இடம்பெறவுள்ளதாகக் கூறப் படும் ஜனாதிபதித் தேர்தலை துணிவுடன் எதிர்கொள்ள வேண்டுமாயின், எதிர்க்கட்சிகள் யாவும் அவசர பேச்சுக்களை நடத்தி, பொதுவானதொரு கருத்தொருமைப்பாட்டுக்கு வரவேண்டும். இந்த வழிமுறையை விடுத்து ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகள் தனி வழிப் பயணத்தை மேற்கொள்ளுமானால் அது ஜனாதிபதி மஹிந்தவின் வெற்றியை உறுதிப்படுத்தும் உபாயமாகவே இருக்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க கோட்டே நாகவிகாராதிபதி வண.மாதுலுவாவே சோபித தேரர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றபோதும், அவை சாத்தியமற்றதொன்றாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை இல்லாதொழிக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றபோதும், அது தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் பின்னிற்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில், ஐ.தே.க. சார்பில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான் போட்டியிடுவார் என அக்கட்சி அறிவித்துள்ளது. மேலும், கட்சியின் பிரதித் தலைவராக நேற்றுமுன்தினம் பதவியேற்ற சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி வேட்பாளராக ரணில் போட்டியிட்டால் மட்டும் ஆதரவு வழங்குவேன் என அறிவித்துள்ளார். இவ்வாறானநிலையில், பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே ஐ.தே.கவில் இனி இடமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

மேலும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தலைமைத்துவ சபையிலிருந்தும், கட்சியின் உப தலைவர் ஜோசப் மைக்கல் பெரேரா அந்தப் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்துள்ளமை, கட்சிக்குள் ஏற்பட்டு வரும் கருத்து முரண்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றது.

இந்த நிலையில், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொது வேட்பாளராகக் களமிறங்கினால் தாம் ஆதரவளிக்க மாட்டோம் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இவ்வார ஆரம்பத்தில் அறிவித்திருந்தார். அத்துடன், ஜனாதிபதித் தேர்தல் குறித்து தாம் ஆராய வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கு எதிரணிக் கூட்டுக்குள் இடமில்லை என்பதை இவர்களது கருத்துகளும், செயற்பாடுகளும் பறைசாற்றுகின்றன என்றும் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்த வேண்டுமாயின், மக்கள் மத்தியில் புத்துயிர் பெற்றுள்ள ஜே.வி.பி., அதேவேளை, சிங்கள, பௌத்த மக்களின் ஆதரவைப்பெற்ற சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றை இணைத்துக் கொண்டு பொதுவேட்பாளர் ஒருவரை கண்டறியும் முயற்சியில் ரணில் ஈடுபட்டு, அவர்களுக்கான பிரச்சார பீரங்கியாக செயற்பட வேண்டும்.

அத்துடன், எதிரணி சார்பில் பலமானதொரு கூட்டணி உருவாகும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அதற்கு ஆதரவை வழங்குவதற்கு ஒருபோதும் பின்நிற்காது. எனவே, அரசியல் களத்தில் மாற்றமொன்றை காணவேண்டுமானால், ஐ.தே.கவின் முடிவில் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும். இன்றேல் அடுத்த தேர்தலிலும், ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பது சாத்தியமாகாது என அரசியல் ஆய்வாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ற-சி)

## கமலேஷ்

பங்கேற்றிருந்தார். இந்த மாநாட்டுக்குப் பக்க நிகழ்வாக பல்வேறு சந்திப்புக்களில் ஜனாதிபதி பங்கேற்றுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், நேபாள பிரதமர் கொய்ராலவும் எதிர்வரும் சார்க் உச்சி மகாநாடு உள்ளிட்ட பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் பற்றி பேச்சு நடத்தினார்கள். 18 ஆவது சார்க் உச்சி மகாநாடு இந்த ஆண்டு நவம்பர் மாதம் காத் மண்டுவில் நடைபெறவுள்ளது. இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

கொலம்பிய ஜனாதிபதி கால்டெரனுடனான பேச்சுவார்த்தையின் போது தென் அமெரிக்க நாடுகளுடனான நல்லுறவைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பாக ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார்:.

பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் சர்மா, நடைபெறுகின்ற பொதுநலவாய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார். அதில் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டின் சீராக்கம் சம்பந்தமாக இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கும் கூட்டம் தொடர்பாகவும், 2015 ஆம் ஆண்டுக்கு பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர். (ற-5)

## ஈழத்

நிறுத்து! வங்கக் கடலில் பாரம்பரிய மீன்பிடியை மீட்டுக் கொடு!', 'இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான சிறப்பு முகாம்களை இழுத்து மூடு! இரட்டைக் குடியுரிமை வழங்கு, 'தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான பொருளாதாரத் தடையை இந்திய அரசே முழுமையாக செயல்படுத்து ஆகிய ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே, தமிழக வாழ்வுரிமை கூட்டமைப்பின் சார்பில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. (ற-5)

## சுற்றுலாத்துறை

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வடக்கு மாகாணசபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனை மேலும் திறம்பட கட்டியெழுப்புவதற்காக, தென்னிலங்கை மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்து இந்தத் துறையுடன் தொடர்புடைய நூற்றுக்கு மேற்பட்ட வளவாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது அனுபவங்களை வடக்கில் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் பகிரவுள்ளனர். சுற்றுலா தினம் சர்வதேச ரீதியில் நாளை மறுதினம் சனிக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. அதனை முன்னிட்டே, வடக்கின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான மேற்படி மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ரில்கோ விடுதியில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ற-5.9)

## இவ்வாண்டு

வடிக்கைகள் முற்றாக இடை நிறுத்தப்பட்டன. அதனால் அங்கிருந்த உப்புப் பாத்திகள் அழிவடைந்துள்ளன. அத்துடன் உப்பளத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும் பெருமளவு புனரமைக்க வேண்டிய தேவையுள்ளது.

சுமார் 770 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண்ட உப்பளத்தை ஒரே தடவையில் அபிவிருத்தி செய்வதற்குக் காலம் தேவை. அதனால் 2014 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்துக்கு அமைவாக இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் இருந்து உப்பினை உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக 330 ஏக்கர் முதற்கட்டமாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. இவற்றில் 270க்கும் மேற்பட்ட உப்புப் பாத்திகள் சிதைவடைந்துள்ளன. உப்பளத்தின் புனரமைப்புக்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் 100 மில்லியன் ரூபா நிதி கடந்த ஜூன் மாதம் வழங்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 11 கிராமிய அபிவிருத்தி சங்கங்களைச் சேர்ந்த பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டவர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு தற்போது புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வருட இறுதிக்குள் உப் பளப் பணிகள் நிறைவடைந்தால் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழில் வாய்ப்பைப் பெறமுடியும். இரண்டாம் கட்டமாக 2015 ஆம் ஆண்டில் மீதிப் பகுதிகளை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்." - என்று தெரிவித்தார். (ற-14)

## வடக்கின்

கணக்கில் வைப்புச் செய்யப் படும். இருப்பினும் 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட முத்திரை வரி, யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடந்த காலங்களில் தொகுதியாக வழங்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் கடந்த மூன்று வருடங்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப் படவில்லை. 540 மில்லியன் ரூபா கடந்த மூன்று வருடங்களிலும் வருமான வரியாகச் செலுத்தப்பட்டுள்ளது. இந்தக் கொடுப்பனவுகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிடைக்கப் பெற்றால், அதனூடாகப் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-5)

## கிராமத்துக்கு

தேசத்திலுமுள்ள சகல அரசியல் பிரதிநிதிகளை உள்ளடக்கியே தயாரிக்கப்பட வேண்டும் என்று சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், யாழ்.மாவட்டத்தில் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கட்சி ஒன்றின் பிரதிநிதிகள் தனித்தே குறித்த திட்டங்களை தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச செயலாளர்கள் சிலர், மாவட்டச் செயலகத்தில் குறித்த வேலைத் திட்டத்துக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரியிடம் தெரிவித்தபோது, அமைப்பாளர்கள் தரும் பட்டியலுக்கே வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த வருடத்துக்குள் மேற்படி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தி முடிக்கப்பட வேண்டிய போதும், வேலைத் திட்டங்கள் இன்னமும் ஆரம்பிக்கப் படாத நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## அரிசி,

னர் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலையில் 32 மில் உரிமையாளர்களும், 9 கடை உரிமையாளர்களும் இருப்பு விவரத் திரட்டை சமாப்பித்துள்ளனர்.

இதுவரையில் சமர்ப்பிக்காத மில் உரிமையாளர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிக்குள்ளும், 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிக்குள்ளும் அவற்றை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் விவரத் திரட்டுக்களை சமர்ப்பிக்காதபட்சத்தில், மில் மற்றும் விற்பனை முகவர் நிலையங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, விவரத்திரட்டுக்கள் சமர்ப்பிக்காத அரிசிமற்றும் நெல் மூடைகள் அரசுடமை ஆக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ற-106)

## வாக்குறுதிகளை

காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரபின் 14 ஆவது வருட நினைவு கூரல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில், நினைவுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் தலைமையில், மாநகர சபை சபா மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. சிரேஷ்ட பிரதித் தலைவர் அப்துல் மஹீத் தொடர்ந்து உரையாற்றுகையில், சிறுபான்மை மக்களின் அரசியல் முதுகெலும்பை உடைத்தெறியும் நடவடிக்கைகளையே இந்த நாட்டில் மாறி, மாறி வந்த சிங்கள அரசுகள் செய்து வந்தன. அன்று மொரகொட ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் கரையோர மாவட்டத்தை உருவாக்கும் விடயம் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆனால் கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் போது இன்றைய அரசுக்கும், முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி அம்பாறையில் கரையோர மாவட்டத்தை உருவாக்க அரசு உறுதியளித்தது. தேசிய இனப்பிரச்சினைக்கு இக்கரையோர மாவட்ட வாக்குறுதி ஓர் தீர்வல்ல. எனினும் இதுவரை அரசு, முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களித்த விடயங்கள் எவற்றையும் நிறைவேற்ற முன்வரவில்லை. எனவே அம்பாறை மாவட்டத்தில், தமிழ், முஸ்லிம் மக்களின் நலன் கருதி கரையோர மாவட்டம் ஒன்றைத் தரும் விடயத்தைத் துரிதமாக அரசு நிறைவேற்ற வேண்டும். அன்றேல் முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு அளித்து வரும் ஆதரவு நிச்சயம் மீளாய்வு செய்யப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் - என்றார்.

மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழரசுக் கட்சி உறுப்பினருமான அ.அமிர்தலிங்கம் உரையாற்றுகையில், மர்ஹூம் அஷ்ரப் இருந்திருந்தால் கடந்த காலங்களில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் மிக மிகக் குறைவாக அமைந்திருக்கும். அன்னார் துறைமுக அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சராக இருந்தபோது அங்கு கூடுதலான வேலை வாய்ப்பு தமிழர்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்து செயற்பட்டார் - என்றார். (த)

## ஐக்கிய

ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெறும் பாதைக்குள் பிரவேசிக்கின்றது. எமது கட்சி மௌனமாக இருக்கும்போது மக்கள் மாற்றுவழிகளைத் தேடினர். இத்தகைய மாற்று வழியாகத் தான் பொன்சேகாவின் கட்சி வெற்றி பெற்றது. மேல், தென் மாகாண சபைகளில் பொன்சேகாவின் கட்சி உறுப்பினர்கள் வெற்றி பெற மக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்குப் பதிலாக மாற்றுக் கட்சிகளைத் தேடியதே காரணமாகும்.

ஐக்கிய தேசிய கட்சி ஒன்றுபடும் போது பொன்சேகாவின் கட்சியில் ஒருவர் கூட ஊவா மாகாண சபையில் வெற்றி பெறவில்லை. சரத் பொன்சேகா தனது குண்டு பட்ட வாகனத்தைத் தேர்தல் பிரசாரத்தின்போது மக்களிடம் காட்டி வாக்குகளைக் கேட்டார். ஆனால் மக்கள் அவரின் கட்சிக்கு வாக்களிக்கவில்லை.

எதிர்க்கட்சிகள் சற்றுக் கூடுதலாக உழைத்திருந்தால் இன்னுமொரு ஆசனத்தை பதுளையில் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கும். மக்கள் ராஜபக்ஷ பரம்பரையில் வாக்கு கேட்டவருக்கு 96 ஆயிரம் வாக்குள் வழங்கியுள்ளனர். ஆனால் இளைஞனான ஹரீன் பெர்னாண்டோவுக்கு 1லட்சத்து 73 ஆயிரத்து 999 ஆயிரம் வாக்குகளை வழங்கியுள்ளனர். இதிலிருந்து மக்களின் தீர்ப்பை நன்கு புரிந்து கொள்ள முடியும்-என்றார். (த-10)

## யாழ்.

மதியைப் பெற்றுள்ளவர்களும் பஸ் எதுவுமே இல்லாதவர்களும் கூட அதற்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்கள் அதனைப் பெற்று ஏனையவர்களுக்கு மேலும் பல லட்சம் ரூபா அதிக விலைக்கு விற்பனையே நோக்காகக் கொண்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட பஸ் காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நேற்று சுமார் 84 விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் சுமார் 10 விண்ணப்பங்கள் உரிய முறைப்படி நிரப்பப்படாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஏனைய விண்ணப்பங்களின் படி அனுமதி அடுத்த வாரத்துக்குள் உரியவர்களுக்கு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அனுமதிப் பத்திரம் நேர்மையான முறையில் நடக்குமா என்பது தொடர்பில் பாதிக்கப்பட்ட பஸ் உரிமையாளர் அச்சம் தெரிவித்துள் ளனர். (த-4)

## மாதக்

களுக்கும் 500 ரூபாவுக்குக் குறையாத தொகை வழங்கப் படுவதாகவும், முதற் கட்டமாக 40 மாணவர்கள் இணைக்கப்பட்டிருப்பதாகவும், சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் ஆவரங்காலில் உள்ள அலுவலகத்தில் முதற் சனிக்கிழமை கொடுப்பனவை பெற்றுக் கொள்ளலாம் என பரஞ்சோதி தெரிவித்தார். (த-11)

## 60 கைப்

இந்த நிகழ்வுக்கு யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங் கம் கலந்து கொண்டு 60 பயனாளிகளுக்கான உபகரணங்களை வழங்கினர்.

தாவடி, உரும்பிராய், சங் கானை, சண்டிலிப்பாய், இணுவில், வரணி, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய பகுதிகளில் பனை, கித்துள் கைப்பணிப் பயிற்சி நெறியை நிறைவு செய்த உற்பத்தியாளர்களுக்கான தொழிற் துறை சார்ந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன

ஒருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மனைப் பொருளாதார உபகரணங்கள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-86)

## மானிய

பியுள்ளனர். இவர்களில் விடுமுறை எடுத்து உர வகைகள் பெற வந்த அரச பணியாளர்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப் பட்டது. (த-9)

## ஐ.நா.

மனித உரிமை பாதுகாவலர்கள், பாதிக்கப்பட்டோருக்கான அமைப்புக்கள், சர்வதேச நீதி விசாரணையை வலியுறுத்துவோர் உள்ளிட்ட பிரிவினர் மீது அரச அமைப்புக்களாலும், அரசு சாரா அமைப்புக்களாலும் விடுக்கப் படும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாக, ஆணையாளர் ஹூசைன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஐ.நா மனித உரிமைகள் சபை கூறியது போல, ஒரு சர்வதேச விசாரணை நடைபெறுவதை சிக்கலாக்கும் நோக்கில் ஓர் அச்சமூட்டக் கூடிய சூழல் இலங்கையில் உருவாக்கப்படுவதாகவும் ஆணையாளர் தனது வாய்மொழி மூலமான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதன் முழுமையான அறிக்கை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உத்தியோகபூர்வமாக நேற்று சமர்ப்பிக்கப்படும் என்று முன்னர் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அது ஒத்திவைக்கப்பட்டு இன்றைய தினமே சமர்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## சீனாவில்

கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த-க)

## விமான

துள்ளது.

2015 மார்ச் மாதம் 28 ஆம் திகதியுடன் கொழும்பு மற்றும் மாலைதீவுக்கான தனது சேவையை பிரிட்டிஷ் எயார் வேஸ் விமான நிறுவனம் நிறுத்திக் கொள்கிறது.

இலங்கையின் போர்ச் சூழ்நிலைகளால் 15 வருடங்களுக்குப் பிறகு கடந்த 2013 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலேயே பிரிட்டிஷ் எயார் வேஸ் நிறுவனம் கொழும்புக்குத் தனது சேவையை ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில், குறித்த நிறுவனம் ஐரோப்பிய மற்றும் வட அமெரிக்க நாடுகளுக்கு தனது சேவையை விஸ்தரித்திருக்கும் காரணத்தினாலும், சிறிலங்கன் எயார் லைன்ஸ் நேராக லண்டன், ஹீத்ரோவுக்கு தனது சேவையை ஆரம்பித்திருப்பதாலும் இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (த)

## போக்குவரத்து விதிகள் குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ். வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் வீதிப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு சங்கத்தின் கட்டடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் வளவாளராக ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபரும் போக்குவரத்துப் பணிப்பாளருமான த.பேரின்பநாயகம் கலந்துகொண்டு போக்குவரத்து விதிகள் மற்றும் புதிதாக நடைமுறைப் படுத்தப்படவுள்ள போக்குவரத்துச் சட்ட விதிகள் தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்கினார். போக்குவரத்து அமைச்சு இலங்கையில் வாகன விபத்துக்களை குறைப்பதன் பொருட்டு தவறான முறையிலே செயற்படும் சாரதிகள் மற்றும் ஓட்டுநர்கள் விடயத்தில் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், உரிய சட்டங்களையும் ஏற்றியுள்ளது.

மோட்டார் போக்குவரத்து சட்டத்தில் புதிய பிரிவுகள் மற்றும் உரிய அபராதங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வாகன விபத்துக்களைக் குறைக்கும் நோக்கிலேயே உரிய அபராதத் தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதி வேகமாக வாகனம் செலுத்தியமை தொடர்பிலான அபராதம் 2 ஆயிரத்து 500 ரூபாவாகும். நீதிமன்ற அபராதம் இத்தொகையில் இரு மடங்காகும்.

5.10.2011 திகதி 1726 / 12 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் சாரதி முன்னேற்றப் புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சாரதி / ஓட்டுநர் தான் வாகனம் செலுத்தும் போது புரியும் குற்றம் ஒவ்வொன்றுக்கும் புள்ளிகள் அளிக்கப்படும். இப் புள்ளிகள், ஸ்தல அபராதங்கள் மற்றும் நீதிமன்ற அபராதங்கள் என்பன வழங்கும் பொருட்டு அளிக்கப்படும்.

24 மாதங்களுக்குள் 24 புள்ளிகளையோ அல்லது அதற்கும் அதிகமான புள்ளிகளையோ பெறும் சாரதி /ஓட்டுநரின் சாரதி அனுமதிப் பத்திரம் 12 மாத காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படும்.

இது குறித்து நேற்றைய கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டது. (த-16)

## குடும்பஸ்தரை பாம்பு தீண்டியது

தென்மராட்சி, செப்.25

தமது காணியைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தரொருவரை பாம்பொன்று தீண்டியது. இந்தச் சம்பவம் நேற்று மீசாலையில் இடம்பெற்றது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தன் பாலசிங்கம் (வயது -40) என்பவரே இவ்விதம் பாம்பினால் கடியுண்டவராவார்.

கடித்த பாம்பைப் பிடித்து உரப் பையில் இட்டு சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு வந்துள்ளனர். குறித்த நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)

# யாழ். கோட்டை ஆய்வு டிசெம்பருக்குள் முடிவுறும்

### கட்டடப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும்



யாழ்ப்பாணம்.செப்.25

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியின் தொல்பொருள் ஆய்வுப் பணிகள் இந்த வருட இறுதிக்குள் முடிவடையவுள்ளதால் அடுத்த கட்டமாகக் கோட்டையின் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் நடைபெற்றுவரும் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணக் கோட்டையின் தொல்பொருள் ஆய்வுகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்த வருட இறுதிக்குள் அந்த ஆய்வு நடவடிக்கைகள் நிறைவடைய வுள்ளன. 90 வீதமான ஆய்வு கள் முடிவுற்ற நிலையில் அடுத்த கட்டமாகக் கோட்டையின் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாணக் கோட்டையில் மன்னர் காலத் தொல்பொருள் சின்னங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் கந்தரோடை மற்றும் சங் கானை, நல்லூர் பகுதிகளில் உள்ள தொல்பொருள் சின் னங்கள் ஆய்வு செய்யப்பட வுள்ளன.

இந்த ஆய்வு நடவடிக்கைகளில் விசேட குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். கிடைக்கப்பெறும் தொல்பொருள் சின்னங்கள் உடனடியாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வரு கின்றன-என்றார்.

(த-.14-ரி)

## தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை வடக்கில் விரிவுபடுத்துவதற்கு கிளைகள்


### 3 மாவட்டங்களில் பிராந்தியக் காரியாலயங்கள்

யாழ்ப்பாணம், செப்.25

தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை வடக்கில் விரிவுபடுத்துவதற்கு 3 மாவட்டங்களில் பிராந்தியக் காரியாலயங்கள் அடுத்த ஆண்டில் அமைக்கப்படும் என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.திஸாநாயக்க தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கான தொல்பொருள் ஆய்வு நிலையம் யாழ். மாவட்டத்தில் மட்டுமே உள்ளது. ஏனைய மாவட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாததால் ஆய்வு நிலையங்கள் இதுவரை அமைக் கப்படவில்லை. இந்த நிலையில் யாழ். மாவட்டத்துக்கான ஆய்வு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால் ஏனைய மாவட்டங்களிலும் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பிராந்திய காரியாலயங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த வருடம் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் தொல்பொருள் ஆய் வாளர்கள் தமது ஆய்வு நடவ டிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவாக இருக்கும்-என்றார். (த-14)

## டெங் த நுளம்பை ஒழிப்பதற்கு புகையூட்டும் பணி யாழ். நகரில்



யாழ்ப்பாணம், செப்.25

யாழ். மாநகரப் பகுதியில் நுளம்பின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் சுற்றாடல்களுக்குப் புகையூட்டும் பணிகளில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மாலை வேளைகளில் நுளம்புப் பெருக்கம் கூடுதலாகக் காணப்படும் இடங்களில் இந்தப் புகையூட்டும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நகரை அண்டிய கரையோரப் பகுதிகள் மற்றும் வடிகால்கள், நீரேரிகள் போன்ற இடங்களை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் சுற்றாடல்களில் இந்த புகையூட்டும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர், ஈச்சமோட்டை, சுண்டுக்குழி போன்ற பகுதிகளில் மாலை வேளையில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் உள்ள அநேகமான வடிகால்களுக்கு ஏற்கனவே அபோற் மற்றும் டங் என்ற மருந்து வகைகள் விசிறப்பட்டு நுளம்புகளின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (த-17)

## 2011 இல் வழங்கப்பட்ட தண்டனை கடந்த செவ்வாய் முதல் நடைமுறைக்கு

தென்மராட்சி, செப்.25

சாவகச்சேரி நீதிமன்றில் 2011 ஆம் ஆண்டு நபரொருவ ருக்கு எதிரான வழக்கில் அவருக்கு விதிக்கப்பட்ட தண்ட னையை நேற்று முன் தினம் தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு உத்தரவிடப்பட் டது.

2010 ஆம் ஆண்டு பொலிஸ் உத்தியோகத்தர் எனக் கூறி தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் பொதுமக்களிடம் பணம் அறவிட்டதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிரி இல்லாமல் விசாரணைக்கு எடுக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எதிரிக்கு ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட துடன் திறந்த பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

குறித்த நபர் நேற்று முன் தினம் நீதிமன்றில் சரணடைந்திருந்தார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் முன்னைய தீர்ப்பை நேற்று முன் தினம் தொடக்கம் நடைமுறைப் படுத்துமாறு உத்தரவிட்டதுடன் ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறினால் மேலும் 6 மாதங் கள் சிறைத்தண்டனை அனுப விக்குமாறும் உத்தரவிட்டார். (த-9)

## நெடுந்தீவில் பாண் உற்பத்திக்கு திங்கள் தொடக்கம் திடீர்த் தடை

### நுகர்வோர் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், செப்.25

நெடுந்தீவில் கடந்த திங்கட்கிழமை முதல் பாண் உற் பத்தி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தடை செய்யப் பட்டுள்ளதாகத் திடீரென அறிவிக்கப்பட்ட தால் நுகர்வோர் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகிறது.

பேக்கரிகளில் சுகாதாரப் பாதுகாப்பு உரிய முறையில் இடம் பெறவில்லை எனக் கூறியே பாண் உற்பத்தி தடை செய்யப் பட்டுள்ளதாகவும், இதுவரை தாங்கள் பாதுகாப்பான முறையிலேயே பாண் உற்பத்தியை மேற்கொண்டதாகவும், இந்தத் திடீர் நடவடிக்கை தமக்கு அதிர்ச்சியளிப்பதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் கூறு கின்றார்கள்.

இதேவேளை, பாண் தயாரிப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், போக்குவரத்துப் பிரச்சினை ஒருபுறம் தமக்குக் கஷ்டங்களை ஏற்படுத்தும் போது இப்போது உணவுப் பிரச்சினையும் சேர்ந்துக் கொண்டதாகவும் வெளியிடங்களில் இருந்து இங்கு வந்து பணியாற்றும் தாங்கள் பெரும் சிரமப்படவேண்டியுள்ளதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு அரச ஊழியர் தெரிவித்தார்.

இந்த நிலைமை நீடிப்பதுடன் வெளியிடங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு மதிய உணவு தயாரித்து வழங்கும் வீட்டு உரிமையாளர்களும் வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும் எனவும், அதுவரை உணவு தயாரிக்கும் பணிகளை நிறுத்த வேண்டும் எனவும் சுகாதாரப் பரிசோதகரால் அறிவுறுத் தப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

இது தொடர்பாக நிலைமை களை அறியும் பொருட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும் தொடர்புகள் கிடைக்கவில்லை. (த-7)

## புதுக்குடியிருப்பில் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயற்சி

முல்லைத்தீவு, செப். 25

புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் வர்த்தகர் ஒருவர் 12 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்வதற்கு முயன்றுள்ளார். இது பற்றிச் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது:-

புதுக்குடியிருப்பு கைவேலியில் வசிக்கும் குடும்பம் ஒன்று கைவேலியிலிருந்து புதுக்குடியிருப்பு மந்துவில் சந்திவரை உள்ள பெரும்பாலான கடைகளுக்கு அதிகாலை 5 மணியிலிருந்து மலர்ச் சரம் வழங்குவது வழமையாகும் இந்தக் குடும்பம் குடும்பத்தலைவரைப் பிரிந்து வாழும் நிலையில் தாயும் நான்கு பெண் பிள்ளைகளும் உள்ளனர்.

இதில் மூத்த பெண் பிள்ளைக்கு 12 வயதாகும் இந்தப் பிள்ளையே அதிகாலை 5 மணியிலிருந்து சைக்கிளில் ஒவ்வொரு கடையாகச் சென்று மலர்ச் சரம் வழங்குவது வழக்கம்.

நேற்று அதிகாலை வழமை போன்று கடைகளுக்குச் சரம் வழங்கிக்கொண்டிருந்தபொழுது புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எதிரே அமைந்துள்ள வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் ஒருவர் குறித்த சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதற்கு முயன்றுள்ளார். உடனே சிறுமி வீடு திரும்பித் தனது தாயிடம் நடந்தவற்றைக் கூறியுள்ளார்.

தாயோ சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்ப்பதை உணர்ந்துகொண்ட சமூக நலன் விரும்பி ஒருவர் 1929 என்னும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல் வழங்கியதன் அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

(த-102)

## குருநகர் வைத்தியசாலை முன்பாக பஸ் தரிப்பிடம்

குருநகர், செப்.25

குருநகர் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள அரச காணியில் பொதுமக்களின் நன்மை கருதி பஸ் தரிப்பிடம் அமைக்கும் நடவடிக்கை குருநகர் சென்.றோக்ஸ் கல்வி கலாசார அபிவிருத்தி மையத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் தரிப்பிடம் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக முன்னாள் தலைவரும் சமூக ஆர்வலருமான அமரர் மாணிக்கம் அருளானந்தம் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் வழங்கப்பட்ட நிதி உதவி மூலம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு குருநகர் சென். றோக்ஸ் கல்வி கலாசார அபிவிருத்தி மையத்தின் தலைவர் எஸ்.பி. பீற்றர் போல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மரியன்னை பேராலயத்தின் உதவிப் பங்குத்தந்தை வண. பிதா வரதன் குரூஸ் அடிகளார் பிரதம விருந்தினராகவும், குருநகர் பிரதேச வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். விமலேந்திரன், ஜே/68 றெக்கிளமோசன் கிழக்கு கிராம உத்தியோகத்தர் கே. நித்தியானந்தன் ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகவும் கலந்து கொண்டு அடிக்கற்களை நட்டினார்கள்.

(த-(51)

# மஹிந்த சிந்தனை பெரு வெற்றி

## ஐ.நாவில் ஜனாதிபதி பெருமிதம்

ஜெனிவா, செப் 25
காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு இலங்கையில் மஹிந்த சிந்தனையானது பெரும் வெற்றிகண்டுள்ளது. இந்த சிந்தனை மூலம், கடந்த எட்டு வருடங்களில் தனது தனிநபர் வருமானத்தை இலங்கை மூன்று மடங்காக்கியுள்ள அதேநேரத்தில் தனிநபர் காபன் வெளியேற்றத்தை ஒரு மெற்றிக்தொன் ஆகவே பேணி வருகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற காலநிலை உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்தலை வருமாறு:-

மஹிந்த சிந்தனையில் காட்டுப் பரம்பலை அதிகரித்தல்; கடலோரத்தைப் பாதுகாப்பதற்காக முகத்துவாரங்கள், கடலோரிகள், கண்டல்கள், உவர் சதுப்பு நிலங்கள், மணற் குன்றுகள், கடற்கரைகள், புற் படுக்கைகள் ஆகியவற்றினைப் புனரமைத்தலும், மீளமைத்தலும், பசுமைப் போக்குவரத்து அமைப்பு மற்றும் எரிபொருள், தரமான வீதி வரை படத்தினையும், நீர் கிடைக்கப்பெறலையும், அதனைத் தக்கவைத்துக் கொள்வதையும் அதிகரிப்பதற்காக பல் வள ஓடைவடிகால் முகாமைத்துவத்தையும் அமுல்படுத்துதல் ஆகிய உபா யங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பூமியும், அதன் தாவரங்களும் ஆள்பவர்களுக்குச் சொந்தமானவையல்ல என்பதோடு, எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காக அவற்றைப் பாதுகாக்க வேண்டிய தற்காலிக அறங்காவலர்கள் மாத்திரமே அவர்கள் என்று கௌதம புத்தரின் சீடரான அரஹாத் மஹிந்தவினால் போதிக்கப்பட்ட கௌதம புத்தரின் தத்துவத்திலிருந்து இலங்கைத் தலைவர்கள் உந்துசக்தியைப் பெற்றுக்கொண்டுவந்தார்கள்.



பூகோள சுற்றுச்சூழலின் நிலை தற்போது அதிக கவனமெடுக்கப்பட வேண்டியதாக உள்ளது. காலநிலை மாற்றத்தால் முன்வைக்கப்படும் ஆபத்து என்பது நடப்பு அவசர நிலையாகும். எங்களது சவால் பொதுவானதென்பதோடு, அது இணைந்ததாகவும், பல் பரிமாணங்களிலும் எதிர்கொள்ளப்பட வேண்டும். பூகோளத் தூண்டல்களை எதிர்கொள்வதற்கான அரசாங்கங்களுக்கிடையிலான பிரதான மன்றமாக காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் திட்டவரைவு மாநாடு காணப்படுகிறது. தீர்வுகளைத் தேடுவதற்கான எங்கள் தேடல்களை நேர்மை மற்றும் பொதுவான தன்மை - ஆனால் வித்தியாசப்படுத்தப்பட்ட பொறுப்புக்களும், குறிப்பிட்டளவு திறன்களுமான கொள்கைகள் வழிப்படுத்த வேண்டும். பச்சைய வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான தூய்மையான அபிவிருத்திப் பொறிமுறை தவிர்க்கமுடியாததாகும். நிதி உதவிகள், தொழிநுட்ப அபிவிருத்தி மற்றும் பரிமாற்றம், திறன் உருவாக்கம் ஆகியவற்றை அபிவிருத்தியடைந்து வருவனவற்றிற்கு வழங்குவதனூடாக அபிவிருத்தியடைந்த நாடுகள் தங்கள் அர்ப்பணிப்பை நடை முறைப்படுத்தவேண்டும். உத் தேசிக்கப்பட்டுள்ள தேசிய ரீதியிலான உறுதியான பங்களிப்புக்களுக்கான உள்ளுர் தயார்படுத்தல்களை மாநாட்டின் அனைத்துத் தரப்பினரும் விரைவுபடுத்த வேண்டும். - என்றார். (த)

## தோட்டத் தொழிலாளரின் வாக்கு ஐ.தே.கவுக்குக் கிடைக்கவில்லை

*தோல்விக்கு இதுதான் காரணம் என்கிறார் ஹரின்*

"தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற தவறியமையே ஊவாமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அடைந்த தோல்விக்கு பிரதான காரணம்" என ஊவா மாகாண சபைத் தேர்தலில் அதி கூடிய வாக்குகளைப் பெற்றவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப் பினருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், ஊவாவில் அரசு பெற்றுக் கொண்டமையானது கசப்பானதோர் வெற்றியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை வரலாற்றிலேயே அரசை விட எதிர்க்கட்சிகளின் பலம் ஓங்கிய தேர்தலாகவே இந்த ஊவா மாகாணசபைத் தேர்தல் கருதப்படுகின்றது. முக்கியமாக பதுளை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அரசு 47.3 வீத வாக்குகளையும் ஐக்கிய தேசியக் கட்சி 45.2 வீத வாக்குகளையும் ஜே.வி.பி 4.7 வீத வாக்குகளையும் பெற்றுள்ளன. இதில், எதிர்க்கட்சிகளின் வாக்கு வீதமானது அரசை விட அதிகமாகவே காணப்படுகின்றது. பதுளை மாவட்டத்தில் ஐக்கிய தேசிக் கட்சிக்கு சுமார் 11 ஆயிரம் வாக்குகளினாலேயே தோல்வி ஏற்பட்டுள்ளது என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும்.

மேலும், இலங்கை வரலாற்றிலேயே முதன்முறையாக 77 வீத வாக்குகள் பதுளை தொகுதியில் பதிவாகியுள்ளன. இதனை நாம் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை. ஆகவே, இத்தோல்வியை நாம் ஒரு 'இழப்பாகக்' கருதப்போவதில்லை" என்றார்.

## இராணுவ சித்திரவதைக்கான ஆதாரங்கள் இருந்தும் இலங்கைத் தமிழர்களை நாடு கடத்துகிறது பிரிட்டன்

கொழும்பு, செப்.25
விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப் படுபவர்களைஇலங்கைஇராணுவத்தினர் திட்டமிட்ட ரீதியில் சித்திரவதைக்குட் படுத்துகின்றனர் என்பதற்கான உறுதியான ஆதாரங்கள் உள்ள போதிலும் பிரிட்டன், அரசியல் தஞ்சம் கோரும் தமிழர்களை நாடு கடத்தி வருகின்றது என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

'சித்திரவதையிலிருந்து விடுதலை' என்ற அமைப்பு ஐ.நாவின் மனித உரிமை ஆணைக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் இலங்கையிலிருந்து தப்பி வந்து வெளிநாடுகளில் தஞ்சம் கோரிய வர்களிடையே மேற்கொண்ட மருத் துவ ஆய்வுகளின்போது சித்திரவதைகளும், பாலியல் துன்புறுத்தல்களும் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் வெளிவந்துள்ளன என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனிலிருந்து இலங்கையிலுள்ள தங்கள் குடும்பத்தவர்களைப் பார்க்கச்சென்ற பலர் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெருமளவானவர்கள் பிரிட்டனில் தற்போது வாழ்கின்றனர். இவ்வாறு உறுதியான ஆதாரங்கள் உள்ள போதிலும் பலரை பிரிட்டனின் உள்துறை அமைச்சு தொடர்ந்தும் நாடுகடத்தி வருகின்றது எனக் குறிப்பிட்ட அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இதேவேளை, 'இந்தக் குற்றச் சாட்டுக்குப் பதிலளித்துள்ள பிரிட்டனின் உள்துறை அமைச்சு, குறிப்பிட்ட ஒருவருக்கு அடைக்கலம் வழங்க வேண்டிய தேவையில்லை என உறுதிப்படுத்திய பின்னரே அவரை நாடுகடத்துவதாகக் குறிப்பிட்டுள்ளது.

## பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவி குறைக்கப்பட்டு இடமாற்றம்

கொழும்பு, செப்.25
பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.ஜே. கருணாசேன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவி குறைக்கப்பட்டு கொழும்பு, பம்பலப் பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகருமான அஜித் ரோஹண நேற்றுத் தெரிவித்தார்.

ஊவா மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் முறைப்பாடு மேற் கொள்வதற்காக வந்த இரு குழுக்கள் கடந்த 20ஆம் திகதி பொலிஸ் நிலையத்துக்குள் கைகலப்பில் ஈடுபட்ட நிலை யில், அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளாத குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் பதவி குறைக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.






### பத்திரிகை முகவர்கள் தேவை

உதயன் பத்திரிகைக்கு பின்வரும் இடங்களுக்கு பத்திரிகை முகவர்கள் தேவைப்படுகின்றனர்



- தண்ணீரூற்று
- நெடுங்கேணி
- பரந்தன் சந்தி
- கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய சூழல்

உங்கள் விண்ணப்பத்தினை கீழ்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.
sales@uthayan.com
021 567 4433

(C15953)(10)

### மரண அறிவித்தல்

**திருமதி தெய்வானைப்பிள்ளை கணேசபிள்ளை**



காரைநகர், ஆயிலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை கணேசபிள்ளை 23,09.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-கணேசபிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற யோகேஸ்வரி, சண்முகராசா (இத்தாலி), யோகராசா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகநாதன் (LP), சாந்தகுமார் (லண்டன்),ராஜேஸ்வரி(லண்டன்), சிவறஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பாக்கியம், சபாரத்தினம் மற்றும் சவுந்தரம் ஆகியோரின் மைத்துனியும்,அருந்தவநாயகி, தர்சினி, சிவமைந்தன், சுதாகரன், செந்தூரன், ஐங்கரன், மதுஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.09.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயிலி, காரைநகர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 667 6448 / 077 445 8492

### மரண அறிவித்தல்

**கிருஸ்ணசாமி சிவபாதரத்தினம்**



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சிவபாதரத்தினம் நேற்று (24.09.2014) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணசாமி- அஞ்சுகம் தம்பதியரின் ஏகபுதல்வனும், வள்ளிநாயகியின் அன்புக் கணவனும், நீலாம்பாள், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசாமி (Londan), சிவகாமி(France),சிவசிவா (உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி), சிவமயம் (Canada) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வனஜா, இதயமூர்த்தி, பத்மலோசினி (ஆசிரியர் யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), புஸ்பாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவனயன் (Londan), சிவோயன்(Londan), சினோயன் (Londan), ஆரோகணா (France), வர்மன்(France), வாசகி(France), சிவோதயன் (மாணவன், யா/மகாஜனாக் கல்லூரி,தெல்லிப்பளை), சிவேதன் (மாணவன், யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை), சிவனுஜா (மாணவி, யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை), சிவரிசி (Canada), சிந்தூரி(Canada) ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் நடைபெற்று அவரது உடல் யாழ்/பல்கலைகழக மருத்துவ பீடத்திற்கு 24.09.2014 பி.ப 4.00 மணியளவில் தானமாக வழங்கப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவசிவா (மகன்)
பிள்ளையார் இல்லம்,
அளவெட்டி வடக்கு.

உதவிக்கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.

(C/15958)
(10)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.